20 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 29, Mississauga
416.321.6969 / 905.712.2666

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 20 பாலம் 21 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் NOVEMBER 01, 2010

# ரொறொன்ரோ நகர முதல்வர் - றொப் போர்ட்



நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் ரொறொன்ரோ மாநகர முதல்வரிற்கான தேர்தல் கடந்த ஒக்ரோபர் 25, 2010 அன்று நடைபெற்றது. இதில் 40 பேர் போட்டியிட்டார்கள். இருந்தபோதிலும் முதல் மூவரிற்குமே போட்டி நிலவியது. மாநகரசபை தேர்தல் கட்சியின் சார்பில் நடைபெறுவதில்லை, ஆயினும் ஏதோ ஒரு வகையில் இவர்கள் ஒரு கட்சியை சார்ந்தே இருப்பார்கள் என்பது உண்மை. இம்முறை தேர்தலில் முன்னணியிலிருந்த முதல் மூன்று போட்டியாளர்கள் முறையே றொப் போர்ட், ஜோர்ஜ் சிமிதமன் மற்றும் ஜோர்ஜ் பந்தலோன்.

கனடாவின் பெரிய நகரமாகிய ரொறொன்ரோவின் மக்கள் தொகை ஏறத்தாழ 2.5 மில்லியன். இதில் கிட்டத்தட்ட 1.5 மில்லியன் மக்கள் வாக்குகளை (Votes) பதிவு செய்வதற்கு தகுதி பெற்றிருந்தார்கள். இத்தொகையின் 52.6% ஆனவர்களே தமது பதிவு செய்திருந்தார்கள். இது முந்தைய காலங்களை விட அதிகமானது. 2006 ஆம் ஆண்டு 39.3%, 2003 ஆம் ஆண்டு 38.3%, 2000 ஆம் ஆண்டு 36.1% ஆகவும் வாக்கு பதிவுகள் இருந்தன. இம்முறை முதல் மூன்று வேட்பாளர்களும் முறையே 383,501, 289,832 மற்றும் 95,482 ஆகிய வாக்குகளை பெற்றிருந்தார்கள்.

எதிர்வரும் நாலு வருடங்களிற்கு நகர முதல்வராக இருக்கப்போகும் றொப் போர்ட் டிசம்பர் 01, 2010 இல் தனது பதவியை ஏற்க உள்ளார். அத்துடன் 44 நகரசபை அங்கத்தவர்களும் இதே நாளில் தமது பதவியை ஏற்பார்கள். குறிப்பிட்ட சில கொள்கைகளை வைத்து வெற்றி பெற்றிருக்கும் றொப் போர்ட் தம்மால் முன்வைத்த வாக்குறுதிளை நிறைவேற்று வாரா என்பதே இன்றைய கேள்வியாகும். அடுத்து வரும் 4 வருடங்கள் இதற்குரிய பதிலை தரும்.

இவர் முன்வைத்த தேர்தல் வாக்குறுதிகளில் முக்கியமான சில: வாகனப்பதிவுத் தொகையை ($60) முற்றாக நீக்குதல், ரொறொன்ரோ பகுதியில் கைமாறும் ஆதனத்திற்கு மேலதிகமான அறவிடப்படும் நிலமாற்றுவரியை நீக்குதல், ரொறொன்ரோ மாநகரத்தில் உள்ள நகர சபை அங்கத்தவர் தொகை 44ஐ 22 ஆகக் குறைத்தல், LRT என அழைக்கப்படும் Light Rapid Transit ஐ நீக்கி நிலக்கீழ் (Subway) ரயில் சேவையை Sheppard தெருவிற்கு கொண்டுவருதல், Street Car ஐ முற்றாக நீக்குதல், மற்றும் நகர சபை அங்கத்தவர் களிற்கு செலவுசெய்யும் செலவுத் தொகையை $20,000 இலிருந்து குறைத்தல்.

மேலும் ரொறொன்ரோ மாநகரத்திலும் மார்க்கம், மிசிசாகா நகரசபை அங்கத்தவர்களிற்கும் பாடசாலை Trustee இற்குமாக 15 தமிழர் இத்தேர்தலில் போட்டியிட்டு இருந்தார்கள். இதில் லோகன் கணபதி மார்க்கம் நகரசபை அங்கத்தவராகவும் யுனிற்றா நாதன் மற்றும் பாடசாலை Trustee ஆகவும் தெரிவு

தொடர்ச்சி 02ஆம் பக்கம்




RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர் (Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

GSF Golden Store Fixtures
Friend for your Business
905-565-6555
1 877-565-6554
Store Planning, Design & Installation
» Acrylics
» Counter Top Displays
» Gift Bags & Ribbons
» Glass Displays
» Grid Panels & Accessories
» Mannequins
» Pegboard & Accessory
» Racks
» Shopping Cart & Baskets
» Showcases
» Sign & Sign Holders
» Slatwall & Accessories
» Steel Shelving
» Wood Displays
And Much More..........
நீங்கள் புதிதாக ஆரம்பிக்கும் வியாபார நிலையத்தை எங்கள் கைவண்ணத்தால் அழகுற வடிவமைத்து பொருத்துவதுடன், உங்கள் வியாபார நிலையத்துக்குத் தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும் நீங்கள் நாடவேண்டிய தமிழரின் ஒரே ஒரு ஸ்தாபனம்.
355 Admiral Blvd, Unit #5 Mississauga, Ont, L5T2N1
www.goldenstorefixtures.com
sales@goldenstorefixtures.com

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers.
• Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
MONEY TRANSFER
• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# ரொறொன்ரோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி



லோகன் கணபதி



யுனிற்றா நாதன்

செய்யப்பட்டுள்ளார்கள். அனேகமான தமிழ் வேட்பாளர்கள் இரண்டாவது இடத்தில் உள்ளார்கள். இவர்களில் முக்கியமாக பாடசாலை Trustee இற்கு போட்டியிட்ட பார்த்தி கந்தவேள் இரண்டாவதாக வந்ததுடன் குறைந்த வாக்குகளால் வெற்றி பெறாததும் குறிப்பிடத்தக்கது. இனிவரும் காலங்களில் இவர்களிற்கு நல்ல எதிர்காலம் உள்ளது என்பது வெள்ளிடை மலை. எனினும் ஒரே வட்டாரத்தில் ஒன்றிற்கு தமிழர் போட்டியிடுவதனை தவிர்ப்பது நல்லது.

## குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்பு சட்டத்திருத்தம்.

கனேடிய அரசு ஒக்ரோபர் 21ஆம் நாள் குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்பு சட்டத்திற்கு திருத்தமாக Bill C - 49 ஐ நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது. கனேடிய குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்பு சட்டத்திற்கு செய்யப்படும் இத்திருத்தத்தின் மூலம் ஆட்களை சட்டவிரோதமாக கடத்துவது தடுக்கப்படும் என பொதுமக்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சர் Vic Towes கூறினார்.

கனடாவிற்கு அகதிகள் பெருமளவில் தரைமார்க்கமாகவும் ஆகாய விமானமூலமுமே வருகிறார்கள். இச் சட்டதிருத்தத்தின் மூலம் கடல் மார்க்கமாக வரும் மிகக்குறைந்தளவு அகதிகளே பாதிக்கப்படுவார்கள் என ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகை கூறியுள்ளது.

இச்சட்ட திருத்தத்திலுள்ள முக்கிய விடயங்கள்: கனடாவிற்கு சட்டவிரோதமாக வரும் குழுவினர் தகுந்த அடையாளப் படுத்தும் ஆவணங்கள் இல்லாதவிடத்து அல்லது அவர்களை தீவிரவாத இயக்கங்களுடன் சம்பந்தபட்டவர்களோ அல்லது பயங்கர குற்றவாளிகளோ என அமைச்சர் கருதினால் அவர்களை வெளிநாட்டு பிரசைகள் என குறிப்பிட்டு (Designated Foreign National) விசாரணை இல்லாமல் ஒரு வருடகாலம் தடுத்து வைக்கலாம். இவ்வாறு குறிப்பிட்ட வெளிநாட்டு பிரசைகள் அகதியாக ஏற்கப்படும் இடத்து அவர்கள் ஐந்து வருடங்களுக்கு நாட்டின் நிரந்தர வதிவிட உரிமை பெறுவதற்கு (Permenent Residence) அனுமதிக்கப்படமாட்டார்கள். இக்காலப்பகுதியில் இவர்கள் நாட்டைவிட்டு பிரயாணம் செய்யவும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். இந்த ஐந்து வருட காலத்தில் அவர்கள் வந்த நாட்டின் நிலைமை சீரடைந்திருந்தால் அந்த நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படுவார்கள். ஆட்களை சட்ட விரோதமாக கடத்துபவர்களுக்கு அவர்கள் கடத்திக்கொண்டு வந்தவர்களின் எண்ணிக்கையை பொறுத்து தண்டனை வேறுபடும். 50 இற்கு மேற்பட்டவர்களை கடத்தியவர்களுக்கு குறைந்தது 10 வருட சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

லிபரல் கட்சியை சேர்ந்த குடிவரவு பற்றிய பேச்சாளரான Justin Trudeau தெரிவிக்கையில் கப்பலில் வந்திறங்கும் குடிவரவாளர்களில் யார் அகதிகள் யார் ஆட்களைக்கடத்திக் கொண்டு வருபவர்கள் என அடையாளம் காணமுடியாது. பெரும்பாலும் ஆட்களை கடத்துபவர்கள் அக்கப்பலில் வரமாட்டார்கள். இதனால் இச்சட்டமூலம் ஆட்களை கடத்துபவரை தண்டிக்கமாட்டாது, மற்றும் பிரயோசனம் அற்றது என்றார்.

புதிய ஜனநாயகக் கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் Olivia Chow தெரிவிக்கையில் அரசிடம் போதியளவு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இல்லை. இதனால் இச்சட்டமூலத்தை அமல்படுத்தி ஆட்களை கடத்துபவர்களை கண்டுபிடிக்க வோ தண்டிக்கவோ முடியாது என்றார்.

குடிவரவு சட்டத்தரணி Lorne Waldman இச்சட்டமூலம் பற்றி தெரிவிக்கையில் இது ஆட்களை கடத்துவோரை தடுக்கும் என்று கூற இயலாது. இச்சட்டமூலத்திற்கான திருத்தம் ஆட்களை கடத்துவோருக்கு உரிய குறைந்தபட்ச சிறைத்தண்டனைக் காலத்தை வரையறுத்துள்ளது. இதைவிட வேறு ஒரு பெரிய தண்டனையையோ, மாற்றத்தையோ இது கொண்டு வரவில்லை. ஆனால் இச்சட்டமூல திருத்தமோ இவ்வாறு வரும் அகதிகளை தண்டிப்பதாகவேயுள்ளது என்றார். கனேடிய மனித உரிமைகள் சாசன விதிகளின்படி குற்றம் சாட்டப்பட்டு தண்டனை வழங்கப்படாத ஒருவரை காலவரையறை இன்றி ஒரு வருடகாலம் வரை தடுத்து வைக்கமுடியாது. இதனால் இச்சட்டமூலத்திருத்தத்தின் அடுத்த வாசிப்பின் போது மற்றைய கட்சிகள் திருத்தத்தை சமர்ப்பிக்கலாம் என தான் எதிர்பார்ப்பதாக Lorne waldman தெரிவித்தார்.

## தாய்லாந்தில் மேலும் 61 குடிவரவாளர்கள்

பாங்கொக் தாய்லாந்தில் ஒக்ரோபர் 12ந் திகதி 155 தமிழ் குடிவரவாளர்கள் கைது செய்யப்பட்டது தெரிந்ததே. ஒக்ரோபர் 29ந் திகதி மேலதிகமாக 114 குடிவரவாளர்கள் தாய்லாந்தின் தென் மாநிலமான சொங்லாவில் கைது செய்யப்பட்டார்கள். அதை தொடர்ந்து ஒக்ரோபர் 30ந் திகதியும் மேலும் 61 குடிவரவாளர்கள் தாய்லாந்தின் தென் மாநிலமான சொங்லாவிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சொங்லா மாநிலமே ஆழ்கடலிற்கு முந்திய தொடுபுள்ளியாகவும் துறைமுக நகராகவும் உள்ள காரணத்தினால் இங்கு தங்கியிருப்போர் ஆழ்கடலினூடாக மூன்றாம் நாடொன்றிற்கு பயணமாவதற்குத் தங்கியிருந்ததாக நம்பப்படுகிறது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த சொங்லா மாநில குடிவரவுத்துறை காவலதிகாரி கேணல் புத்திபொங் முசுகுல் இவர்கள் விசா காலாவதியான நிலையில் தங்கியிருத்தல், முறையற்ற அனுமதியில்லாமல் பிரவேசித்தமை போன்ற குற்றங்களிற்காக கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் தகுந்த அடையாள ஆவணங்களை மற்றும் விசாவை வைத்திருந்தவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். இதுவரை கைது செய்யப்பட்ட மொத்தம் 330 குடிவரவாளர்களில் விடுவிக்கப்பட்டவர்கள் போக மீதியாக 300 பேர் வரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## பிறேசிலில் முதலாவது பெண் அதிபர் தெரிவு



ஆளும்கட்சியைச் சேர்ந்த வேட்பாளரான டில்மா றௌஸ்செவ் (Dilma Rousseff) பிறேசிலின் அதிபராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அந்நாட்டின் மக்களின் செல்வாக்கைப்பெற்ற பிரபல அதிபரான லூயிஸ் இனாசியோ லூலா த சில்வா (Luiz Inacio Lula ta Silva) இனைத் தொடர்ந்து டில்மா கடந்த ஞாயிறு நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்றுள்ளார். இவர் ஜனவரி 01, 2011 அன்று பிரேசில் நாட்டின் தெரிவுசெய்யபட்ட முதலாவது பெண் அதிபராக பதவியேற்கிறார். 62 வயதான டில்மா ஒரு அரசாங்க ஊழியராவர்.

டில்மா, பிறேசிலின் தலைநகரான Rio de Janeiro இற்கு வடக்கேயுள்ள Belo Horizonte என்ற இடத்தில் 1947ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தாயார் பண்ணைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பாடசாலை ஆசிரியராவார். இவரின் தகப்பனார் Pedro Rousseff பல்கேரியா நாட்டிலிருந்து அரசியல் காரணங்களுக்காக நாட்டைவிட்டு வெளியேறி பிறேசிலில் குடியேறியவர். இவர் ஒரு பிரபல வர்த்தகர் ஆவார்.



## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram Publications, 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: vlambaram.com

விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

## வாசகர் எண்ணம்

மதிப்புக்குரிய KG Master அவர்களுக்கு,
"ஓடும் நீர் உறைவதில்லை" என்னும் அருமையான கட்டுரைத்தொடர் "Vlambaram " பத்திரிகையில் தொடர்ந்து வாசித்து வருகின்றேன். அருமை. மிகவும் பயன் நிறைந்தவை. "ஓடும் நீர் உறைவதில்லை" என்னும் தொடருக்கு பல கருத்துக்கள் எடுக்கலாம். அருமையான தலைப்பு. யந்திர வாழ்க்கை இத்தகைய கட்டுரைகள் மூலம் மெல்ல மாறட்டும். இன்னும் நிறைய கட்டுரைகள் வெளிவர எனது பாராட்டுக்கள். நல்லது வாழ பாராட்டுக்கள் மிகவும் அவசியம்.

நன்றி.
உண்மையுள்ள,
ரஞ்சி கதிர்.

# வாழத்துடிக்கும் வன்னி

## - ஒரு நேரடி ரிப்போர்ட் பாகம் 9

- செல்வரட்ணம் சிறிதரன் -

தேறாங்கண்டலில் இருந்து உயிலங்குளத்திற்குச் சென்றது நாடாளுமன்றக் குழு. குளத்தோரத்தில் ஒரு முருகன் கோவில் அது சிதைந்து கிடந்தது. இந்தக் கோவிலைத் திருத்தித் தரவேண்டும் என அங்கிருந்தவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

முருகேசு தனபாலசிங்கம் உயிலங்குளத்தைச் சேர்ந்தவர். அவருக்கு 59 வயது. மூச்சு எடுக்க முடியாமல் ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

"மே மாதம் 16 ஆம் திகதி நாங்கள் முள்ளிவாய்க்காலில் இருந்து இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரேக்குள்ள என்ர இரண்டு மகன்மார்களை தவறவிட்டிட்டோம். மூத்த மகன் கந்தவேள் 22 வயது. இரண்டாவது மகன் தனுஷன் வயது 19. இரண்டு பேருக்கும் என்ன நடந்தது எங்க இருக்கிறாங்கள் எண்டு இன்னும் தெரியேல்ல. தேடாத இடமில்ல. சொல்லாத ஆட்களில்லை. ஐசிஆர்சி, யுஎன்எச்சிஆர், விதானை யார் என்று எங்களுக்குத் தெரிந்த எல்லாரிட்டயும் சொல்லி கேட்டுப்பாத்திட்டம். இன்னும் ஒண்டுமே தெரியவில்லை. இவர்களைக் கண்டு பிடித்துத் தாங்களேன்" என உருக்கமாக வேண்டிக்கொண்டார் தனபாலசிங்கம்.

இரண்டு பிள்ளைகளின் அடையாள அட்டைகளையும் கையில் அவர் வைத்திருந்தார். ஜனாதிபதிக்கு சிங்களத்தில் யாரோ எழுதிக் கொடுத்திருந்த விண்ணப்ப கடிதத்தையும் அவர் தன்னுடன் கொண்டு வந்திருந்தார். அந்த விண்ணப்பத்தை யார் மூலம் எப்படி ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பது என்பது தெரியாத நிலையில் அவர் தடுமாறிக்கொண்டிருந்தார். இப்படி எத்தனை அப்பாவிப் பெற்றார்கள் தமது பிள்ளைகளைத் தவறவிட்டு விட்டு, தடுமாறிக் கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை.

தென்னியன்குளம் பகுதியில் உள்ள குளத்திற்கு கிராமவாசிகள் போக முடியாத நிலை. அங்கு இராணுவம் முகாம் அமைத்து நிலைகொண்டிருப்பதாக ஊர்வாசிகள் தெரிவித்தனர். குளத்துப்பக்கம் சென்றால் இங்கு வரவேண்டாம் என இராணுவம் தங்களைத் துரத்துவதாக அவர்கள் கூறினார்கள். குளத்திற்குச் செல்ல முடியாத நிலையில் காணிகளில் விவசாயம் எப்படி செய்வது? இதற்கு ஒரு வழி செய்ய முடியாதா என்றும் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வினவினார்கள்.

உயிலங்குளம் பகுதியில் இருந்து திரும்பிய போது மல்லாவியில் சில முக்கியஸ்தர்கள் சிலர் மல்லாவி நகரத்து நிலைமைகள் பற்றி எடுத்துக் கூறினார்கள்.

"நகரமே அழிந்து விட்டது. எதுவுமே எங்களிடம் இல்லை. கடன் பெற்றுத்தான் இப்போ சிறிய அளவில் கடைகளை ஆரம்பித்திருக்கிறோம். அழிந்த கடைகளுக்கு நட்டயீடு பெற்றுத் தர வேண்டும். நாங்கள் இழந்துள்ள பெறுமதியான பொருட்கள், வாகனங்கள் போன்றவற்றிற்கும் நட்டயீடு வேண்டும் என அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.



மல்லாவி நகரத்தில் பஸ் நிலையம் ஒன்றில்லாமல் மக்கள் கஸ்டப்படுகின்றார்கள். பஸ் நிலையத்திற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் பொலிஸ் நிலையத்தை அமைக்கப் போகிறார்களாம். அந்த இடம் நகர மத்தியில் இருந்தது. அது பஸ் நிலையத்திற்குத்தான் பொருத்தம். ஆகவே அந்த இடத்தில் பஸ் நிலையத்தை அமைப்பதற்கு உரிய அதிகாரிகளிடம் பேசி நடவடிக்கை எடுத்தால் உதவியாக இருக்கும் என்றும் மல்லாவியைச் சேர்ந்த வர்த்தகர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டார்கள்.

யுத்த மோதல்களில் சிக்கியும், ஷெல் வீச்சுக்கள், விமானக்குண்டுத் தாக்குதல்கள் என்பவற்றாலும் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் இறந்து போனார்கள். இதே போல பெரும் எண்ணிக்கையானவர்கள் படுகாயமடைந்தார்கள். கைகளை இழந்தவர்கள், கால்களை இழந்தவர்கள், கண்களை இழந்தவர்கள், போர்க்காயங்கள் காரணமாக முண்ணானில் (Spinal cord) பாதிப்பு ஏற்பட்டு, அவயவங்கள் மற்றும் உடலின் பெரும்பகுதி உணர்வற்று செயலிழந்தவர்கள் என உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகம். இந்த எண்ணிக்கைகள் குறித்து சரியான அல்லது அதிகாரபூர்வமான கணிப்பீடுகள் இன்னும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

யுத்தம் முடிந்து ஒரு வருடத்திற்கும் மேலாகிய நிலையிலும், இவ்வாறு படுகாயமடைந்த பலர் இன்னும் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். றாகம, கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய முக்கிய மருத்துவமனைகளில் இவர்களில் சிலருக்கு சிகிச்சையளிக்கப்படுகின்றது. இவர்கள் அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களாகவும் அல்லது வெளியில் இருந்து அங்கு கிரமமாக வைத்திய கண்காணிப்பிற்காகச் செல்ல வேண்டியவர்களாகவும் இருக்கின்றார்கள். வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற வைத்தியசாலைகளின் நரம்புத் தொகுதி எலும்புத் தொகுதி போன்ற விசேட வைத்திய கிளினிக்குகளில் பலர் சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

படுகாயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை முடிந்த பலர் மீள்குடியேற்றத்திற்காக தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பியிருக்கின்றார்கள். யுத்தத்தினால் ஊனமுற்றவர்கள் இல்லாத கிராமமே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். வைரமுத்து விநாயக மூர்த்தி புத்துவெட்டுவான் ஐயங்கன் குளத்தைச் சேர்ந்தவர். அவருக்கு வயது 30. இடது காலை ஷெல்லுக்குப் பறிகொடுத்தவர். ஒரு குழந்தையின் தந்தை.

"இடம்பெயர்ந்து போய் புதுமாத்தளனில் இருந்தோம். வீடு வசதியில்லை. கொட்டில் ஒண்டில நாங்கள் 3 குடும்பங்கள் படுத்திருந்தம். திடீரென ஷெல் வரத்தொடங்கிற்று. நாங்கள் இருந்த இடத்தைச் சுற்றிலும் தூரத்தில் ஒன்றிரண்டு முதலில் விழுந்தது. என்ன செய்யிறது எண்டு யோசிக்கிறதுக்கிடையில ஒரு ஷெல் நாங்கள் இருந்த இடத்தில வந்து விழுந்தது. எங்களில 6 பேர் அந்த இடத்திலேயே செத்துப்போனார்கள். எனக்கு ஷெல் துண்டு பறந்து வந்து வெட்டினதில கால் போயிற்று. மனிசியும் குழந்தையும் தப்பினது தெய்வ புண்ணியந்தான். சின்னக் காயம் கூட இல்லை. இன்னும் மூன்று நாலு பேருக்குக் காயம். கால் புண்ணெல்லாம் ஆறிய பிறகு பொய்க்காலுக்கு வசதியில்லை. ஒண்டு ரெண்டுபேர் உதவி செய்தாங்கள். மிச்சத்திற்கு கடன்பட்டுத்தான் பொய்க்கால் வாங்கிப் போட்டிருக்கிறன். இப்ப உழைக்கவும் ஏலாது. உழைப்புக்கும் வசதியில்லை. என்ன செய்யிறது?" என தனது நிலைமையை விளக்கினார் விநாயகமூர்த்தி.

சென்ற இடங்களில் எல்லாம் சேதங்கள்தான். ஊர்களுக்கும் சேதம். ஊர் மக்களுக்கும் சேதம். உயிரிழப்புக்கள், உடைமை இழப்புக்கள் அதுவும் ஒருபக்கம். யுத்தத்தினால் பெரும் எண்ணிக்கையானவர்கள் ஊனமுற்றிருந்தது போலவே வன்னிப்பிரதேசத்தின் கிராமங்களும் ஊனமுற்றுக்கிடக்கின்றன. ஊர்களுக்கே உரிய சீரில்லை. செழுமையைக் காணவில்லை. வயல்கள் வரண்டு கிடந்தன. காணிகள் காடுகளாகியிருந்தன. வீடுகள் கட்டிடங்கள் உடைந்து கிடந்தன. பிரதேசங்கள் பாழடைந்திருந்தன. சேதங்களும், பாதிப்புகளும் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் விகாரமாக இருந்தது. மனதில் வேதனையையும் துயரத்தையும் கூட்டியது.

ஐயங்கன்குளம் பாடசாலை உடைந்து கிடந்தது. சுவர்களில் எல்லாம் யுத்த மோதல்கள் தாக்குதல்களின் அடையாளங்களாக ஓட்டைகளும், சிதைவுகளும் தெரிந்தன. பாடசாலையின் சீமெந்து நிலம் கூட உடைந்து கிடந்தது. சில இடங்களை சாணம் கொண்டு மெழுகியிருந்தார்கள். அங்குதான் அந்த ஊர் மக்களுடனான சந்திப்பு நடந்தது.

இந்தக் கிராமத்தில் சுமார் 200 குடும்பங்கள். நூற்றி நாற்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள்தான் சொந்த இடங்களுக்குத் திரும்பியிருக்கின்றார்கள். மிகுதி இன்னும் வரவில்லை. இரண்டு தொகதியாக இந்தக் கிராமத்திற்கு குடும்பங்களை அழைத்து வந்துள்ளார்கள். முதலில் 100 குடும்பங்கள். இரண்டாம் தொகுதியில் எஞ்சிய குடும்பங்கள் வந்தன. முதலில் வந்த குடும்பங்களுக்கு ஒரு ஏக்கர் வீதம் பங்கீட்டு அடிப்படையில் ஊர் விவசாய காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு,

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL

# அன்பினும் பெரியது ஆனந்தம்



## சத்குரு வாசுதேவ்

ஆனந்தத்தை உணர்ந்த மனிதன், அன்புக்கு ஏங்கமாட்டான். ஆனந்தத்தை இழந்தவர்களும், ஆனந்தம் என்னவென்று உணராதவர்களுமே அன்புக்கு ஏங்குகிறார்கள். அன்பு குறித்துப் பேசுகிறார்கள். அன்பு என்பது ஓர் உணர்வு. எந்த உணர்வும் ஒரு வாகனமாக இருக்க முடியுமே தவிர, அதுவே சென்று சேரும் இடமாகாது.

ஏதேனும் ஒன்றுடன் அல்லது யாராவது ஒருவருடன் ஒன்றிட வேண்டுமென்ற ஏக்கமே அன்பு. இந்த ஏக்கம் நிரந்தரமானது. ஆனால் ஒன்றுதல் நிகழ்வதில்லை. ஓர் எல்லை வரையில் ஏக்கம் அழகானதுதான். அதுவே நீண்ட காலம் தொடர்ந்தால் வலியாக மாறிவிடும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.ort / www.ishayoga.org

ஆனந்தத்தை அடைவதற்காக சிலர் அன்பு என்கிற வாகனத்தில் ஏறுகிறார்கள். சில நேரங்களில் அந்த வாகனம் ஆனந்தத்தின் எல்லைக் கோடுகளைத் தொடுகிறது. எனவே, அது ஆனந்தம் நோக்கி அழைத்துச் செல்லும் என்று காத்திருக்கிறார்கள். காலப்போக்கில் அந்தக் காத்திருப்பு ஆனந்தத்தைத் தருவதில்லை. அவஸ்தையைத்தான் தருகிறது. அப்படியானால், உலகின் பல்வேறு சமயங்களுமே ஆனந்தம் குறித்துப் பேசாமல் அன்பு குறித்தே எப்போதும் பேசியது ஏன் என்கிற கேள்வி உங்களுக்கு எழலாம். அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று மிக ஆழமான புரிதலோடு சிலர் பேசியிருப்பார்கள். அல்லது அறியாமையிலுள்ள சிலர் பேசியிருப்பார்கள். ஆழ்ந்த புரிதலோடு பேசியவர்களின் பார்வையில் அன்பு என்பது சென்றடைய வேண்டிய இடத்திற்குக் கொண்டு செல்கிற வாகனம் என்பது உண்மையாக இருக்கும். அவர்கள் கடவுளையும் கூட ஆனந்தத்தை நோக்கி அழைத்துச் செல்கிற வாகனமாக மட்டுமே பார்த்திருப்பார்கள். எனவே அன்பும், கடவுளும் ஒன்று என்று சொல்லியிருப்பார்கள். ஆனால், கடவுள்தான் சென்றடைய வேண்டிய கடைசி இடம் என்று கருதுபவர்களிடம் "அன்பே கடவுள்" என்று சொல்வது தவறு. ஏனெனில், அன்பு என்பது, ஒன்றுபடுவதற்கான முயற்சி மட்டும்தான். ஒன்றிவிட்டால் அதை யோகா என்கிறோம். எனவே உங்கள் உடலைப் போல உங்கள் எண்ணங்களைப் போல, உணர்வும் இன்னொரு வாகனம் தான்.

அன்பு பற்றிப் பலர் அதிகம் பேசுவதற்குக் காரணமே கூட, அவர்கள் உணர்வு நிலையைத்தான் தீவிரமாக உணர்ந்திருக்கிறார்கள். எண்ணம், உடல், உணர்வு என்கிற மூன்று படிநிலைகளை உலகின் 95% பேர் தாண்டவில்லை என்றே சொல்லலாம். இந்த மூன்றிலும் உணர்வு நிலையை உணர்ந்ததற்குச் சமமாக எண்ணங்களையோ உடலையோ கூட அவர்கள் உணர்ந்ததில்லை.

தங்கள் உடலின் தன்மையை மிகச்சிலர்தான் தீவிரமாக உணர்ந்துள்ளார்கள். அன்பு, வெறுப்பு, அச்சம், கோபம் போன்ற உணர்வுகளைத்தான் பலர் தீவிரமாக உணர்ந்தார்கள். அதனால் தான் பல ஞானிகள், மனிதர்களின் உணர்வையே வாகனமாகப் பயன்படுத்த முடிவு செய்தார்கள். இன்று, நிலையே வேறு. அறிவியல் துறையில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி காரணமாக ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்வும் அறிவியல் தொடர்புள்ள விஷயமாகிவிட்டது. எனவே, இருநூறு முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருப்பதைவிட எண்ணங்கள் மேலும் வலிமையானவையாய் கருதப்படுகின்றன.

உணர்வு ரீதியாக ஒன்றை நீங்கள் உணர்கிறபோது கூட எண்ணங்கள் எழுப்புகிற கேள்விகள் ஏராளம். அவற்றை நீங்கள் எதிர்கொள்வது அவசியம். மனிதர்கள் அப்பாவியாக இருந்தபோது அவர்களை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்ல உணர்வுகள் பயன்பட்டன. இப்போது நவீன மனிதன் உணர்வுகளை விட்டுத் தொலைதூரம் தள்ளி வந்துவிட்டான். அன்பு செலுத்துகிற தகுதியைக் கூட அவன் இழந்துவிட்டான். இந்த நிலை முன்னேற்றத்தைக் குறிக்காது. முட்டாள் தனத்தைத் தான் குறிக்கும். ஏனென்றால் எல்லாவற்றுக்குள்ளும் எண்ணங்கள் புகுந்து, ஏதேதோ கேள்விகளை எழுப்பி அற்புதமான அம்சங்களைக் கூட அபத்தமாக மாற்றிவிடுகிறது.

அன்பு என்பது ஒரு தன்மை. அன்பு நிலையில் நீங்கள் இருந்தால் உங்கள் எல்லா செயல்களிலும் அன்பு வெளிப்படுகிறது. ஆனால் "அன்பு செய்தல்" என்று பலரும் சொல்கிறார்கள். அன்பை உங்களால் உருவாக்க முடியாது. உங்களில் அன்பு நிகழ்வதை நீங்கள் அனுமதித்தால் போதும். உங்கள் தன்மையே அன்பு என்று ஆகிறபோது எதைப் பார்த்தாலும் அவற்றில் அன்பை உணர்வீர்கள்.

அன்பு, தியானம், ஆன்மீகம் இவையெல்லாம் ஒரு தன்மையே தவிர செயல் அல்ல. இதனை உணர்கிறபோது தான் இவையனைத்துமே ஆனந்தத்திற்கான கருவிகள் என்பதை உணர்வீர்கள். அன்பை விடப் பெரியது ஆனந்தம். அன்பின் வழியாக நீங்கள் உணர வேண்டியதும் ஆனந்தம்தான்.

ஆனந்தம் இன்னதென்று நீங்கள் அறியாதபோது எப்படி உணர்த்துவது? என்னை உன்னிப்பாகப் பாருங்கள். என் முகம் தீவிரமாகத் தென்பட்டாலும் கூட, உற்றுப் பார்த்தால் அதில் ஆனந்தம் இருப்பதை உணர முடியும். மிகச்சிலர்தான் அதை உணர்கிறார்கள். மற்றவர்கள் என்னைத் தீவிரமான மனிதனாக மட்டும் உணர்கிறார்கள். என் ஆனந்தம் என் நகைச்சுவையில் இல்லை. எவ்வித சலனமுமின்றி அமர்கிற போது நான் முழுமையான ஆனந்தத்தில் இருக்கிறேன். நான் பல செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும் கூட எல்லா நேரங்களிலும் நான் நிச்சலனத்தில் தான் இருக்கிறேன். என் செயல்கள் என்னை பாதிப்பதே இல்லை.

# போருக்குப் பின்னர்...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

எல்லாம் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டருக் கின்றார்கள். நிலையான இராணுவ முகாம்கள் அங்கு அமைக்கப்பட்டிருக் கின்றன. யுத்தம் நடைபெற்ற காலங்களில் பாதுகாப்பு காரணத்திற்காக சிவிலியன்கள் காடுகளுக்குள் செல்வது தடுக்கப்பட்டிருந் தது. ஆனால் யுத்தம் முடிந்தபின்பும் அந்த நிலைமை இன்னும் நீடிக்கின்றது.

இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வருகின்ற இந்த வேளையில் காணிகளில் சென்று குடியிருப்பதற்கு வீடுகள் இல்லாததனால், தற்காலிகக் கொட்டில்களை அமைத்து அதில் வசிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்கள், காடுகளுக்குள் சென்று மரம் தடிகள் வெட்ட முடியாத நிலைமை நிலவுகின்றது.

நீர்வளம் மிகுந்த முக்கிய நீர்ப்பாசன குளங்களின் அருகில் காட்டுப்பாங்கான பிரதேசங்களில் இராணுவம் பெரும் எண்ணிக்கையில் நிறுத்தப்பட்டுள்ளார்கள். மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள மக்கள் குளிப்பதற்கும், தமது குளங்களில் மீன்பிடிப்பதற்கும் ஏனைய விவசாயத் தேவைகளுக்கும் இந்தக் குளங்களுக்குச் செல்ல முடியாதவாறு அந்தப் பகுதிகள் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

மொத்தத்தில் இராணுவ மயமாகியுள்ள மீள்குடியேற்றப் பிரதேசங்கள், இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. யுத்தம் இல்லாத வேளையில் இத்தகைய இராணுவ ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது. மீள்குடியேறியுள்ள குடியிருப்புப் பகுதிகளில் தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினர் தமது இயல்புக்கு மாறான வகையில் சிவிலியன்களது வாழ்க்கையில் குறுக்கீடு செய்து வருகின்றார்கள்.

கிராமப்புறங்களில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளும் அந்தந்த பிரதேசத்திற்குப் பொறுப்பான இராணுவத்தின ருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்ற நடைமுறை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டம் தொடக்கம் அனைத்து வைபவங்களும் இராணுவத்தினரின் பங்களிப் பின்றியும், அவர்களுக்குத் தெரியாமலும் நடத்த முடியாது.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள குடும்பங்க ளில் ஆண்துணையற்ற பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களுக் கான தற்காலிக வீடமைப்பு உட்பட உழைப்பாளிகள் செய்ய வேண்டிய வேலைகளில் அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்கள். வசதியற்ற குடும்பங்களுக்கு இராணுவத்தினர் உதவி செய்கின்றார்களாம். இப்படித்தான் அரசாங்கம் இதற்குக் காரணம் கூறுகின்றது.

போரினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டு உடைமைகள், உற்றவர்களை இழந்து அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் மீள்குடியேற்றம் என்ற பெயரில் அடிப்படை வசதிகளற்ற நிலையில் கிராமங்களில் கொண்டு சென்று இறக்கப்படுகின்ற இந்தக் குடும்பங்களுக்கு இராணுவத்தினரின் இந்த சரீர உதவிகள் மிகமோசமான அரசியல் உள்நோக்கம் கொண்டதாகவே கருதப்படுகின்றது.

இனப்பிரச்சினையின் அடிப்படையில் பெரும்பான்மையினராகிய சிங்கள இராணுவத்தினருக்கு எதிராக அரசியல் உரிமைகளுக்காக தமிழ் மக்கள் சார்பில் ஆயுதப் போராட்டம் நடத்தப்பட்டது. அந்தப் போராட்டம் கொச்சைப்படுத்தப்பட்டு, பயங்கரவாதம் என வர்ணிக்கப்பட்டு, ஆயுதம் ஏந்தியர்வகளுக்கும், ஆயுதம் ஏந்தாதவர்களுக்கும் எதிராக சகட்டு மேனிக்கு சிங்களவர்கள் மட்டுமே நிறைந்துள்ள படையினரால் இராணுவ நடவடிக்கை ஏவிவிடப்பட்டிருந்தது. அந்த இராணுவ நடவடிக்கையின் போது என்னென்ன நடந்தது என்பது குறித்து சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகப் போர்க்குற்றம் சுமத்தப்பட்டு, அதற்கான விசாரணைகளை நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் சிங்கள இனத்தைச் சேர்ந்த தமிழ் மொழியில் பேச முடியாத அதே இராணுவத்தினர் எந்த வகையில் தமிழ்க் குடும்பங்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் உதவ முடியும் என்பது ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும்.



இலங்கை அரசுகளின் மீது காலம் காலமாகத் தமிழ் மக்கள் சுமத்தி வந்த இன அழிப்பு நடவடிக்கையை மிகவும் நாகரிகமான முறையில் இன்னும் சொல்லப்போனால் ஜனநாயக மனிதாபிமான போர்வையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது என்பதே உண்மையாகும்.

# போருக்குப் பின்னர் ஜனநாயகத்தோல் போர்த்திய இராணுவ ஆட்சி - இது இனஒழிப்பு நடவடிக்கையின் இன்னுமொரு முகமா?

**இலங்கையில் இருந்து மங்களநாதன் அரவிந்தன்**

இலங்கை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நீண்டகால யுத்தம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குடும்பத்தினரால் முன்னெடுக்கப்பட்ட இராணுவ மயமான ஆட்சியின் கீழ் கடந்த வருடம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது,

பல்வேறு துறைகளிலும், பல்வேறு நிலைகளிலும் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த பெரும்பான்மைக் கட்சிகளின் அரசாங்கங்களுக்கு தீராத தலையிடியைக் கொடுத்து வந்த விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என சித்தரித்து, அவர்களை இல்லாதொழித்துவிட்டதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குடும்பத்தினரும், அவரது அரசியல் ஆதரவாளர்களும் பெருமைபேசி வருகின்றார்கள்.

நாட்டில் 30 வருடங்களாக நீடித்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த தேசிய வீரனாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உருவகிக்கப்பட்டுள்ளார். யுத்தம் முடிந்து ஒன்றரை வருடங்களாகின்றன. விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்த வெற்றியைக் கொண்டாடும் மனப்போக்கிலிருந்து மகிந்த ராஜபக்ச குடும்பத்தினர் இன்னும் விடுபடவில்லை.

இந்த வெற்றிப்பெருமிதம் மேலோங்கிய அரசியல் போக்கு இன்னும் பல வருடங்களுக்குத் தொடரக்கூடிய சாத்தியக் கூறுகளும், இராணுவ மயப்படுத்தப்பட்ட புதிய நடைமுறைகளைக் கொண்ட ஒரு சிவில் நிர்வாகத்தையும் முன்னெடுக்கும் போக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குடும்பத்தினர் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றார்கள்.

யுத்தம் முடிவடைந்த பின்னரும், இராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் நடவடிக்கைகளும், பாதுகாப்புச் செலவினங்களை யுத்தகாலத்தைப் போன்று மேலும் உச்சநிலைக்கு உயர்த்திச் செல்லுகின்ற தன்மையும் இதனை உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது.

பதினேழாவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை பதினெட்டாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் வலுவிழக்கச் செய்ததன் ஊடாக மிகவும் வலுவான சர்வ அதிகாரங்களையும் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைக்குள் இலங்கை இப்போது பிரவேசித்திருக்கின்றது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை அதன் பிதாமகனாகிய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன அறிமுகப் படுத்தியிருந்தார். இந்த ஆட்சிமுறையில் ஜனாதிபதி ஜனநாயகக் கட்டுக்கோப்புகளுக்குத் தலைசாய்க்க வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கான சட்டவிதிமுறைகளை அவர் புகுத்தியிருந்தார். அதில் முக்கியமாகக் கருதப்பட்டதும், கருதப்படுவதும் - ஜனாதிபதியாக ஒருவர் தனது வாழ்நாளில் இரண்டு தடவைகள் மாத்திரமே பதவி வகிக்க முடியும் என்ற முக்கியமான அம்சமாகும். அத்துடன் நிறைவேற்று அதிகாரமும், நீதிமன்றத்தின் ஊடாகக் கூட கேள்வி கேட்க முடியாத உச்ச நிலை அதிகாரம் கொண்டவராகவும் ஜனாதிபதி பதவியை ஜே.ஆர்.ஜயவர்தன உருவாக்கியிருந்தார். நீதிச்சேவை, மனித உரிமை விவகாரம், தேர்தல் ஆணையகம், சிவில் நிர்வாகத்திற்கு உறுதுணை புரியும் பொலிஸ் சேவை, போன்ற விசேடமான பிரிவுகளுக்கான ஆணைக்குழுக்கள் அல்லது ஆணையாளர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டிருந்தது.

> “ கிராமப்புறங்களில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளும் அந்தந்த பிரதேசத்திற்குப் பொறுப்பான இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்ற நடைமுறை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டம் தொடக்கம் அனைத்து வைபவங்களும் இராணுவத்தினரின் பங்களிப்பின்றியும், அவர்களுக்குத் தெரியாமலும் நடத்த முடியாது. ”

ஆயினும் பதினெட்டாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் இந்த அதிகாரங்கள் இப்போது ஜனாதிபதியின் வசப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இதனால், ஊடக சுதந்திரம், மனித உரிமையாளர்கள், நீதிச்சேவையாளர்கள் போன்றவர்களின் அரசியல் தலையீடற்ற செயற்பாடுகளுக்கு சாவுமணி அடிக்கப் பட்டுள்ளது. இதேபோன்று விசேட நிலைமைகளில் நியமிக்கப்படுகின்ற விசாரணை ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளும் கூட அரசியல் தலையீட்டு முறைமையின் கீழ் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிப்படையான பார்வையில் ஜனநாயக நடைமுறைக்கமைய மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்ட நாடாக இலங்கை விளங்குவதான ஒரு தோற்றப்பாடு ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. ஆனால் உண்மையில் அது தனிமனித தீர்மானங்களை விருப்பு வெறுப்புக்களை கட்டுப்பாடுகள் எதுவுமற்ற நிலையில் நிறைவேற்றத்தக்க ஜனநாயகப் போர்வையில் ஒளிந்திருக்கின்ற சர்வாதிகார ஆட்சிமுறைக்கே இட்டுச் செல்லப்பட்டிருக்கின்றது.

இந்த ஆட்சி முறையின் கீழ் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் குடும்பத்தினரும், அவருக்கு ஆதரவானவர்களும் அதிகாரம் நிறைந்த அரசாங்க பதவிகளை ஜனநாயக முறை என்ற போர்வையின் கீழ் ஆக்கிரமிப்பதற்கு வழி செய்யப்பட்டிருக்கின்றது. இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நாகரிக காலத்து ராஜ வம்சத்தின் வழியில் வந்தவரைப்போல குடும்ப ஆட்சியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கான வழிகோலப்பட்டுள்ளது. இந்த அதிகாரங்களின் ஊடாக அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு வந்த சிறுபான்மை இனத்தவரின் அரசியல் அபிலாசைகளை நிரந்தரமாகக் குழிதோண்டி புதைக்கும் நடவடிக்கைக்கு நிரந்தரமான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

அரசாங்கத்திற்கு எதிராகவோ, ஜனாதிபதி மற்றும் முக்கிய ஆட்சியளார்களுக்கு எதிராக நாட்டு மக்கள் குரல் எழுப்பவோ ஜனநாயக அடிப்படையில் எதிர்ப்புகளைத் தெரிவிக்கவோ முடியாது. நீதிச்சேவையின் ஊடாகக் கூட அவர்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரி போராட முடியாத நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சகோதரர்களில் ஒருவராகிய கோட்டாபாய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகச் செயற்பட்டு வருகின்றார். முப்படைகளின் தளபதியாகப் பதவி வழியாகத் திகழும் ஜனாதிபதியிலும் பார்க்க பாதுகாப்பு விவகாரங்களிலும், இராணுவச் செயற்பாடுகளிலும் அதிகாரம் மிக்கவராகச் செயற்பட்டு வருகின்றார்.

யுத்த காலத்திற்காகவே முழுமையான இராணுவ பயிற்சி பெற்ற அதிரடிப்படைப் பொலிஸ் அணி நாட்டில் விசேடமாக உருவாக்கப்பட்டிருந்தது. இந்தப் பிரிவு அண்மைக்காலம் வரையில் பொலிஸ் சேவையின்கீழேயே செயற்பட்டு வந்தது. அது இப்பொழுது இராணுவ சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டுள்ளது. இராணுவ விவகாரங்களில் சர்வ வல்லமை மிக்கவராகக் கருதப்படுகின்ற பாதுகாப்பு அமைச்சின் செயலாளரே இதனை ஏற்படுத்தியுள்ளார்.

இவருடைய தலைமையின் கீழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இராணுவ முகாம்களையும், அதிரடிப்படை முகாம்களையும் அமைப்பதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. இடம், காலம், நேரம் என்ற வித்தியாசமின்றி நாட்டின் எந்தப் பகுதிகளிலும் தற்கொலைத் தாக்குதல்களும், குண்டு வெடிப்புக்களும் இடம்பெறலாம் என்றிருந்த யுத்த காலத்தில் கூட இத்தகைய இராணுவ பிரசன்னம் நாட்டில் எவராலும் ஏற்படுத்தப்படவில்லை.

யுத்தம் நடைபெற்ற வடக்கு கிழக்குப் பிரதேசங்களின் பாதுகாப்பிற்காகவும், யுத்தச் செயற்பாடுகளுக்காகவும் நிறுத்தப்பட்டிருந்த இராணுவத்தினரும், அதிரடிப்படையினரும் இன்னும் அங்கிருந்து அகற்றப்படவில்லை. அதற்குப் பதிலாக அந்தப் பிரதேசங்களில் இராணுவப் பயிற்சி முகாம்களும், நவீன வசதிகள், குடியிருப்புக்களுடன் கூடிய நிரந்தர இராணுவ முகாம்களையும் அமைப்பதில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

யுத்த மோதல்கள் இடம்பெற்ற காலத்தில் காடுகளில் விடுதலைப் புலிகள் தமது முகாம்கள் பலவற்றையும், பயிற்சி முகாம்களையும், விமான ஓடுபாதைகள், வெடி பொருள் களஞ்சியங்களுடன் கூடிய மறைவிடங்கள் என்பவற்றை அமைத்திருந்தார்கள். கடந்த வருடம் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது விடுதலைப் புலிகளின் தலைமை உட்பட முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டு, ஏனைய இரண்டாம் நிலை மற்றும் முன்னணி தலைவர்கள் அனைவரும் இராணுவத்தினரிடம் சரணடைந்தார்கள். இதனால் புலிகள் இராணுவ ரீதியாக முற்றாகச் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இப்போது, காடுகளில்

தொடர்ச்சி 04ம் பக்கம்

Residential and Commercial
Mortgages
1st Mortgage
2nd Mortgage to 90%
Debt Consolidation
Invoice Financing
Construction Financing
Self Employed Expert
Commercial & Industrial
This Week
VARIABLE 3 YEARS
Prime Minus .60%
This Week
FIXED 5 YEARS
3.89%

WINNER
CMP Canadian Mortgage Awards 2010
OBSIDIAN
416-283-2377 EXT 218
MOHAN CANAGASABAI
Mortgage Agent (lic# M08009713)
DIRECT 647-273-3766 FAX 416-283-5820
35 GRAND MARSHALL DRIVE, SCARBOROUGH ON M1B 5W9
Some Conditions Apply. Rates may chance without notice. Brokerage Lic # 10473

# 72 ஆண்டுகளுக்குப் பின்பு இலங்கைக்கு கிடைத்த தங்கம் அம்போ!

## விளையாட்டுத் தகவல்கள் 293

### ஊக்க மருந்து சோதனையில் சிக்கினார் இலங்கை குத்துச் சண்டை வீரர்

தில்லி கொமன்வெல்த் போட்டியில் குத்துச் சண்டையில் தங்கப் பதக்கம் வென்ற இலங்கை வீரர் மஞ்சு வன்னியராச்சி ஊக்க மருந்து சோதனையில் சிக்கியுள்ளார். “கொமன்வெல்த் விளையாட்டு ஊக்க மருந்து தடுப்பு கமிட்டி அனுப்பியுள்ள கடிதத்தில், வன்னியராச்சி ஊக்க மருந்து எடுத்துக்கொண்டது சாம்பிள் - ஏ சோதனையில் நிரூபணமாகியுள்ளதாக தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதம் வன்னியராச்சி முன்னிலையில் இலங்கை குத்துச் சண்டை சம்மேளனத்திடம் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் மேற்கொண்டு குத்துச்சண்டை சம்மேளனமே முடிவெடுக்க முடியும்” என இலங்கை தேசிய ஒலிம்பிக் கமிட்டி தலைவர் ஹேமசிரி பெர்னான்டோ திங்கள் கிழமை தெரிவித்தார்.

கொமன்வெல்த் வரலாற்றில் 72 ஆண்டுகளுக்கு பிறகு இலங்கை முதன்முறையாக தில்லி போட்டியில் குத்துச்சண்டை பிரிவில் தங்கம் வென்றது. இந்நிலையில் சாம்பிள் - பி சோதனையிலும் வன்னியராச்சி ஊக்கமருந்து எடுத்துக்கொண்டது உறுதி செய்யப்பட்டால், அவரிடமிருந்து தங்கப் பதக்கம் பறிக்கப்படும். மேலும், அவருக்கு 2 ஆண்டுகள் குத்துச்சண்டை போட்டியில் கலந்துகொள்வதிலிருந்து தடை விதிக்கப்படும் என தகவல்கள் தெரிவித்தன.

### கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில்!!!

| | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|
| Austrlia | 74 | 55 | 48 | 177 |
| India | 38 | 27 | 36 | 101 |
| England | 37 | 59 | 46 | 142 |
| Canada | 26 | 17 | 32 | 75 |
| Russia | 12 | 11 | 10 | 33 |

தில்லியில் கொமன்வெல்த் போட்டிகள் கடந்த Oct 3-ம் தேதி கோலாகலமாக துவங்கின. 4-ம் தேதி முதல் போட்டிகள் நடைபெற்றன. 11 நாள்கள் நடைபெற்ற போட்டி Oct.15 முடிவடைந்தது.

நடந்த போட்டிகளில் 101 பதக்கத்தை பெற்று இந்தியா 2வது இடத்தை பிடித்துக்கொண்டது. ஆனாலும் 142 பதக்கங்களை பெற்று கொண்ட இங்கிலாந்து ஒரு தங்க பதக்கத்தை இந்தயாவிலும் பார்க்க குறைவாக பெற்றபடியால் மூன்றாவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டது. கொமன்வெல்த் போட்டியில் முதன்முறையாக பதக்கப் பட்டியலில் 2-வது இடத்தை இந்தியா பிடித்து சாதனை படைத்துள்ளது.

நிறைவு விழா: போட்டிகள் நிறைவடைந்ததும் இரவு 7 மணியளவில் நிறைவு விழா நிகழ்ச்சிகள் துவங்கின. பின்னர் 2,000 க்கும் மேற்பட்ட பள்ளிக் குழந்தைகளின் வந்தே மாதரம் நிகழ்ச்சி 50 நிமிடங்களுக்கு நடைபெற்றது. வந்தே மாதரம் நிகழ்ச்சி நிறைவுற்ற பின்னர் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த 400 கலைஞர்கள், ஸ்காட்லாந்தின் பழமையான பேக்பைப்பர் இசையை வாசித்து பார்வையாளர்களை மகிழ்வித்தனர்.

பின்னர் தமிழகம், கேரளம், பஞ்சாப், மணிப்பூர், மகாராஷ்டிரம், குஜராத்தைச் சேர்ந்த 800 கலைஞர்களின் தற்காப்புக் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. பிரபல பாடகர்கள் சுனிதி சௌகான், சங்கர் மகாதேவன் பாடி ரசிகர்களை மயக்கினர். நிறைவு விழாவுக்காக மைதானத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. சுமார் 60 ஆயிரம் பார்வையாளர்கள் மைதானத்தில் குழுமியிருந்தனர்.

அடுத்த கொமன்வெல்த் போட்டி 2014-ம் ஆண்டு பிரிட்டனில் உள்ள கிளாஸ்கோ நகரில் நடைபெறுகிறது.

### உலக டெஸ்ட் அணியில் சச்சின் டெண்டுல்கர்

உலக டெஸ்ட் லெவன் அணியில் இந்தியாவின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் இடம் பிடித்துள்ளார். இஎஸ்பிஎன் கிரிக்இன்ஃபோ இணையதளம் வெளியிட்டுள்ள இந்த டெஸ்ட் அணியில் இடம் பிடித்துள்ள ஒரே இந்தியர் டெண்டுல்கர் மட்டுமே. கிரிக்கெட் ஜாம்பவான் டான் பிராட்மேன், விவியன் ரிச்சர்ட்ஸ், ஷேன் வார்னே, கேரி சோபர்ஸ் ஆகியோர் உலக லெவன் அணியில் இடம் பெற்றுள்ள மற்ற முக்கிய வீரர்களாவர். அணியில் இடம் பெற்றிருப்பவர்களில் 4 பேர் அவுஸ்திரேலிய வீரர்கள் 3 பேர் மேற்கிந்தியத் தீவுகளின் வீரர்கள் இருவர் இங்கிலாந்து நாட்டவர்கள் தலா ஒருவர் இந்திய, பாகிஸ்தான் நாட்டு வீரர்கள்.

ஜேக் ஹாப்ஸ், லென் ஹட்டன், டான் பிராட்மேன், சச்சின் டெண்டுல்கர், விவியன் ரிச்சர்ட்ஸ், கேரி சோபர்ஸ், ஆடம் கில்கிறிஸ்ட், மால்கம் மார்ஷல், ஷேன் வார்னே, வாசிம் அக்ரம், டெனிஸ் லில்லி. காவஸ்கர், இம்ரான் கான், முரளீதரன் ஆகியோர் 2வது உலக டெஸ்ட் லெவன் அணியில் இடம் பிடித்துள்ளனர்.

### உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் வெற்றியை ஊகித்த "PAUL' மரணம்

தென் ஆப்பிரிக்காவில் நடந்த உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் வெற்றி, தோல்விகளை சரியாக ஊகித்த ஆக்டோபஸ் “பால்'' உயிரிழந்தது. ஜெர்மனியில் உள்ள கடல்வாழ் உயிரின அருங்காட்சியத்தில் பராமரிக்கப்பட்டுவந்த பால் திங்கள்கிழமை உயிரிழந்ததாக அருங்காட்சியக அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலகக் கோப்பை போட்டியில் எந்த அணி வெற்றிபெறும் என்பதை முன்கூட்டியே ஊகித்ததன் மூலம் அந்த சமயத்தில் பரவலாகப் பேசப்பட்டது பால். 8 ஆட்டங்களில் பால் கணித்தவாறே வெற்றி, தோல்விகள் அமைந்தன. இறுதி ஆட்டத்தில் பால் ஊகித்த படியே ஸ்பெயின் 1-0 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தை வீழ்த்தி கோப்பையை வென்றது. மோதவுள்ள இரு நாட்டு அணிகளின் தேசியக் கொடி உள்ள உணவு அடங்கிய இரு டப்பாக்கள், பால் இருக்கும் தொட்டிக்குள் வைக்கப்படும்.

எந்த டப்பாவில் உள்ள உணவை பால் முதலில் திறந்து உண்கிறதோ, அந்த தேசியக் கொடிக்குரிய அணி வெற்றி பெறும் என ஊகிக்கப்பட்டது. அதன்படியே வெற்றிகளும் அமைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. பால் உயிரிழந்தது மிகவும் வருத்தம் அளிப்பதாக தெரிவித்த அருங்காட்சியக அதிகாரிகள், பாலை போன்று வேறு ஓர் ஆக்டோபஸ் தயார் செய்து வருவதாகவும் தெரிவித்தனர். பால்-2 ரெடி!

### அணி மாறுகிறார் கால்பந்து வீரர் ரூனே

ஒப்பந்த பிரச்சினை காரணமாக, மான்செஸ்டர் யுனைடெட் கிளப் அணியிலிருந்து விலக உள்ளார் பிரபல கால்பந்து வீரரான இங்கிலாந்தின் வெய்ன் ரூனே. இங்கிலாந்து அணியின் முன்னணி கால்பந்து வீரர் வெய்ன் ரூனே. இவர் கடந்த 6 ஆண்டுகளாக மான்செஸ்டர் யுனைடெட் கிளப் அணி சார்பில் போட்டிகளில் பங்கேற்று வருகிறார். இந்நிலையில், மான்செஸ்டர் யுனைடெட் அணியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார் ரூனே.

இது குறித்து இவர் கூறுகையில், பணத்துக்காக மான்செஸ்டர் அணியிலிருந்து விலக வில்லை. ஆனால் எனது எதிர்காலம் குறித்து மான்செஸ்டர் அணி, எந்த உறுதியும் அளிக்கவில்லை. தவிர, முன்னணி வீரர்களுக்கு எந்த முறையான அங்கீகாரம் கிடைக்கவில்லை. இதனால் அணியிலிருந்து விலக முடிவு செய்துள்ளேன்,” என்றார். மான்செஸ்டர் யுனைடெட் அணியிலிருந்து ரூனே விலக உள்ள நிலையில், பல்வேறு கிளப் அணிகள் ரூனேவை ஒப்பந்தம் செய்ய முயன்று வருகின்றன. இருப்பினும் ரூனே செல்சியா அணியில் இணைவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய பாலியல் குற்றச்சாட்டுக்களில் கனடா ஹொக்கி பயிற்சியாளர் கைது

முன்னாள் கால்கரி ப்லேமஸ் அணியின் தலைவர் தயோரேன் ப்லீயூரி டீன் ஏஜில் இருந்த போது அவரிடம் தவறாக நடந்தமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களுக்காக கனடா திரும்பிய கிரகாம் ஜேம்ஸ் ரொறொன்ரோ சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வின்னிபெக் போலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். ஆனால் இந்த கைது நடவடிக்கை முன்பே திட்டமிடப்பட்ட ஒன்றுதான் என்பதும் ஒப்பந்தத்தின் பேரிலேயே போலீசாரிடம் தானாகவே கிரஹாம் ஜேம்ஸ் சரணடைந்துள்ளார் என்பதும் தெரிய வந்துள்ளது. கிரஹாம் ஜேம்சிடம் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருவதாக தெரிவித்த பொலிஸார் இது குறித்த மேலதிக தகவல்களை வெளியிட மறுத்து விட்டனர்.

நீதிமன்ற ஆவணங்களின்படி தற்போது 58 வயதாகும் முன்னாள் கனடிய ஹொக்கி அணியின் பயிற்சியாளர் கிரஹாம் ஜேம்ஸ் மீது 1970 முதல் 1990 வரையிலான கால கட்டங்களில் மட்டும் அண்ணளவாக ஒன்பது குற்றச்சாட்டுகள் இருப்பதும் அவற்றில் 3 புகாராகவே பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் தெளிவாக உள்ளது.

### ஐ.சி.சி. தரவரிசையில் டிவில்லியர்ஸ் முதலிடத்தில்

ஒருநாள் கிரிக்கெட் துடுப்பாட்டத்தர வரிசை தென்னாபிரிக்கா வீரர் டிவில்லியர்ஸ் முதல் இடத்திலுள்ளார். சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) ஒருநாள் போட்டியின் அடிப்படையில் வீரர்களின் தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. தரவரிசையில் இந்திய அணி கப்டன் தோனிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. 2 ஆவது இடத்திலிருந்த டோனி 786 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்துக்கு பின் தள்ளப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்கா வீரர் டிவில்லியர்ஸ் 820 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளார். மைக் ஹஸி (அவுஸ்திரேலியா) 795 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்திலும், ஹம்லா (தென்னாபிரிக்கா) 3 ஆவது இடத்திலுமுள்ளனர். பந்து வீச்சாளர்களில் முதல் 10 வரிசையில் நியூசிலாந்து கப்டன் வெட்டோரி 766 புள்ளிகள் பெற்று முதல் இடத்திலுள்ளார். சகிப் அல் ஹசன் (பங்களாதேஷ்) 2 ஆவது இடத்திலும் சுவான் (இங்கிலாந்து) 3 ஆவது இடத்திலுமுள்ளனர். குலசேகரா (இலங்கை), பிராட் (இங்கிலாந்து), போலிஞ்சர் (அவுஸ்திரேலியா), பிரைஸ் (சிம்பாப்வே), மில்ஸ் (நியூசிலாந்து), அண்டர்சன் (இங்கிலாந்து), ஜேக்கப் ஓரம் (நியூசிலாந்து )ஆகியோர் முறையே 4 முதல் 10 ஆவது இடங்களிலுள்ளனர். நாடுகளின் பட்டியலில் இந்தியா 117 புள்ளிகள் பெற்று தொடர்ந்து 2 ஆவது இடத்திலுள்ளது. அவுஸ்திரேலியா 130 புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்திலுள்ளது. தென்னாபிரிக்கா 3 ஆவது இடத்திலிருக்கிறது.



**எஸ். கணேஷ்**

ELECTRICAL WORKS



**FRIDGE, WASHER, DRYER** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# நிலமாற்று வரி மீதான நகரபிதாவின் உறுதிப்பாடு

2010ஆம் ஆண்டின் இறுதி இரண்டு மாதங்களின் ஆரம்பத்தில் விளம்பரம் பத்திரிகையில் ஆதன வியாபாரம் சம்பந்தமான சில தகவல்களை பற்றிப் பார்ப்போம். அத்துடன் ஒக்ரோபர் 25, 2010 அன்று, மாநகர சபைகளிற்கு நடைபெற்ற தேர்தலில் ஆதன வியாபாரத்தில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்படலாம் என்பதனையும் ஆராய்வோம்.



ஒன்ராறியோவில் நான்கு வருடங்களிற்கு ஒருமுறை நடைபெறும் மாநகர சபைத்தேர்தல், ரொறொன்ரோ மாநகரைப் பொறுத்தவரையில் 44 கவுன்ஸில் அங்கத்தவர்களையும் அவர்களின் நடுநாயகமாக நகரசபை முதல்வரையும் (Mayor) தெரிவு செய்வார்கள். அண்மையில் நடைபெற்ற தேர்தலில் ரொறொன்ரோ மாநகர முதல்வராக றொப் போர்ட் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளார். இவர் ஏற்கனவே பத்து (10) வருடங்களாக நகரசபை அங்கத்தவராக சேவைபுரிந்துள்ளார். நகரசபைக்கு திரட்டப்படும் பணம் சிறந்த முறையில் கையாளப்படுவதில்லை என்ற குறையை கூறிக்கொண்டே வந்துள்ளார்.

நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர் - 330

இவரின் வெற்றியில் ஆதன வியாபாரம் சம்பந்தமான சிலவிடயங்களும் அடங்கு கின்றன. அதாவது ஒன்ராரியோவில் ஆதனம் ஒன்று கைமாறும் போது, ஒருவர் விற்று மற்றவர் வாங்கும்போது நிலமாற்றுவரி என்று அழைக்கப்படும் Land Transfer Tax என்ற வரி அறவிடப்படுவது நடைமுறையில் இருந்து வருகின்றது. இந்த வரி ஒன்ராரியோ முழுக்க ஆதனத்தின் விற்பனை விலையில் தங்கியுள்ளது. விலைகூடிய ஆதனத்திற்கு ஆகக்கூடிய வரியும் ஆகக் குறைந்ததிற்கு குறைந்த நிலமாற்று வரியும் அறவிடப்படுகின்றது. ஆதனவிலை $55,000 இற்கு குறைவாக இருந்தால் 0.5% வரியும் (விலையின் 0.5%)

$55,000 இற்கும் $250,000 இற்கு 1.0% வரியும் (விலையில் 1.0%)

$250,000 இற்கு $400,000 இற்கு 1.5% வரியும் (விலையில் 1.5%)

$400,000 இற்கு மேற்பட்டதிற்கு 2.0% வரியும் (விலையில் 2.0%) வசூலிக்கப்பட்டு வந்தது.

ஆனால் இந்த தேர்தல்களிற்கு முன்பு பதவியிலிருந்த மாநகர முதல்வர் டேவிட் மில்லர் மேலதிக நிலமாற்று வரியை நடைமுறைக்கு கொண்டுவந்தார்.

ரொறொன்ரோ மாநகரத்தில் மட்டும் விற்று வாங்கும் ஆதனத்திற்கு இரண்டாவது நிலமாற்று வரிமுறையை அறிமுகப்படுத்தப் பட்டது. மாநகரசபை அங்கத்தவர்கள் பலரின் எதிர்ப்பு, ரொறொன்ரோ ஆதன சம்பந்தமான சபை (Toronto Real Estate Board) இன் பலத்த எதிர்ப்புகளிற்கு எதிராக இந்த வரி நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த மேலதிக ரொறொன்ரோ வரியினால் ரொறொன்ரோ மாநகர சபைப்படி மேலதிக $200,000,000 (200 மில்லியன் டொலர்) வருமானம் கிடைத்தது. இருந்தபோதிலும் முதல் தடவை ஆதனம் வாங்குபவர்களின் நிலைமையில் சங்கடம் ஏற்பட்டது. சந்தை யிலிருந்த பலரிற்கு ஆதனம் வாங்குவதற்கு போதியளவு பணம் இல்லாமல் வாங்குவதை தள்ளிப்போட்டவர்கள் பலர்.

புதிதாக நகரசபைத் தலைவராக வந்திருக்கும் றொப் போர்ட் இந்த மேலதிக வரியை நீக்க இருப்பதாக கூறிவருகின்றார். இவ்வாறு இந்த வரி நீக்கப்படுமாயின் ரொறொன்ரோவில் முதல்தரமாக ஆதனம் வாங்குபவர்கள் பலரிற்கு நன்மை பயக்கும்.

தொடர்ச்சி 09ஆம் பக்கம்


HomeLife GTA Realty Inc., Brokerage

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



Raja M. Mahendran, P. Eng (Broker/Owner)

1711 Mccowan Rd. #206, Toronto - Tel: 416.321.6969
145 Trades Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

HOUSE FOR SALE AURORA 628,000



BAYVIEW & SPRINGFARM
4 Bedrooms,Walkout bsmt
5 Washrooms, double garage
Ceramic floor, Hardwood floor
Stove, dishwasher,exhaust fan,
All included. Over 3000 sq.feet.

HOUSE FOR SALE MARKHAM $419,000



MARKHAM & STEELES
Newly Painted 4 Bedroom House.
Steps To Ttc Shopping & School,
Double Door Entry,
Direct Door To Garage,
Fully Fenced, Door Opener
With Remote, All Elfs,.

$1200 FOR LEASE



MARKHAM & SHEPPARD
Luxury Condo, Unit 698 Sq Ft + 57 Sq
Open Balcony, 24 Hrs Concierge,
Rec Room, Walk To 24 Hrs Ttc And Mall,
Close To Hwy 401 & Scarborough Town Centre.

HOUSE FOR SALE
MARKHAM$649,000



MCCOWAN & 16TH AVE
Demand Location
Beautifully Kept, 4 Br Detached On
Corner Unit, 9'. 17' High Front Entrance,
6 Parking Space (Possible). Finished bsmt
with kitchen. Large L-Shaped Cooler Room,
Large Deck, Laundry Room.
2 Fridges, 2 Stoves, Washer, Dryer.

CONO FOR SALE
$219,900



MARKHAM & SHEPPARD
Luxury Condo, Unit 698 Sq Ft + 57 Sq
Open Balcony, 24 Hrs Concierge,
Rec Room, Walk To 24 Hrs Ttc And Mall,
Close To Hwy 401 & Scarborough Town Centre.

*Independently Owned & Operated



Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# ஆதித் தாய்

இன்று என் வாழ்க்கையில் முக்கியமான நாள். பிறந்தநாள்போல, சோதனையில் சித்தியடைந்த நாள் போல, வேலை கிடைத்த நாள்போல, திருமண நாள்போல, முதல் பிள்ளை பிறந்த நாள்போல முக்கியமானது. என் ஆதித்தாயை கண்டுபிடித்தேன். அதாவது 160,000 வருடங்களுக்கு முன்னர் கிழக்கு ஆப்பிரிக்காவில் உதித்த ஒரு தாய்தான் என்னுடைய வம்சத்தின் ஆரம்பம். என்னுடைய வம்ச வழியை அப்படியே பின்னோக்கி 5000 தலைமுறைகள் தள்ளிக்கொண்டே போனால் அந்த தேடல் இந்த தாயாரில் கொண்டுபோய் சேர்க்கும். விஞ்ஞானிகள் இந்த தாயை ஆதித்தாய் Mitochondrial Eve என்று சொல்கிறார்கள்.

National Geographic நடத்தும் genographic project ல் பங்குபெற விரும்பி நான் அவர்களுடன் தொடர்புகொண்டேன். இந்த புரோஜெக்ட் என்னவென்றால் அது உங்கள் மரபணுவை சோதித்து உங்கள் மூதாதையர் எங்கே, எப்பொழுது தோன்றினார்கள், எந்தக் காலகட்டத்தில் இடம்பெயர்ந்தார்கள், அந்தப் பயணம் அவர்களை எங்கே எங்கேயெல்லாம் இட்டுச் சென்றது என்பதை விஞ்ஞானமுறைப்படி ஆராய்ந்து விவரங்களை வரைபடமாகத் தருவார்கள்.

அவர்கள் கேட்டுக்கொண்டபடி என்னுடைய உமிழ்நீரை இரண்டு குப்பிகளில் அடைத்து, 99 டொலர் காசோலையுடன் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். அந்தப் பரிசோதனை முடிய ஆறு வார காலம் எடுக்கும். நான் பொறுத்திருந்தேன். முடிவுகள் கிடைத்தது இன்றுதான். சோதனையில் இரண்டு வழித்தேடல் உள்ளது. ஒன்று தாய் வழித்தேட்டல், மற்றது தந்தை வழித்தேடல். தாய் வழித்தேடல் உங்கள் தாயில் ஆரம்பித்து உங்கள் வம்சவழியின் ஊற்றுக்கண்ணை தேடிக்கொண்டே போகும். தந்தை வழித்தேடல் உங்கள் அப்பா, அப்பாவின் அப்பா என்று பின்னோக்கி நகர்ந்து உங்கள் ஆகக்கடைசி தலைமுறையைச் சேர்ந்த தந்தையில் நிற்கும். நான் விண்ணப்பத்தில் கேட்டது தாய் வழித்தேடல்.

கிழக்கு ஆப்பிரிக்காவில் 3.6 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் நிமிர்ந்து நடக்கும் ஆற்றல் பெற்ற முதல் மனிதன் நடமாடியதற்கான சான்றுகள் உள்ளன. தன்சேனியாவில் உள்ள லேரோலி என்ற இடத்தில் நிமிர்ந்து நடந்த இரண்டு மனித காலடித்தடங்களை இன்றைக்கும் பாதுகாக்கிறார்கள். ஒன்று ஆண், மற்றது பெண். அவர்கள் பக்கத்து பக்கத்தில் நடந்து போயிருக்கிறார்கள். பெண்ணின் கால் தடம் கொஞ்சம் ஆழ்ந்துபோய் இருப்பதால் அவள் ஒரு குழந்தையை காவினாள் என்பது விஞ்ஞானிகள் ஊகம்.

200,000 வருடங்களுக்கு முன்னர் அதே கிழக்கு ஆப்பிரிக்காவில் அதே ஆதி மனிதர்களிலிருந்து முதல் நவீன மனிதன் Homo sapiens தோன்றினான். இன்றைய மனிதனின் குணாம்சங்கள் கொண்ட முதல் மனிதன் இவன். 40,000 ஆண்டுகள் கழித்து, அதாவது 160,000 ஆண்டுகளுக்கு முன்னர், அதே இடத்தில் ஓர் ஆதித்தாய் தோன்றினாள். இன்று உலகில் வாழும் அத்தனை மனித உயிரும் இந்த ஆதித்தாயில் இருந்தே தோன்றினர். மற்ற தாய்களுக்கு என்ன நடந்தது? இவர்களில் இருந்து தொடங்கிய சந்ததி சங்கிலி இயற்கை உற்பாதத்தில் அழிந்தோ, சந்ததி இல்லாமல் அறுந்தோ போய்விட ஒரேயொரு தாய் மட்டும் எஞ்சினாள். அவளிலிருந்து தொடங்கிய சந்ததிச் சங்கிலி இன்றுவரை தொடர்ந்தது இயற்கையில் கிடைத்த மாபெரும் அதிர்ஷ்டம் என்று சொல்லலாம்.

விஞ்ஞானிகள் எப்படி இந்த தாயை கண்டுபிடித்தார்கள்? ஒரு கதை. நாலாம் வகுப்பு என்று நினைக்கிறேன். சோதனை எழுதும்போது ஒரு மாணவன் "சைபீரியா" என்று எழுதுவதற்கு பதிலாக "கைபீரியா" என்று தவறுதலாக எழுதிவிட்டான். அவனைப் பார்த்து கொப்பியடித்த இன்னொரு மாணவனும் "கைபீரியா" என்றே எழுதினான். அடுத்த மாணவனும். அதற்கு அடுத்தவனும். இப்படியாக நாலு மாணவர்கள் 'கைபீரியா' என்று எழுதியதை வைத்து ஆசிரியர் முதல் பிழையை யார் எழுதினார் என்பதை கண்டுபிடித்தார். அதேபோல ஆதிமனித மரபணுவில் ஏற்பட்ட ஒரு பிறழ்வு வழிவழியாகத் தொடர்ந்தது. அதை வைத்து விஞ்ஞானிகள் ஆராய்ந்துகொண்டு போனபோது எல்லா வழிகளின் ஆரம்பமும் ஒரு தாய் என்பதைக் கண்டுபிடித்தனர்.




> "கிழக்கு ஆப்பிரிக்காவில் 3.6 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் நிமிர்ந்து நடக்கும் ஆற்றல் பெற்ற முதல் மனிதன் நடமாடியதற்கான சான்றுகள் உள்ளன. தன்சேனியாவில் உள்ள லேரோலி என்ற இடத்தில் நிமிர்ந்து நடந்த இரண்டு மனித காலடித்தடங்களை இன்றைக்கும் பாதுகாக்கிறார்கள். ஒன்று ஆண், மற்றது பெண். அவர்கள் பக்கத்து பக்கத்தில் நடந்து போயிருக்கிறார்கள். பெண்ணின் கால் தடம் கொஞ்சம் ஆழ்ந்துபோய் இருப்பதால் அவள் ஒரு குழந்தையை காவினாள் என்பது விஞ்ஞானிகள் ஊகம்."

எனக்கு Genographic Project அனுப்பிய வரைபடம் ஆதித்தாயில் ஆரம்பித்து என் முன்னோர்கள் எங்கே எங்கேயெல்லாம் புலம்பெயர்ந்து பரவினார்கள் என்பதை துல்லியமாகக் காட்டுகிறது. கிழக்கு ஆப்பிரிக்காவில் உதித்த இந்த தாயிடமிருந்து ஆரம்பத்தில் இரண்டு குழுக்கள் பிரிந்தன. L0, L1 ஆகிய இருகுழுக்களும் ஆப்பிரிக்காவில் பரவின. பல ஆயிரம் வருடங்களுக்கு பின்னர் உருவான L2 குழு மேற்கு ஆப்பிரிக்காவுக்கு பரவியது. 80,000 வருடங்களுக்கு முன்னர் L3 குழு தோன்றியது. இது ஆப்பிரிக்காவின் தெற்குப் பகுதிகளுக்கு பரவியது. 60,000 வருடங்களுக்கு முன்னர் L3 ல் இருந்து இரண்டு குழுக்கள் பிரிந்தன. இதில் ஒன்று N குழு. இது வடக்கு பக்கமாக விரிந்து பரவி ஐரோப்பாவுக்குள் நுழைந்தது. அடுத்த குழுவான M குழு முதல் முறையாக கடல் தாண்டிய சாகசமான குழு. இது செங்கடலைத் தாண்டி, அரேபியாவைத் தாண்டி ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், வங்காளம், பர்மா, மலேயா, அவுஸ்திரேலியா ஆகிய தூர இடங்களுக்கு பரவியது. என்னுடைய மூதாதையர் இந்த M குழுவைச் சார்ந்தவர்கள் என்று என்னுடைய மரபணு ஆராய்ச்சி சொல்லியது. இதன் பெயர் Haplogroup M.

இந்த குழுவைச் சார்ந்தவர்கள் அதிகமாக அங்க தேசத்திலும் (Bihar) கலிங்க தேசத்திலும் (Orissa) வங்கதேசத்திலும் (Bengal) மற்றும் இந்தியாவின் வடபகுதிகளிலும் காணப்படுகிறார்கள். தமிழ் நாட்டிலோ, கேரளத்திலோ, இலங்கையிலோ இருப்பவர்கள் இதன் உபகுழுக்களில் இருப்பதாக ஆராய்ச்சிகள் சொல்கின்றன. உதாரணமாக உபகுழு M2 தமிழ்நாட்டிலும், உபகுழு M6 கேரளத்திலும், உபகுழு M69 இலங்கையிலும்.

வரலாற்றை முறையாகக் கற்றுத்தேர்ந்த ஒருவரிடம் என் சந்தேகத்தைக் கேட்டேன், தென் இந்தியாவிலோ இலங்கையிலோ Haplogroup M ஏன் காணப்படவில்லையென்று. அவர் விடை மகாவம்சத்தில் இருக்கிறது என்றார். மகாவம்சம் அரைவாசி கட்டுக்கதை அல்லவா என்று நான் கேட்டேன். அவர் சொன்னார். "வங்கதேசத்து அரசன் கலிங்க அரசகுமாரியை மணமுடிக்கிறான். அவர்களுக்கு பிறந்த மகள் காட்டுக்குச் சென்று சிங்கத்துடன் கூடி ஒரு மகனையும் மகளையும் பெற்றெடுக்கிறாள். அவர்கள் பெயர் சிங்கபாகு, சிங்கசிவலி. சிங்கபாகு தகப்பனாகிய சிங்கத்தை கொன்று தன் சகோதரியான சிங்கசிவலியை மணமுடித்து ராச்சியத்தை ஆள்கிறான். அவர்களுக்கு பிறந்த அரசகுமாரனான விஜயனையும் அவனுடைய கூட்டாளிகள் 700 பேரையும் அரசன் ஒரு கப்பலில் நாடு கடத்துகிறான். அவன் இலங்கையில் வந்து இறங்கி அதைக் கைப்பற்றி அரசாண்டான். அவனுடைய வம்சவழி ரத்தத்தில் வங்கமும் கலிங்கமும் இருக்கிறது. உங்களுடையதிலும் இருக்கிறது."

"வங்கமும், கலிங்கமும் என்றால் பரவாயில்லை. சிங்கமும் அல்லவா இருக்கிறது?" என்றேன். என் எதுகையையோ, கேள்வியை அவர் ரசிக்கவில்லை. விடையையும் கூறவில்லை.

சரித்திர புத்தகங்களையே வாழ்நாள் முழுக்கப் படித்துவரும் நண்பர் ஒருவர், 1215ல் கலிங்கத்திலிருந்து படையெடுத்து பொலநறுவையை பிடித்து ஆண்ட செகராஜசேகர சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியின் வழித்தோன்றலாக நான் இருக்கலாம் என்று சொல்கிறார். கலிங்க ரத்தம் மட்டுமல்ல, ராச ரத்தமும் என் உடம்பில் ஓடுகிறது. அதை நம்புவதற்கும் ஆசை கூடுகிறது. யாராவது இந்த துறை விற்பன்னர் இதை ஆராய்ந்தால் எனக்கு பெரும் பயனுள்ளதாக இருக்கும். விவரம் https://genographic.nationalgeographic.com/genographic/index.html

* * *

நான் முன்னரே கூறியமாதிரி என் விண்ணப்பத்தில் தாய்வழி தேடல் என்று குறிப்பிட்டிருந்தேன். அதற்கு விடையாகத் தான் மேற்கூறிய வரைபடம் வந்தது. தகப்பன் வழி தேடலையும் நான் கேட்டிருக்கலாம். அது என்னுடைய தகப்பன், தகப்பனின் தகப்பனென்று தேடிக்கொண்டு போய் ஆதித் தகப்பனில் சேர்க்கும். விஞ்ஞானிகள் ஆதித்தாய் இருப்பதுபோல ஓர் ஆதி ஆண் இருப்பதையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த உலகத்தில் இருக்கும் ஒவ்வொரு ஆணும் ஓர் ஆதி ஆணிலிருந்து உருவானவர்தான்.

ஒரு மனித உடம்பில் 23 சோடி குரோமசோம்கள் உள்ளன. இதில் ஒரு சோடியில் இரண்டு x குரோமசோம்கள் இருந்தால் அது பெண். ஒரு சோடி குரோமசோமில் ஒரு x குரோமசோமும், ஒரு y குரோமசோமும் இருந்தால் அது ஆண். பெண் குழந்தை உற்பத்தியாகும்போது தாயிடமிருந்து ஒரு x ம் தகப்பனிடமிருந்து x ம் பெறும். இரண்டும் சேர்ந்தது பெண். ஆண் குழந்தை உற்பத்தியாகும்போது தாயிடமிருந்து ஒரு x ம் தகப்பனிடமிருந்து ஒரு y ம் பெறும். இரண்டும் சேர்ந்தது ஆண். y குரோமசோம் தந்தையிடமிருந்து மகனுக்கு மட்டுமே கடத்தப்படும். மகளுக்கு கடத்தப்படுவதில்லை. அதனால்தான் பழைய காலத்து அரசர்கள் வம்சம் தழைக்க மகன் வேண்டும் என்று தவம் கிடந்தார்கள்.

ஆதி ஆணிலிருந்துதான் இன்று உலகத்திலிருக்கும் ஆண்கள் எல்லோரும் தோன்றியிருக்கிறார்கள். விஞ்ஞானிகள் அவனுக்கு இட்ட பெயர் Y chromosomal Adam. இவன் வாழ்ந்த காலம் 60,000 வருடங்களுக்கு முன்னர் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். என்னுடைய அப்பா, அப்பாவின் அப்பா, அவரின் அப்பா, அவரின் அப்பா என்று 2000 தலைமுறைகள் தேடிக்கொண்டே பின்னோக்கி போனால் அது என்னை இந்த ஒரேயொரு ஆதி ஆணில் கொண்டுபோய் சேர்க்கும். மற்ற ஆண்களுக்கு என்ன நேர்ந்தது என்று

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

# நிலமாற்று வரி...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

சிறிது சிறிதாக ஆதனவியாபாரம் மந்த நிலையை அடைந்து செல்லும் இந்த காலகட்டத்தில் இந்த இரண்டாவது நிலமாற்று வரி நீக்கப்படுமாயின் வீடு, மனை விற்பனைக்கு ஒருவகை ஊக்குசக்தியாக இருக்கும் என எதிர்பார்க்கலாம். ஆனால் நகரசபை அங்கத்தவர்கள் இதனை நீக்குவதற்கு எவ்வாறான எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என எதிர்காலம் தான் பதில் கூறும்.

ஏற்கனவே கனடிய மத்திய வங்கி வட்டிவீதத்தை மூன்று தடவை கால் வீதம் (1/4%) என்ற அளவில் அதிகரித்தது. மத்திய வங்கியின் இன்றைய வட்டிவீதம் 1% ஆகவும், முதன்மை வட்டிவீதம் 3% ஆகவும் காணப்படுகின்றது.

தொடர்ச்சியான வட்டிவீத அதிகரிப்பால் ஆதன வியாபாரம் சிறிதளவு மந்த நிலைமையை அடைந்துள்ளது. இதனால் உடனடியான மேலதிக வட்டிவீத அதிகரிப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது. இருந்த போதிலும் கனடிய முன்னணி நிதி நிறுவனங்களின் ஆண்டு அறிக்கையின் பிரகாரம் அடுத்த வருடத்தின் (2011) இறுதிக்குள், இக் கனடிய வங்கியின் வட்டிவீதம் குறைந்தது ஏறத்தாள 1% ஆல் அதிகரிக்கப்படலாம் எனவும் 2012 இல் மேலும் 1% அதிகரிக்கப்படலாம் எனவும் கூறப்படுகின்றது. ஆனாலும் நீண்டகால, மாறாத அடமானக்கடன் (Closed Mortgage) மேற்குறிப்பிட்ட வீதத்தில் அதிகரிக்கப்பட மாட்டாது எனவும் தெரியவருகின்றது.

கடந்த கிழமை கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் மார்க் கார்னியின் கனடிய பொருளாதாரம் பற்றிய அறிக்கையில் அடுத்த வருடம் (2011) கனடிய பொருளாதாரத்தில் ஆதனத்தின் விலை குறையலாம் என எதிர்பார்க்கலாம் என அபாயக்குரல் கொடுத்துள்ளார். இவ்வாறு ஒரு நிலைமை ஏற்படுவது சிலவேளைகளில் நுகர்வோரிற்கு இது சிறந்ததாக இருக்கும் எனத் தோன்றுகின்றது. ஏற்கனவே ஏற்பட்ட விலை அதிகரிப்பால் புதிய நுகர்வோர் விலை குறைந்த ஆதனங்களை வாங்க வேண்டிய நிலையில் உள்ளார்கள். மேலும் பலர் ஆதனம் வாங்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களிலும் ஒக்ரோபர் 2010 மாதத்தில் ரொறொன்ரோ பெரும் பாகத்தில் 25இற்கு மேற்பட்ட புதிய அடுக்கு மாடிக்கட்டிடத் தொகுதிகளிலுள்ள அலகுகள் சந்தைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

பெயர் பெற்ற (உதாரணம் Tridel) நிறுவனங்களின் அடுக்குமாடி அலகுகளைக் கொண்ட அடுக்குமாடிக் கட்டிடத்தில் 60% இற்கு மேற்பட்டவை விற்கப்பட்டுள்ளன. இருந்த போதிலும் சில அடுக்குமாடிகளில் 20% கூட விற்கப்படவில்லை என்பதும் சிந்திக்க வேண்டிய தகவல்.

அத்துடன் ரொறொன்ரோவில் ஏறக்குறைய 400 அலகுகள் கொண்ட வேறு ஒரு கட்டிடத்தொகுதி நவம்பர் மாதம் சந்தைக்கு வர உள்ளது. சந்தைப்படுத்தும் நிறுவனத்தின் தகவல்களின்படி 20 மாடிகளைக் கொண்ட இந்த கட்டிடத் தொகுதி மேலும் இரண்டு (2) கட்டிடத் தொகுதிகளை எதிர்காலத்தில் கொண்டு வர இருப்பதாகவும் தெரியவருகின்றது.

அத்துடன் இந்த மாதம் கொண்டுவர இருக்கும் அலகுகளின் ஒரு சதுர அடிக்குரிய விலை $550 இலிருந்து $600 வரை இருக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் ஒவ்வொரு மாடிக்கும் (Level Premium) $2,000 வரையான அதிகரிப்பு ஏற்படும். கார் தரிப்பிற்கு மேலதிக $35,000 வரை அறவிடப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த தகவல்களில் இருந்து பொதுவாக ஊகிக்க கூடியது, ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் தொடர்ச்சியான விலை அதிகரிப்பு ஏற்படுகின்றது. அத்துடன் விலை கூடிய அடுக்கு மாடி அலகுகளை வாங்குவதற்கு போதியளவு நுகர்வோர்கள் இருக்கின்றார்கள் என்பது உண்மை. இவர்கள் கனடிய பிரஜைகளாகவும் இருக்கலாம் அல்லது வெளிநாட்டு நுகர்வோர்களாகவும் இருக்கலாம்.



கனடிய பொருளாதாரத்திலுள்ள ஆரோக்கியத்தன்மை வெளிநாட்டு முதலீட்டாளர்களிலும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. எனினும் நிர்மானம் (Development) செய்யும் கம்பனியின் நம்பகத்தன்மையும் முக்கியமாகவும், கட்டப்படும் இடமும் (Location) மிகவும் முக்கியமாகவும் கருதப்படல் வேண்டும்.

எது எப்படி இருப்பினும் எதிர்வரும் நாலு (4) வருடங்களிற்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டு இருக்கும் புதிய நகரபிதாவின் தலைமையில், கனடிய பொருளாதாரத்தில் என்ஜின் ஆகக் கருதப்படும் ரொறொன்ரோ நகரத்தின் ஆதனம் சம்பந்தமான புதியவரிகள் வராது என்று எதிர்பார்க்கலாம் (?). அத்துடன் அடுத்த ஆண்டு (2011) ஒக்ரோபர் 6ஆம் திகதி நடைபெற இருக்கும் ஒன்ராரியோ மாகாண அரசின் தேர்தலும், பொருளாதார பக்கத்தில் சில சலுகைகளை, நடைமுறையில் இருக்கும் லிபரல் அரசில் இருந்து எதிர்பார்க்கலாம்.

எதுவாயினும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்கம் ஏற்படாதவாறு இருந்தால் போதும்.

# ஆதித் தாய்

08ஆம் பக்கத்தொடர்ச்சி




கேட்கலாம்? ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அவர்களுடைய சந்ததிச் சங்கிலி அறுந்துவிட்டது. எஞ்சியது இது ஒன்றுதான்.

இன்னொரு முக்கியமான கேள்வி உண்டு. ஆதித்தாய் 160,000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றினாள். ஆதி ஆண் 60,000 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றினான். இடையே 100,000 ஆண்டுகள் ஆண்களே இல்லையா? அப்படியானால் சந்ததி எப்படி பரவியது? ஆணும் பெண்ணும் ஒரே சமயத்தில் வாழ்ந்தார்கள். விஞ்ஞானிகள் தேடிய ஆகப் பிந்திய தாய் 160,000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தாள். ஆகப் பிந்திய ஆண் 60,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தான். அதற்கு முந்தைய தொடர்ச்சிகள் எல்லாம் எப்படியோ அழிந்துபோயின.

ஆதி ஆணில் ஆரம்பித்து எனக்கு முன் வந்த தலைமுறையினர் எங்கேயெல்லாம் புலம்பெயர்ந்து பரவினார்கள் என்று அறியவேண்டுமானால் நான் மறுபடியும் என்னுடைய உமிழ்நீரை இரண்டு குப்பிகளில் அடைத்து Genographic Project க்கு அனுப்பிவைக்க வேண்டும். அப்படி அனுப்பும்போது "தந்தை வழி புலம்பெயர்வு" என்று மறக்காமல் குறிப்பிட்டு 99 டொலர் காசோலையையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். அவர்கள் சோதனையை முடித்துவிட்டு என்னுடைய தப்பன் வழி முன்னோர் எங்கே தொடங்கி எங்கேயெங்கே எல்லாம் நகர்ந்தார்கள் என்ற வரைபடத்தை எனக்கு அனுப்பிவைப்பார்கள். என்னுடைய தகப்பன் பாதையும் தாயின் பாதையும் ஏதோ ஒரு புள்ளியில் சந்தித்திருக்கும். கட்டாயம் கண்டுபிடிக்க வேண்டிய சங்கதிதான். முதலில் என் கைக்கு 99 டொலர் வந்து சேரட்டும்.

END



- அ. முத்துலிங்கம் -

YOGA - MEDITATION CLASSLESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.



நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# வாழத்துடிக்கும்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

விவசாயம் செய்ய அரசு உதவியிருக்கின்றது. வயல்கள் விளைந்திருக்கின்றன. அறுவடை நெருங்குவதால் அந்தக் குடும்பங்களுக்குப் பரவாயில்லை. மற்ற குடும்பங்கள்பாடுதான் கஸ்டம். நிவாரணத்தை நம்பித்தான் சீவியம் நடக்கிறது.

"ஆறுமாதத்தோட நிவாரணத்தை நிறுத்தப் போகிறார்களாம். போன மாத நிவாரணம் தாமதமாகத்தான் எங்களுக்குக் கிடைச்சது. இந்த மாதம் இன்னும் தரேல்ல. நிவாரணத்தை நிறுத்திட்டாங்களோ எண்டு பயமா இருக்கு. தருவாங்களாம். ஆனால் எப்போ எண்டு இன்னும் தெரியேல்ல. கடைசியா குடுத்த ரெண்டு முறையிலயும் அரிசியில்ல. அதுக்குப் பதிலா கோதுமை மாவைத்தான் தந்தினம். அதுதான் இப்ப சாப்பாடு. சோறு கிடையாது. அதையும் நிறுத்தினால் எங்கள்பாடு அதோ கதிதான்" வேதனையோடு சொன்னார் விநாயகமூர்த்தி.

இந்தக் கிராமத்தில் மக்கள் முன்னர் குடியிருந்த இடத்தில் புதிய வீடமைப்புத் திட்டம் வரவிருப்பதால், அவர்களை மேட்டுக்காணிகளில் அதிகாரிகள் குடியேற்றியிருக்கின்றார்கள்.

"மேட்டுக்காணியென்றபடியால, தண்ணிக்குக் கஸ்டமா இருக்கு. ஒரு கிலோ மீற்றர் வரும். அங்கதான் 3, 4 கிணறுகள் இருக்கு. அதில போய்தான் குடிக்கிறதுக்குத் தண்ணி எடுத்து வரவேணும். எனக்கெல்லாம் சைக்கிள்கூட இல்லை. குடிநீர் கொண்டு வர கிணற்றடிக்கு நடைதான். கஸ்டமா இருக்கு. நான் மட்டுமில்ல. இந்த ஊரில 15, 20 பேர் என்னை மாதிரித்தான் ஊனமாயிருக்கிறாங்க. கால் இல்லை. கையில்லை. சிலருக்குக் கண்ணில்லை. பொம்பிளைகளும் இப்பிடி இருக்கினம். எனக்காவது பொய்க்கால் இருக்கு. மத்தவங்களுக்கு அதுகூட இல்ல. பொய்க்கால், பொய்க்கை வாங்கிப்போட அவங்களிட்ட வசதியில்ல. உதவிக்கும் ஒருதருமில்ல. கஸ்டப்படுகினம்" விநாயக மூர்த்தியின் குரலில் கவலை தோய்ந்திருந்தது.

யுத்தத்தினால் இந்தக் கிராமம் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. 30 விதவைகள் இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கூறினார்கள். அதுமட்டுமன்றி சுமார் பத்துவரையிலான கணவர்கள் தமது மனைவிகளை இழந்து கஸ்டப்படுகிறார்களாம். குடும்பத்தைக் கொண்டு நடத்துவது, பிள்ளைகளைப் பராமரிப்பதில் உதவியின்றி தடுமாறுகிறார்களாம்.

பிள்ளைகளுக்கு உடைந்த பாடசாலையில் தான் படிப்பு நடக்கிறது. தளபாடங்கள் இல்லை. தரப்பாள்களை விரித்து அதில் இருந்துதான் படிக்கிறார்கள். அதிபர் ஆசிரியர்களுக்கும் தளபாடங்கள் இல்லை. மிஞ்சிக் கிடந்த ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கான தளபாடங்களைத்தான் பெரிய வகுப்பு மாணவர்களும், அதிபர், ஆசிரியர்களும் பயன்படுத்துகின்றார்கள். உடைந்த பாடசாலையைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இது குறித்து சரியான விபரங்களைப் பெறுவதற்கு அதிபரோ, ஆசிரியர்களோ அந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருக்கவில்லை.

புதுவெட்டுவானுக்கும் மல்லாவிக்கும் இடையில் இந்தக் கிராமத்தின் ஊடாகவே பேருந்து சேவை நடத்தப்படுகின்றது. தேவைகளுக்காக இந்த ஊர்மக்கள் மல்லாவிக்குத் தான் போய்வருகிறார்கள்.

"காலையில ஒரு பஸ். பின்னேரத்தில ஒரு பஸ். ஆறு மணிக்கு மல்லாவிக்கு வெளிக்கிட்டால், பின்னேரம் 6 மணி பஸ்சிலதான் வீடு திரும்பலாம். இடையில போக்குவரத்து வசதியெண்டு எதுவுமே இல்லை. ஊரில சின்ன பள்ளிக்கூடந்தான். ஏஎல் படிக்கிற பிள்ளைகள் மல்லாவிக்குத்தான் போகவேணும். கொஞ்ச பிள்ளைகள் அப்பிடி போய்வருகுதுகள். பஸ் போக்குவரத்து கூட்ட வேணும். அப்பதான் அவசரம் அந்தரத் தேவைகளுக்கு நாங்கள் மல்லாவிக்கோ அல்லது மாங்குளம், வவுனியாவுக்கோ போய்வரலாம். இப்ப வெளியிடத்திற்குப் போறதாக இருந்தால் போக்குவரத்துக்கே இரண்டு நாள் வேணும்" என தெரிவித்தார் விநாயகமூர்த்தி.

> " பிள்ளைகளுக்கு உடைந்த பாடசாலையில் தான் படிப்பு நடக்கிறது. தளபாடங்கள் இல்லை. தரப்பாள்களை விரித்து அதில் இருந்துதான் படிக்கிறார்கள். அதிபர் ஆசிரியர்களுக்கும் தளபாடங்கள் இல்லை. மிஞ்சிக் கிடந்த ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கான தளபாடங்களைத்தான் பெரிய வகுப்பு மாணவர்களும், அதிபர், ஆசிரியர்களும் பயன்படுத்துகின்றார்கள். உடைந்த பாடசாலையைத் திருத்துவதற் கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இது குறித்து சரியான விபரங்களைப் பெறுவதற்கு அதிபரோ, ஆசிரியர்களோ அந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருக்கவில்லை.. "

செம்மண் வீதிகளாக இருந்தாலும், மல்லாவி, துணுக்காய், பாண்டியன்குளம் பகுதி வீதிகள் வாகனப் போக்குவரத்துக்கு வசதியாக இருந்தன. ஐயங்கன்குளத்தில் இருந்து நாடாளுமன்றக்குழு மல்லாவிக்குத் திரும்பியது. ஒன்றிரண்டு உணவுக் கடைகள்தான் இருந்தன. பிற்பகல் இரண்டு மணிக்கு மேலாகிவிட்டது. நாடாளுமன்றக் குழுவில் சென்றிருந்த அனைவருக்கும் மதிய உணவு தேடுவது கஸ்டமாக இருந்தது. சிலருக்கு சோறு கிடைத்தது. பலருக்குச் சிற்றுண்டி, வடை, ரோல்ஸ், மோதகம் என்ற சிற்றுண்டி வகைகளில் வன்னிப்பிரதேசத்திற்கே உரியதும், பிரபல்யமானதுமான மிதிவெடியும் அங்கு இருந்தது.

போர்க்காலத்தில் கண்ணிவெடிகள், மிதிவெடிகளின் பயன்பாடு மோதல் பிரதேசமாகிய வன்னிப் பகுதியில் மிகவும் அதிகமாக இருந்தது. இராணுவத்தினருக்கு எதிராக விடுதலைப்புலிகள் இவற்றைப் பெருமளவில் பயன்படுத்தியிருந்தார்கள். மோதல்களில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் மற்றும் இராணுவத்தினர் மத்தியில் இந்தச் சொற்களின் பயன்பாடு மிகவும் அதிகமாக இருந்தது. புலிகள் மிதிவெடி என்பார்கள். இராணுவத்தினர் ஜொனி என்பார்கள். இவற்றினால் அதிக சேதத்தை ஏற்படுத்தி எதிரியின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியும் என்பதனால் போரின்போது தாக்குதல் உத்திக்காக இவைகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. இந்தப் பயன்பாடு பொதுமக்களையும் பதம்பார்க்கத் தவறவில்லை. அதனால் பொதுமக்கள் மத்தியிலும் இந்தப் பெயர்கள் பிரபல்யம் பெற்றிருந்தன. அதனையொட்டி, வன்னிப்பிரதேச உணவக உரிமையாளர்களும், வியாபார உத்திக்காக மிதிவெடி என்ற பெயரில் ஒரு சிற்றுண்டியையும் அறிமுகப்படுத்தியிருந்தார்கள். இறைச்சி அல்லது மரக்கறியைப் பயன்படுத்தி ரோல்ஸ் தயாரிக்கும் வகையில் இந்த மிதிவெடியைத் தயாரிப்பார்கள். இதன் அளவு பெரியது. ஒரு நாளைக்கு ஒரு மிதிவெடி போதும் என்று சிலர் சொல்வார்கள். யுத்தம் முடிந்து ஏ9 வீதி திறக்கப்பட்டுள்ளதை யடுத்து, வடபகுதிக்குச் செல்கின்ற தென்பகுதி மக்கள் மத்தியிலும் இந்தச் சிற்றுண்டி பிரபல்யம் பெற்றிருப்பதாக ஆங்கில, சிங்கள ஊடகங்கள் எழுதியிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனால், நாடாளுமன்றக் குழுவில் இருந்த தென்பகுதியைச் சேர்ந்த காவல்துறையினர் இந்த மிதிவெடியை விருப்பத்தோடு வாங்கி உண்டார்கள்.

மல்லாவியில் இருந்து வவுனிக்குளத்தை நோக்கிப் புறப்பட்டது நாடாளுமன்றக் குழுவின் வாகனத் தொடரணி. வவுனிக்குளம் சிவன்கோவிலைச் சென்று பார்ப்பது என தீர்மானிக்கப்பட்டிருந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ளது வவுனிக்குளம். வவுனிக்குளம் சிவன்கோவில் அந்தப் பிரதேசத்தில் உள்ள சிவபுரம் என்ற ஊரில் அமைந்திருக்கின்றது. ஊரிலிருந்து ஓர் ஒதுக்குப் புறமாக உயர்ந்து நிமிர்ந்து நின்றிருந்தது கோவில். வீதிகள் வெறிச்சோடியிருந்த போதிலும், கோவிலில் ஆட்கள் இருந்தார்கள். நாடாளுமன்றக் குழு அங்கு சென்ற அன்றைய தினம் தான், இரண்டு வருடங்களின் பின்பு அந்த ஆலயம் முதன்முதலாக முழுமையாகத் திறக்கப்பட்டு பிரயாச்சித்த கும்பாபிஷேகம் நடைபெற்று முடிந்திருந்தது.

கிரியைகள் முடிந்து, ஆலய விழா பணிகளில் பங்கெடுத்து உழைத்தவர்களை அறங்காவலர் சபையினர் கௌரவித்துக் கொண்டிருந்தார்கள். ஒலிபெருக்கி மூலமாக இதனைக் கேட்கக் கூடியதாக இருந்தது. நாடாளுமன்றக் குழுவினர் வந்திருப்பதை அறிந்ததும், அறங்காவலர் சபையினர் ஓடிவந்து வரவேற்று அழைத்துச்சென்றார்கள். கௌரவிப்பு வைபவம் இறுதித் தறுவாயில் இருந்ததாகவும், அதனால் நாடாளுமன்றக் குழுவினரின் வருகை அதனைப் பாதிக்கவில்லை என்றும் சொன்னார்கள். விசேட அர்ச்சனையின் பின்னர், அறங்காவலர் சபையினர் ஆலயத்தைச் சுற்றிக் காட்டினார்கள்.

வன்னிப்பிரதேச சிவன்கோவில்களில் இதுவும் முக்கியமானது. வரலாற்று முக்கியத்துவம் பெற்ற ஆலயம் என குறிப்பிட்டார்கள். யுத்த மோதல்களின்போது ஆலய கட்டிடங்களுக்குப் பெரிய சேதங்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆயினும் பெறுமதியான பொருட்களைக் காணவில்லை. ஆலயத்தின் முக்கிய தடயங்கள் சில உடைக்கப்பட்டிருந்ததாக அறங்காவலர் சபையினர் கூறினார்கள்.

கந்தையா பரமநாதன் ஓர் ஓய்வு பெற்ற விதானையார். வயது அறுபதுக்கு மேலாகிறது. சிவன்கோவில் அறங்காவலர் சபையைச் சேர்ந்தவர். இந்த ஆலயம் இரண்டாயிரத்து ஐநூறு வருடங்கள் பழைமை வாய்ந்தது என சொல்லப்படுகின்றது. வவுனிக்குளம் கட்டப்பட்டபோது, கனரக வாகனங்களைப் பயன்படுத்தி வேலைகள் செய்த போது காலத்தால் அழிந்து மறைந்து கிடந்த இந்த ஆலயத்தின் வரலாற்று அடையாளங்கள் வெளிப்பட்டதாகவும், அதன் பின்னர் இந்த ஆலயம் இருந்த இடத்தில் முதன் முதலாக பிள்ளையார் கோவில் அமைக்கப்பட்டு பின்னர் சிவன்கோவிலுக்கான கட்டுமாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் கந்தையா பரமநாதன் கூறுகின்றார்.

"மண்ணுக்குள்ள மறைந்து கிடந்த பழைய ஆலயத்தின் பழங்காலத்து லிங்கம் இங்க பின்னால இருக்கு. தனியா பிரதிஸ்டை செய்யப்பட்டிருக்கு. பின்னர் காசியில் இருந்து கொண்டு வந்த லிங்கம்தான் கருவறையில பிரதிஸ்டைபண்ணப்பட்டிருக்கு உள்ளுக்கு. இதேபோன்று அந்தப் பிரதேசத்தில் உள்ள பனங்காமத்திலும் ஒரு சிவன்கோவில் இருக்கு. இரண்டு கோவில்களுக்கும் இடையில் முன்னர் நெருங்கிய தொடர்பிருந்தது. வன்னியை ஆட்சி செய்த பண்டார வன்னியன், கைலை வன்னியன் இருவராலும் பூஜிக்கப்பட்ட பஞ்சலிங்கம் உள்ள கோவில்தான் பனங்காமம் சிவன்கோவில். பனங்காமம் கோவிலில் இருந்த லிங்கங்களில் ஒன்றுதான் வவுனியா சாஸ்திரி கூழாங்குளத்தில வைக்கப்பட்டிருக்கு. ஒரு லிங்கத்தைக் காணேல்ல. மற்ற மூன்று லிங்கங்களும் பனங்காமம் கோவிலில இருக்கு. பனங்காமம் சிவன்கோவில் இன்னும் திறக்கப்படவில்லை. பாலஸ்தானம் நடைபெற்று வேலைகள் நடக்குது. அந்தக் கோவிலைச் சுற்றியிருந்த பெருமளவான மக்கள் ஊருக்குத் திரும்பிவிட்டார்கள். அந்தக் கோவிலின் கும்பாபிஷேகமும் விரைவில் நடக்கும்" என்றார் கந்தையா பரமநாதன்.

ஆலயத்தின் உள்ளே சென்றபோது அதன் பழைமையையும் பூர்வீகத்தையும் உணர முடிந்தது. ஆலய வளவின் பின்பகுதியில் நேர்த்தியாகக் கட்டப்பட்டிருந்த கட்டிடத்தில் ஆலயத்தின் பழைய லிங்கம் எனச் சொல்லப்படுகின்ற லிங்கத்தை வைத்திருந்தார்கள்.

சுற்றுமதில் அமைத்து ஆலயம் நேர்த்தியாக இருந்தது. மதிலருகில் கோவிலின் பின்பகுதியில் வளவுக்குள்ளேயே பண்டைய எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நீளமான கற்கள் இருந்தன. அவைகள் முன்னர் எடுக்கப்பட்ட கற்கள் எனச் சொன்னார்கள். அந்தக் கற்கள் இப்போது உடைந்து கிடந்தன. இந்த ஆலயத்தின் பழைமை குறித்து அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என அறங்காவலர் சபையினர் கூறுகின்றார்கள். அவ்வாறான ஆராய்ச்சியின் மூலம் இந்தப் பிரதேசத்தின் பழைய வரலாறு, பண்பாடு என்பவற்றைப்பற்றிய விபரங்களைப் பெறமுடியும் என்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்தார்கள்.

# வாழ்கை கவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...



**Elaguppllai (Mike) Srinathan B.Sc**
**Sales Representative**
**Dir: 416-276-1225 Off: 905-470-9800**
**Email: esrinathan@trebnet.com**

**Mccowan/Ellesmere**



**$189,900**
Condo Apt., Bed rooms 1 Washrooms 1, Excellent Location, Everything Is At Your Foot Steps. Scarborough Town Centre, Ttc/Rt Line, Go Bus, Ymca

**Salem/Rossland**



**$369,900**
Detached 2 Storey, Bed rooms 4, . Washrooms 3, 2 Full Size Garages, Family Rm. With Fireplace And Bsmt. With R/I 3-Pc Washroom.

**Brimley/Eglinton E.**



**$249,900**
Detached Bungalow Bed rooms 3, Washroom 1, Large Principle Rooms. Whole House Clad In Angel Stone. Bathroom Updated.

SOLD

**Hoover Park/Ninth Line**



**$308,000**
Town house 3 storey , Bed rooms 2 Washrooms 2, Beautifully Lndspd Front Entrance Close To All Amenities,Parks,Schools,Shopping,

**Highway 7 / Main**



**$318,900**
Town house 3 storey Bedrooms 3+1, Washrooms 3, Wellover 1,800 Sq Ft Of Envious Living!!! Walk Out Basement! Ttc/Yrt Finch Subway

**Kennedy/Steeles**



**$349,900**
Link 2 Story, Bedrooms 3+1, Wasroom 3, New Windows & Door To Backyard ,Newer Central Air Conditioning And New Hi Efficiency Furnace

**16th& Cornell Centre/Bur Oak**



**$384,900**
Semi Detached 3 Story, Bed rooms 3 Washromss 3,Excellent Floor Plan 2080 Sq Ft Of Luxury !! Upgraded, Clean, Well Kept, Modern, Decorated

**9th Line/Reeves Way**



**$399,000**
Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3,3 Years New**Approx 1900 Sq Ft**Upgraded Kitchen Cabinets**Hardwood Floors

**9th Line/14th Ave**



**$399,900**
Semi Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3, Approx. 1700Sf. Bright & Spacious Layout. Boasts 9' Ceiling On Main Flr.

**Mccowan/Denison**



**$418,800**
Link 2 story, Bed rooms 4 Washrooms 4, Spacious 2000 Sq Ft Model With Main Floor Laundry And Family Room Walking Distance To Schools

**Markham/Steeles**



**$429,900**
Detached 2 Story, Bedrooms 3, Washrooms 3, Fully Detached, Brick, Home In A Safe And Quiet Area. Close To All Amenities

**East Of 10th Line (Ressor Rd)**



**$434, 888**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3, Hardwood Flooring. Gas Fireplace, Double Car Garage With Direct Access To House

**Hwy 48/Bur Oak/16th Ave**



**$449,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, Upgraded Detached All Brick 4Br Home Close To Schls,Swan Lake,Park,Hospital

**Ninth Line & Highway 407**



**$449,900**
Detached 2 Story, Bedrooms 3 Washrooms 3, Double Door Entrance. Hardwood & Ceramic Flrs Thruout Main Lvl. Upgraded Kitchen

**Markham/Highglen**



**$475,000**
Detached 2 Story, Bedrooms 3+1, Washroom 4, Less Than 10Yrs New Link Detached With Finished Basement, Close To Schools, Shopping,

**Cornell Centre Blvd/16th Ave.**



**$489,990**
Detached 2 Story, Bedrooms 3+1, Washroom 3, Brand New Home, Hardwood Floors On Main Floor, Ceramic Floors In Kitchen

**Highglen/E Of Middlefield**



**$499,000**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3 Lots Of Upgrades,Hardwood Floors Through Out,Fully Fenced,Enclosed Front Porch

**Mingay/Major Mackenzie**



**$569,900**
Detached 2 Story, Bedrooms 3 Washrooms 3, 2200 Sq Ft Home 6 Years Old, 4'Hrdwd Fl On Liv, Din & Hallway, Fenced Yd W/2 Gates

**16th Ave./9th Line**



**$575,000**
Detached 2 Story Bed rooms 3+1, Washrooms 3, Over 2500 Sq.Ft., Thousands Spent On Upgrades,Granite Kit.Counter Tops

**14th Ave/ 9th Line**



**$599,000**
Detached 2 Story Bed rooms 5, Washrooms 4, Hardwood Floor, Upgrade Cabinet, Close To Public

**10th Line/ Mantle Ave**



**$628,800**
Detached 2 storey,. Bed rooms 4, Washrooms 3, Walk Out To Open Balcony, Upgd W/Hrdwd/Ceramic Fl On M/F*Kit.W/Tall

**Warden/19th Ave**



**$1,029,000**
Detached 2 storey,. Bed rooms 3+2, Washrooms 4, All Work Done '04/'05.Orig.Home 1334Sqft-2120Sqft.Addition-3454 Sqft

**Sales of Business**



**$1.15million**
Restaurant with a banquet hall property in Toronto for sale
(Business with property

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
**Independently Owned and Operated**
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# மாணிக்கவாசகர் செய்த குற்றம்

நாள்: 02.01.2010, சனிக்கிழமை
இடம்: பத்திரகாளி அம்மன் ஆலயம்,
ஸ்காபரோ
நிகழ்வு: திருவாசக விழா
ஏற்பாடு: இந்து சமயப் பேரவை

தலைமையுரை

வணக்கத்துக்குரிய அந்தணப் பெருமக்களே!
பேரவை உறுப்பினர்களே!
மற்றுமுள்ள அடியார்களே!

செயலாளர் திருமுறைச்செல்வர் சிவ முத்துலிங்கம் அவர்கள் வரவேற்புரையில் விழாவுக்கு கூட்டம் அதிகம் இல்லை என்று குறைப்பட்டுக்கொண்டார். பசி வந்திடப் பத்தும் பறந்து போகும். கனடாவில் குளிர் வந்திடக் கூட்டம் குறைந்து போகும். இது எமக்குத் தெரிந்த சங்கதிதானே.

இப்படி ஒரு நிலைமை மாணிக்கவாசகருக்கும் ஏற்பட்டது. பொய்யான வாழ்க்கையை விட்டுச் சிவபெருமானை அடைய வாருங்கள் என்று அடியார்களை ஒருநாள் அவர் அழைத்தார். ஒருசிலரே வந்தார்கள். ஆனால் அது குறித்து அவர் கவலைப்படவில்லை.

நிற்பார் நிற்க நில்லா உலகில்
நில்லோம் இனிநாம் செல்வோமே

என்று சேர்ந்தவர்களுடன் அவர் சென்றுவிட்டார். அவரைப்போல நாமும் வராதவர்களுக்குக் காத்துக்கொண்டிராது வந்தவர்களோடு உறவாடுவோம்.

மாணிக்கவாசகரைப்பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள். இன்றுபோல் திருவாசகத்தை எத்தனையோ ஆண்டுகளாக முற்றோதி வருகிறீர்கள். எமது திருவாசக விழாக்களில் பல அறிஞர்களின் உரைகளையும் கேட்டுவந்திருக்கிறீர்கள். அதனால் இன்று வித்தியாசமான ஒரு கேள்வியுடன் எனது பேச்சைத் தொடங்குகின்றேன்.

மாணிக்கவாசகர் ஒரு குற்றம் செய்திருக்கிறார். அதுபற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?

பாண்டியனுக்குத் தலைமை அமைச்சராக இருந்தவர் வாதவூரர். மிகுந்த பொறுப்பான பதவி. பாண்டியனின் மதிப்புக்கும் நம்பிக்கைக்குமுரிய அமைச்சர். அவரிடம் ஒருநாள் வேண்டிய பொன்னையும் பொருளையும் கொடுத்துக் குதிரை வாங்கும் படி சோழநாட்டுத் துறைமுகத்துக்குப் பரிவாரங்களுடன் அவரை மன்னன் அனுப்பிவைத்தான். அவரும் அப்படியே செய்கின்றேன் என்று புறப்பட்டார்.

புறப்பட்டவர் வழியில் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின்கீழ் ஞானாசிரிய வடிவத்தில் எழுந்தருளிய இறைவனைக் கண்டு அவருக்கு அடிமையானார். குதிரை வாங்கக் கொண்டு சென்ற பொருளைத் திருக்கோயிற் பணியிலும் சிவடினயார்களுக்கு உதவுவதிலும் செலவு செய்தார்.

சிவபெருமானுக்கு அடிமையானது தவறில்லை. ஆனால் குதிரை வாங்கக் கொண்டு சென்ற பொருளிற் குதிரை வாங்காததால், ஒப்புக்கொண்ட கடமையினின்றும் தவறிய குற்றத்துக் குரியவராகின்றார் வாதவூரர்.

குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை. நாம் மாணிக்கவாசகரில் குற்றங் கண்டால் திருவாசகமு மில்லைச் சிவனுமில்லை என்றாகிவிடும். அதற்காக இவர் செய்தது குற்றமில்லை என்று சொல்லிவிடமுடியுமா? ஒரு குழந்தை விளையாடிக் கொண்டிருக் கிறது. தாய் வருகிறாள். தாயைக் கண்டதும் விளையாட்டுப் பொருள்களை எல்லாம் அப்படியே விட்டு விட்டு ஓடிப்போய்த் தாயைக் கட்டிப்பிடிப்பது போல வாதவூரரும் ஞானாசிரியரைக் கண்டதும் தன்னை மறந்தார்; எல்லாவற்றையும் துறந்தார்.

இந்த இடத்திலே சரணாகதி அல்லது சரண் அடைதல் பற்றிச் சிறிது சிந்தித்தல் நல்லது. அப்பர் பெருமானின் முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் என்ற தேவாரம் இதனை நன்கு விளக்குகின்றது.

தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

என்ற நிலைபற்றி நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். இது சரணாகதி நிலை. சரண் அடைய வந்தவரைப் பார்த்து உன்னை இப்பொழுது ஏற்றுக்கொள்ள முடியாது. நீ போய் உனது பொறுப்புக்களை முடித்துக்கொண்டு வா என்று சிவபெருமான் சொல்லவில்லை. தஞ்சம் கேட்டு வந்தவருக்கு முதலிலே அபயம் அளிப்பதுதான் முறை. கனடாவும் அதனைச் செய்தபடியால்தானே நாங்கள் இங்கே இருக்கின்றோம். நீதான் கதி என்று வந்த சுக்கிரீவனை இராமன் முதலிலே ஏற்றுக் கொண்டான். ஏற்றுக்கொண்ட பின்னர்தான் அவனுடைய பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தான். விபீடனன் இராமனைச் சரண் அடைந்ததும் இதுபோலத்தான்.

சிவபெருமானும் முதலிலே ஆட்கொண்டார். பின்னர் தமது அடியவரின் பிரச்சனைகளை அவரே தீர்த்து வைத்தார்.

தான் செய்தது பிழை என்பது வாதவூரருக்கும் தெரியும். அதனை இறைவன் பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கை அவருக்கு. பின்னாலே பாடுகின்றார்...

அன்றே எந்தன் ஆவியும் உடலும் உடைமை
எல்லாமும்
குன்றே அனையாய் என்னையாட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ
இதற்கு நாயகமே.



சரண் அடைதல் என்பது சைவசித்தாந்தத்தில் பசு பதியை அடைதல். 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் என்ற தேவாரம்' இதனையே விளக்குகின்றது. பக்குவம் பெற்ற ஆன்மா இறைவனை அடைதல் இயல்பு என்பதனை,

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில்
உணர்த்தவிட்டு
அந்நியம் இன்மையில் அரன்கழல் செலுமே

என்று சிவஞானபோதம் எட்டாம் நூற்பா விளக்குகின்றது. இதுவே வாதவூரர் வாழ்வில் நடந்திருக்கின்றது.

இனி, வாதவூரர் செலவு செய்த பொருள் உண்மையில் பாண்டியனின் பொருளல்ல. உலகத்துப் பொருள்கள் அனைத்தும் இறைவனது பொருள். அவனுடைய பொருளை அவனுக்கே வாதவூரர் செலவுசெய்தார். அவ்வகையில் அவர் செய்ததை உலகியல் வாதிகள் குற்றமாகக் கொண்டாலும் ஆன்மீகவாதிகள் குற்றமாகக் கொள்வதில்லை.

பக்குவம் பெற்றவர் செயல்களின் இயல்புகளைப் பக்குவம் பெற்றவர்களே அறிவார்கள். எம்போன்றவர்களால் அவற்றை விளங்கிக் கொள்வது கடினம்.

உடல் பொருள் ஆவி அனைத்தையும் இறைவனுக்கு ஒப்புவித்தபின், குறை என்ன, குற்றம் என்ன? எல்லாவற்றையும் அவனே பார்த்துக்கொள்வான் என்ற பாடத்தையே மாணிக்க வாசகரின் வாழ்க்கை எமக்குப் படிப்பிக்கின்றது.

வணக்கம்.



கவிஞர் வி. கந்தவனம்




# ஐந்தறிவு ஆசான்கள்

## ஓடும் நீர் உறைவதில்லை 11 இரண்டாம் பாகம்

இயற்கை என்பது ஒரு ஒழுங்குமுறை. நாம் காணும் உலகம் ஒரு ஒழுங்கு முறைக்கேற்ப இயங்கிக்கொண்டிருக்கின்றது. இந்த ஒழுங்கு முறையில்தான் எமது வாழ்க்கையும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஒழுங்கு முறையை நாம் பின்பற்றும்போது வாழ்வு இலகுவாகவும் மகிழ்ச்சியானதாகவும் அமைந்து விடுகின்றது. மாறாக இந்த ஒழுங்கு முறைக்கு எதிராக நாம் செயற்படுவோமாயின் நாமாகவே பிரச்சினைகளை உருவாக்கித் துன்பத்துக்குள்ளாகின்றோம். இந்த நிலையிலிருந்து எம்மை விடுவிப்பதற்கு நாம் முதலில் அறிந்து கொள்ளவேண்டிய விடயம் என்ன என்பது பற்றிய பார்வையாக இந்தக் கட்டுரை அமைகின்றது.

ஒப்பீட்டுரீதியில், இவ்வுலகில் வாழும் உயிரினங்களில் மனித இனம் அதிகளவு சிக்கல்களையும், சோதனைகளையும், வேதனைகளையும் எதிர்கொள்ள நேரிடுகிறது என்பது எல்லோரதும் பொதுவான கருத்தாகும். இதற்குப் பல காரணங்களை முன்வைக்கின்றோம். முக்கிய மாக எமது சிக்கல்களுக்கும் பிரச்சனைகளுக்கும் நாமல்லாத வேறு காரணிகளை முன்வைக்கின்றோம். பிறப்பு நமது தெரிவல்ல. ஆனால் வாழ்தல் என்பது எமது தெரிவு மட்டுமே என்பதை நாம் ஏற்றுக்கொள்வதில்லை. அதாவது நமது தெரிவுகள் தான் நமது வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன என்ற உண்மையை நாம் தவிர்த்து விடுகிறோம். இதற்கு அடிப்படையாக அமைவது இயற்கையின் ஒழுங்குமுறை பற்றிய விளக்கம் இன்மையே.

மனிதர்களாகிய நாமும் இயற்கையின் பகுதியாக இருந்தாலும் அதே இயற்கையின் பகுதியாக இருக்கின்ற விலங்குகள்-பறவைகள் போல் இயற்கையின் இயல்பான ஒழுங்குமுறைக்கு ஏற்ப எமது செயற்பாடுகளை முன்னெடுக்கத் தவறி விடுகின்றோம். மரங்கள் கூட பருவ காலங்களுக்கு ஏற்பத் தம்மை மாற்றிக் கொள்கின்றன. அந்த மாற்றங்களின் மூலம் தமது வாழ்தலை சிக்கல்கள்-சிரமங்கள் இன்றி நகர்த்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் நாமோ இந்த ஒழுங்கு முறையிலிருந்து எம்மைப் பலவந்தமாக விலக்கி வைத்துகொண்டிருக்கின்றோம். இந்த நிலைக்கு காரணங்களாக அமைபவை எவை என்பதை அறிவது எமது முதலாவது தேவையாகக் கருத்திற்கொண்டு எம்மைப் பற்றிய எமது பார்வைகள் சிலவற்றைப் பார்ப்போம்.

மனிதன் ஆறறிவு படைத்தவன். மனிதப் பிறவியே மகத்தான பிறவி. இந்த உலகியல் உண்மைகளை உணரவும் உணர்த்தவும் மனிதனால் தான் முடியும். மனிதன் ஒரு சமூகப் பிராணி. கூடி வாழ்தல் மனித வாழ்வின் அடிப்படை. மனிதனுக்குக் குடும்பம், குழந்தைகள், அவர்களின் எதிர்காலம் என்ற வாழ்க்கையின் சிறப்பம்சங்கள் என சிலவற்றை முன்வைத்து எம்மை உயர்வாக எண்ணிக்கொள்கிறோம். உண்மையில் இவை எவையும் தவறானவையல்ல.

இப்போது, விலங்குகளின் பார்வையில் சில விடயங்களைப் பார்ப்போம். நாங்கள் ஐந்தறிவு படைத்தவர்கள். எங்களது அடிப்படை உடலும் உள்ளுணர்வும் மட்டும்தான். எங்களுக்கு மனம் என்று ஒன்று இல்லை. இதனால் இயற்கையின் ஒழுங்கு முறையை எதிர்ப்பதற்கு மனிதர்களின் மனத்தால் உருவாக்கப்படும் பொறாமை, வஞ்சகம், சூது, களவு, பேராசை, ஆணவம், அகம்பாவம் என்பன எம்மிடம் இல்லை.



தொடர்ச்சியான நிகழ்வுகள் உள்ளன. மனிதனின் தேவைகள் விலங்குகளின் தேவையிலும் அதிகமானவை யாகவும் வேறுபட்டவையாகவும் அமைகின்றன. கொடுத்தலும் பெறுதலும் மனிதனது நாளாந்த வாழ்வியல் நடவடிக்கைகளின் அடிப்படைகளாகின்றன. விலங்குகளின் வாழ்வு நகர்த்தப்படுகின்றது. ஆனால் மனிதனின் வாழ்வு நகர்த்தப்பட வேண்டியதாகின்றது. விலங்குகளின் தேவைகள் இயற்கையின் நேரடிப் பங்களிப்பால் பூர்த்தியாக்கப்படுகின்றன. ஆனால் மனிதனோ பெரும்பாலான தனது தேவைகளை உருமாற்றம் செய்தவன் மூலமே பூர்த்தி செய்ய வேண்டியுள்ளான். இவ்வாறு மனிதர்களாகிய நாம் எமது தடுமாற்றமற்ற வாழ்க்கையைக் கொண்டிருக்கின்றோம். உள்ளுணர்வு எப்போதுமே இயற்கையுடன் இரண்டறக் கலந்தது என்பதால் எங்களின் ஒரே வழி இயற்கையின் வழிதான். இயற்கை எமது வாழ்வுக்குத் தேவையானவற்றைத் தந்திருந்தாலும் அதை அடைவதற்கு நாங்களும் முயற்சி செய்பவர்கள் தான். அந்த முயற்சியில் எங்களுக்கு முழுமையான மகிழ்ச்சி கிடைக்கின்றது. கிடைப்பதில் பூரண திருப்தி இருக்கின்றது. எமக்கு இயற்கையால் தரப்பட்டுள்ள எந்த வளங்களையும் நாம் வீணாக்குவதில்லை. நான் பெரிது நீ பெரிது என்ற போராட்டம் எங்களிடத்தில் இல்லை. பதவி ஆசை இல்லை. அதனால் மனிதர்களைப்போல் எங்கள் இனத்தில் ஒருவரை ஒருவர் கொலை செய்வதில்லை. எங்களின் மொழி ஒரே ஒரு மொழி. அது இயற்கையின் மொழி. அது உள்ளுணர்வுக்கான மொழி. ஒருவரை ஒருவர் புனிதமாகப் புரிவதற்கான அற்புதமான மொழி. வார்த்தைகளற்ற மொழி. அதனால் மனிதர்களைப்போல் வாள் வீச்சுக்கள் எங்களிடத்தில் இல்லை. எங்களது சுய தன்மையிலிருந்து நாம் மாறுவதில்லை. எங்களது அடிப்படைக் குணாதிசயங்களில் இருந்தும் நாங்கள் மாறுவதே இல்லை. இதனால் எங்கள் மீதான நம்பகத் தன்மை மிகவும் வெளிப்படையானது. எங்களுக்கு நேற்றைய சுமைகளும் இல்லை, நாளைய எதிர்பார்ப்புக்களும் இல்லை. நாங்கள் நிகழ் காலத்தில் மட்டும் தான் வாழ்கிறோம்.....

விலங்குகளின் மொழி இயற்கையின் மொழி. தடுமாற்றமற்றது. குழந்தையின் மொழியும் இயற்கையின் மொழி தான். எப்பொழுது ஒரு குழந்தை மனிதனின் மொழிக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக்கொள்கிறதோ அப்பொழுது முதல் இயற்கையின் மொழியைப் புரிந்துகொள்ளும் தகுதியை இழந்து விடுகிறது. நாம் எல்லோருமே இயற்கையின் மொழியைப் புரிந்துகொள்ளும் தகுதியை இழந்து விட்டோம். எம்மை நாம் தொலைத்து விட்டோம். நாம் தொலைந்து விட்டோம் என்பதைக் கூடப் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு எம்மைத் தொலைத்துவிட்டோம். இயற்கையின்

KG Master-kgmaster@rogers.com

மொழியைப் புரிந்து கொள்வதற்கு எமக்கு இருப்பது ஒரேயொரு வாய்ப்புத்தான். அது எம்மை நாம் புரிந்து கொள்வதுதான். அதற்கு மீண்டும் உள்ளுணர்வுடன் நாம் தொடர்புகொள்ளல் அவசியமாகின்றது.

அதிஷ்டவசமாக, இயற்கையுடன் முற்று முழுதாக இணைந்து வாழ்கின்ற, குண இயல்பில் நிரந்தரத் தன்மையுடைய அதாவது கணத்துக்குக் கணம் மாறுபடுகின்ற குண இயல்புகளைக் கொண்டிராத அத்தனை ஜீவராசிகளும் எம்மை எமது உள்ளுணர்வுடன் இணைப்பதற்குத் தகுதி வாய்ந்தவைகளே.

ஆம் வாசகர்களே!
உடலும் உள்ளுணர்வும் தான் எமது பிறப்பின் அடிப்படை. ஆனால் மனம் என்ற ஒன்றை உள்வாங்கி உள்ளுணர்வைப் புறக்கணித்து விடுகிறோம். அறிவியலையும் விஞ்ஞானத்தையும் வியக்கத்தக்க முறையில் வேகமாக நகர்த்திக் கொண்டிருக்கும் நாம், நமது நாளாந்த வாழ்க்கையை நகர்த்துவதற்குப் போராடிக்கொண்டிருக்கிறோம். ஆறறிவு எமக்கு ஒரு வரப்பிரசாதமாக இருந்தாலும் அதைப் பயன்படுத்தி ஐந்தறிவு ஆசான்களிடம் கற்றுக்கொள்ள வேண்டியவை அளப்பரியன என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- நன்றியுடன் KG Master

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -



மஹராஜியின் உரைகள்

On DVD
இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

On TV
Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# ரொறொன்ரோவின் புதிய நகர முதல்வர்

## றொப் போர்ட் (*Rob Ford*)

பத்து வருட அரசியல் அனுபவம் கொண்ட றொப் போர்ட் கடந்த ஒக்ரோபர் 25, 2010ஆம் ஆண்டு நகர முதல்வர் பதவிக்குப் போட்டியிட்டு 379,278 (47.18%) வாக்குகளைப்பெற்று வெற்றிபெற்றுள்ளார். இவர் 2000ஆம் ஆண்டிலிருந்து ரொறொன்ரோ நகரசபை தேர்தலில் எற்ரோபிக்கோ வட பகுதியின் உறுப்பினராக பதவி வகித்து வந்தார். இவர் பதவி வகித்த இத்தொகுதிக்கு இவரது சகோதரன் Doug Ford இம்முறை தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



றொப் போர்ட்

மே 28,1969 இல் எற்ரோபிக்கோவில் பிறந்த இவர் கால்ரன் பல்கலைக்கழகத்தில் (Carleton University) அரசியல் விஞ்ஞானத்தில் பட்டப்படிப்பினை மேற் கொண்டபோதும் இறுதியில் தனது கல்வியினை பூரணமாக முடித்து பல்கலைக் கழக பட்டத்தினை பெற்றுக்கொள்ளவில்லை.

இவரது தந்தை டக் போர்ட் (Doug Ford) 1995 - 1999 ஆண்டு காலத்தில் கன்ஷவேட்டிவ் (Conservative) கட்சியின் மாகாண அரசின் நாடாளுமன்ற உறுப்பினராக ரொறொன்ரோவில் இருந்து தெரிவு செய்யப்பட்டு பதவி வகித்தவர். செப்ரெம்பர் 22, 2006 இல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மரணமானார்.

இவரது மனைவி றினோற்றா (Renata). இவருக்கு ஸ்ரபனி (Stephanie) எனும் மகளும், டக்ளஸ் (Douglas) என்னும் மகனும் உள்ளனர். இவர்களின் குடும்பத்துக்கென சொந்தமாக “Deco Labels & Tags” என்னும் ஒரு பிறின்ரிங் தொழிற்சாலை உண்டு. இவர்களின் தொழிற்சாலை எற்ரோபிக்கோ பகுதியில் சுமார் 200 ஊழியர்களுடன் தற்போது இயங்கி வருவதுடன் இதன் கிளை நிறுவனங்கள் அமெரிக்காவில் சிக்காகோ நகரிலும் நியூயோர்க் நகரிலும் இயங்கி வருகின்றன. இவர் நகரசபை உறுப்பினராக வருவதற்கு முன்னர் தமது சொந்த தொழிலில் உயர் அதிகாரியாக பதவி வகித்து தங்கள் தொழிற்சாலையினை நடத்தி வந்தார்.

## கனடிய தகவல் தொடர் 135

### அதிகூடிய வாக்குகளினால் மீண்டும் தெரிவு செய்யப்பட்ட மூதாட்டி - மிசிசாகா நகர முதல்வர்

**ஹசால் மக்கல்லின்** (*Hazel Mccallion*)

90 வயதினை அண்மிக்கும் மூதாட்டி ஹசால் மக்கல்லின் இம்முறை பெற்ற மொத்தவாக்குகள் 107,643 (76.40%) ஆகும். இவர் எவராலும் வீழ்த்தவே முடியாது என்ற நிலையில் எப்பொழுது பெற்றுக்கொள்ளும் (76%க்கு மேல்) பலமான வாக்குகளின் வரிசையில் இம்முறையும் பெற்று மீண்டும் மிசிசாக நகரசபை முதல்வர் ஆகியுள்ளார்.

இந்த நகரசபையில் இவரிற்கு அசைக்க முடியாத செல்வாக்கு உள்ளது. இவர் உறுதியான மனோநிலை கொண்டவர். இவர் மக்களின் இதயத்தினை கவர்ந்து கொண்ட நகரசபை முதல்வர் ஆவார். இப்பதவியில் கூடிய காலம் இருக்கும் இவ்வயோதிப மூதாட்டியின் வாழ்க்கையில் சில குறிப்புகள்:

பெப்ரவரி 14, 1921 ஆண்டு கனடாவின் பிரெஞ்சு மொழி பேசும் கியூபெக் மாகாணத்தின் ஒரு கடற்கரை நகரத்தில் பிறந்தார். தந்தையார் ஒரு சிறு மீன்பிடி கம்பனியின் உரிமையாளர் ஆவார். தாயார் வீட்டோடு இருந்து தங்கள் குடும்ப பண்ணை ஒன்றினை நிர்வகித்து வந்தார். இரு பெண் சகோதரர்கள். இரு ஆண் சகோதரர்கள். இவரது கணவன் சாம் மக்கல்லின் (Sam Mccallion). தனது அரசியல் வாழ்வுக்கு உற்சாகம் தந்தவர் தனது கணவன் என இவர் குறிப்பிடுகிறார். சாம் மக்கல்லியோன் 1997 இல் மரணமாகிவிட்டார். இவர்களுக்கு இரு புத்திரர்களும் ஒரு புத்திரியுமாக மூன்று பிள்ளைகளும் ஒரு பேரபிள்ளையும் உண்டு.

இவரின் திருமணத்தின் பரிசாக கணவரின் சகோதரர்கள் மிசிசாகா நகரின் வடமேற்கு பக்கமாக உள்ள ஸ்ரீற்ஸ் வில் (Streets Ville) என்னும் சிறுநகரில் காணி ஒன்றினை திருமண பரிசாக வழங்கினார்கள். இச்சிறு நகரில் திருமண பரிசாக வழங்கப்பட்ட காணியில் கட்டிய வீட்டில் இருந்தே இவரின் அரசியல் வாழ்வு தொடங்கியது. கியூபெக் நகரிலும், மொன்றியல் நகரிலும் தனது கல்வியினை கற்ற இவர் தனது பல்கலைக்கழக கல்வியினை குடும்பத்தில் தனது இளமை காலத்தில் ஏற்பட்ட நிதியியல் பிரச்சினையால் தொடர்ந்து முடித்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது என அவரே குறிப்பிட்டிருந்தார்.

கியூபெக் மாகாணத்தில் உள்ள ஒரு பொறியியல் தொழில் நுட்ப கம்பனியில் பணி புரிந்து வந்த இவர் தனது தொழில் கம்பனியின் இடம் மாற்றலாக ரொறொன்ரோ வுக்கு 1942 இல் இடம்பெயர்ந்து வந்தார். சுமார் 19 வருடங்கள் மொத்தமாக இக்கம்பனியில் பணிபுரிந்து வந்தார்.

1967 இல் தனது அரசியல் வாழ்வினை ஆரம்பித்தார். மிசிசாகா நகரின் வடமேற்கு



ஹசால் மக்கல்லின்

பக்கமாக உள்ள ஸ்ரீற்ஸ் வில் (Streets Ville) நகரசபை உயர் அதிகாரியாக முதலில் பதவி வகித்து வந்தார். பின்னர் சில வருடங்கள் பிரதேச கவுன்சிலர் (Regional Councilor) ஆக பதவி வகித்து வந்தார். இவர் 1970 - 1973 காலத்தில் முதல்வராக பதவி வகித்தார். 1974 இல் இச்சிறுநகரம் மிசிசாகா நகரத்துடன் இணைக்கப்பட்டு பதினொரு அங்கத்தவர்கள் (Councilor Ward) தொகுதியாக உருவாக்கப்பட்டது.

1978இல் முதன்முதலாக மிசிசாக நகரின் முதல்வராக தெரிவு செய்யப்பட்டு, இன்னும் வீழ்த்த முடியாத இந்நகரசபையின் முதல்வராக தமது பதவியினை தொடர்ந்த வண்ணம் உள்ளார். ஒவ்வொரு தேர்தலிலும் 90% வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளை அள்ளிச் செல்பவர். ஆனால் இம்முறை மட்டும் 76.40% வீதத்திற்கு குறைந்துள்ளது. கனடாவில் கடன் சுமைகள் எதுவுமில்லாமல் முன்னேறிவரும் நகராக மிசிசாகாவை உருவாக்கி வரும் பெருமை இவருக்கே உரியது. இதனால் வரலாற்று புகழினையும் பெருமையினையும் தன்னகத்தே கொண்டுள்ளார்.

இவர் பெற்ற விருதுகளும் நகர சபையில் செய்த சாதனைகளும் வளர்ச்சிகளும் ஏராளம். மிசிசாகா நகரில் இவரது பெயரில் Hazel Mccallion Senior Public School என்னும் பாடசாலையும் இயங்கி வருகிறது. என்றோ ஒரு நாள் அவராகவே மிசிசாக நகரசபை அரசியலை விட்டு விலகினாலே தவிர எவராலும் நீக்க முடியாத அளவுக்கு மக்கள் பலத்தினால் வலிமையாக்கப்பட்டவர்.

**இத்தொகுதியில் இவருடன் முதல்வர் பதவிக்கு போட்டியிட்ட தமிழரான ராம் செல்வராஜா 2241 வாக்குகளை பெற்று** போட்டியிட்ட 17பேரில் 6ஆம் இடத்தைப் பெற்றார்.

### மார்க்கம் நகரில் மீண்டும் வெற்றி யீட்டிய முதல்வர் பிராங் ஸகார்பிற்றி (*Frank Scarpitti*)

கடந்த முறை மார்க்கம் நகரின் மொத்த வாக்குகளில் 83.11% வீதத்தினை பெற்று நகரின் முதல்வர் பதவியினை பிடித்துக்கொண்ட பிராங் ஸ்கார்பிற்றி இம்முறை 54,660 வாக்குகளைப் மீண்டும் வெற்றி வாகை சூடியுள்ளார்.

பிராங் 1960ஆம் ஆண்டு பிறந்தார். இவரின் தந்தை இத்தாலியில் ஒரு விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர். 1965ஆம் ஆண்டு தனது ஐந்து வயதில் மார்க்கம் நகருக்கு குடிபெயர்ந்தார். 1985ஆம் ஆண்டு முதன்முதலாக யோர்க் பிராந்தியத்திற்கு மார்க்கம் நகர உறுப்பினராக (Regional Councillor) தெரிவு செய்யப்பட்டார். மீண்டும் 1988ஆம் ஆண்டு இதே பதவிக்கு தெரிவு செய்யப்பட்டார். 1991 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் யோர்க் பிராந்தியத்திற்கு மார்க்கம் நகரில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நான்கு உறுப்பினர்களில் அதிக வாக்குகளை பெற்று முதன்மையாளராக இருந்தார். இதனால் வழமையான முறையில் மார்க்கம் நகர உதவி முதல்வராக நியமிக்கப்பட்டார். 1992 ஆம் ஆண்டில் மார்க்கம் முதல்வர் மரணம் அடைந்ததை தொடர்ந்து நகரசபை தேர்தல் யாப்பின்படி உதவி முதல்வராக இருந்த இவர் முதல்வர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டார். 1994 ஆம் ஆண்டுவரை முதல்வராக பதவி வகித்த இவர் 1994 தேர்தலில் முதல்வர் போட்டியில் தோல்வி கண்டார்.

1994-1997 தேர்தலில் தோல்வி கண்டதனை தொடர்ந்து ரொறொன்ரே ஆங்கில வானொலி, தொலைக்காட்சி ஒலிபரப்பாளராக பணிபுரிந்து வந்தார். மீண்டும் 2006 தேர்தலில் அமோக வாக்குகளினால் முதல்வராக தெரிவு செய்யப்பட்டு மீண்டும் தனது பதவியினை பெற்றுக் கொண்டார்.

### அஜெக்ஸ் நகரின் முதல்வராக மீண்டும் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீவ் பரிஷ் (*Steve Parish*)

1980 ஆம் ஆண்டு முதன்முதலில் இந்நகரின் உறுப்பினராக (Councillor) தெரிவுசெய்யப்பட்டார். தொடர்ந்து பிராந்திய உறுப்பினர் (Regional Councillor) ஆகவும் 1995 இல் முதன்முதல் முதல்வராகவும் தெரிவு செய்யப்பட்டார். இம்முறை 13,541 நகரமக்களின் வாக்குகளை பெற்று தம்முடன் போட்டியிட்ட ஒரேயொருவரைத் தோற்கடித்து மீண்டும் வெற்றி பெற்றுள்ளார். இவரது தந்தையார் இந்நகரம் ஆரம்பித்த நாளிலிருந்து நகரசபை உறுப்பினராக இருந்ததுடன் 1958 - 1963 ஆம் ஆண்டு காலத்தில் முதல்வராக பதவி வகித்திருந்தார்.

ஸ்ரீவ் பரிஷ், யோர்க் பல்கலைக்கழகத்தில்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com** அல்லது
**www.tamilexpress.net**

# ரொறொன்ரோவின்...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

வரலாற்றுதுறையில் B.A பட்டம் பெற்று தந்தையின் நகரசபை அரசியலை தொடரும் மைந்தனாக பின்னர் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையிலும் பட்டம் பெற்றார். மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் கோடை காலத்தில் நகரினை சுற்றி சயிக்கிளில் வலம் வருபவர் என இவரை பற்றிய செய்திகளில் குறிப்பிடப்படுவதுண்டு. அஜெக்ஸ் நகரில் இருந்து நான்கு நகரசபை உறுப்பினர்களும் இந்நகரம் உள்ளடக்கப்பட்ட பிராந்தியத்திற்கு (Durham Region) இரு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவது வழமையாகும்.

**பிக்கரிங் நகரிற்கு மீண்டும் முதல்வராக தெரிவுசெய்யப்பட்ட டேவ் ரையான் *(Dave Ryan)***

பிக்கரிங் நகரில் கடந்த வருடம் 71.13% வாக்குகளை பெற்று முதல்வராக தெரிவு செய்யப்பட்ட டேவ் ரையன் இம்முறை 10,361 (51.21%) வாக்குகளை பெற்று தம்முடன் போட்டியிட்டவரை தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளார்.

33 வருடகாலம் I.B.M கம்பனியில் உயர் அதிகாரியாக பணிபுரிந்த இவர் இரு பெண்பிள்ளைகளின் தந்தையாவார். இவர் 2003 இல் தமது சொந்த தொழிலிலிருந்து ஓய்வு பெற்றார். 1994 இல் முதன்முதலாக பிக்கரிங் நகரசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். 2003இலும் 2006 இலும் முதல்வராக தெரிவு செய்யப்பட்டு இதே பதவிக்கு இம்முறை மூன்றாம் முறையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பிக்கரிங் நகரில் மூன்று நகரசபை உறுப்பினர்களும் பிராந்தியத்திற்கு (Durham Region) இந்நகரிலிருந்து மூன்று பிராந்திய உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவது வழமையாகும்.

**பிரம்பரன் நகரில் மீண்டும் முதல்வராக தெரிவு செய்யப்பட்ட பெண் - சூசன் ஃபெனெல்** (Susan Fennell)

56 வயது நிரம்பிய பெண்மணி சூசன் ஃபெனெல் பிரம்ரன் நகரமுதல்வராக மீண்டும் 42,991 (50.68%) வாக்குகளை பெற்று தெரிவு செய்யப்பட்டார். கடந்த முறை 74.85% வீதம் வாக்குகளை பெற்று இந்நகரசபை முதல்வர் பதவியினை பெற்றுக்கொண்டார்.

மொன்றியல், கியூபெக் மாகாணத்தில் பிறந்த இவருக்கு இரு புத்திரர்கள் உள்ளனர். 1977 இல் ரொறொன்ரோ பல்கலைகழகத்தில் 'சூழல் & சுற்றாடல் விஞ்ஞானத்துறை'யில் (B.Sc. in Environmental Science) பட்டம் பெற்று கம்பனி ஒன்றில் மனேஜராக சுமார் 11 வருடங்கள் பணிபுரிந்து வந்தார்.

1988ஆம் ஆண்டு முதன்முதலாக பிரம்ரன் நகரசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு பின்னர் பீல் பிராந்தியத்தின் பிரம்ரன் நகரின் உறுப்பினராக (Regional Councillor) தொடர்ந்து பணிபுரிந்து வந்தார். 2000 ஆம் ஆண்டில் முதன்முறையாக முதல்வராக தெரிவு செய்யப்பட்டு தொடர்ந்தும் வீழ்த்தவே முடியாத முதல்வராக பணிபுரிந்து வருகின்றார்.

## தமிழர் போட்டியிட்ட தொகுதிகளும் அதன் பெறுபேறுகளும்

## தமிழர் வெற்றி பெற்ற தொகுதி

### மார்க்கம் நகரசபை - 7 ஆம் வட்டாரம்

1. **லோகன் கணபதி *(LOGAN KANAPATHI)*** - 4027 - 36.21%



லோகன் கணபதி

2. வொங் டெ.ஃபி (Wong Debbie) - 3168 - 28.49%
3. கான் அனான் (Khan Adnan) - 1173 -10.55%
4. விர்க் ராமன் (Virk Raman) -1100 - 9.89%
5. ரா.ஃமான் மொகமட் (Rahman Mohammed) - 1050 - 9.44%
6. பார்சா இன்டிரஜித் (Basra Inderjit) - 393 - 3.53%
7. **செந்தில் வரதராஜா** (***Senthil Varatharaja***) - 210 - 1.89%

இத்தொகுதியில் லோகன் கணபதி இரண்டாம் முறையும் நகரசபை உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

**மார்க்கம் நகர சபை (ஜோர்க் பிராந்திய கல்விச்சபை) 7&8 வட்டாரம்**

1. **யுனிற்றா நாதன் *(JUANITA NATHAN)*** - 8252 - 57.42%



யுனிற்றா நாதன்

2. நீதன் - சபா (Neethan Saba) - 1968 - 13.69%
3. சுல்பி சுல்பிகர் அலி (Zulfi Zulfigar Ali) - 1753 - 12.20%
4. ரொமர் சாம் (Tomer Sam) - 1485 - 10.33%
5. சாயிட் நாசர் (Sayed Nasar) - 913 - 6.35%

கல்விச்சபையில் முதன்முதலில் வெற்றிபெற்ற தமிழ் பெண்மணி யுனிற்றா நாதன் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழர் போட்டியிட்ட தொகுதிகள்

### ரொறொன்ரோ கல்வி சபை - 18ஆம் வட்டாரம்

1. எலிசபெத் மேயர் (Elizabethe Mayer) - 9691 - 38.05%
2. **பார்த்தி கந்தவேள்** (***Parthi Kandavel***) - 7416 -29.12%
3. மொனிக் சிசி (Monique Sisi) - 6660 - 26.15%
4. ஜொயன்ரா பானிக் (Joyanta Banik) - 1700 - 6.67%

**மிசிசாக நகர கல்விச்சபை 9&10ஆம் வட்டாரம்**

தமிழரான வரதன் அருள் சுந்தரம் என்பவர் 495 வாக்குகளை பெற்று இருந்தார்.

### ரொறொன்ரோ நகர 42ஆம் வட்டாரம்

1. ரேமன் சோ (Raymond Cho) - 10037 - 53.08%
2. **நீதன் சண்** (***Neethan Shan***) - 6221 - 32.90%
3. சமுன் பூனவல் (Shamoon Poonavala) 577 - 3.05%
4. முகமட் ஆதர் (Mohammed Ather) - 456 - 2.41%
5. றுத் ரெக்லி (Ruth Tecle) - 426 - 2.25%
6. **நமு பொன்னம்பலம்** (***Namu Ponnambalam***) - 419-2.21%
7. ஜோர்ஜ் சிங் (George Singh) - 339 - 1.79%
8. லியோன் சோல் (Leon Saul) - 315 - 1.66%
9. **வேந்தன் ராமநாதவவுனியர்** (***Venthan Ramanathavavuniyar***) - 116 - 0.61%

### மார்க்கம் நகர சபை தேர்தல் - 8ஆம் வட்டாரம்

1. சியு அலெக்ஸ் - 3458 - 44.35%
2. **ஜோசேவ் ரெமிசியர் மோகன்** (***Joseph Mohan Remisiar***) - 2274 - 29.17%
3. லீ ஐவி (Lee Ivy) - 1716 - 22.01%
4. மன்கோ போபின்டர் (Mancoo Bhopinder) - 349 4.48%

**ரொறொன்ரோ கல்விச்சபை - 20ஆம் வட்டாரம்**

1. சூ வொங் - 11206 - 46.05%
2. சாம் சோறியோபோல்ஸ் (Sam Soiropoulos) - 10707 - 44%
3. **றோய் விக்னராஜா** (***Roy Wignarajah***) - 2421 - 9.94%

**ரொறொன்ரோ மாவட்ட கல்விச்சபை - 21ஆம் வட்டாரம்**

1. சான் சென் (Shan Chen) - 13033 - 46.25%
2. **டீபன் விக்னேஸ்வரன்** (***Deepan Vigneswaran***) - 6920 - 23.551%
3. ஹோ லீ (Hau Lee) - 3208 - 10.91%
4. ரொபோட் மக்கியூகன் (Robert Mcguigan) - 2550 - 8.67%
5. **நாதன் கதிர்காமநாதன்** (***Nathan Kathirkamanathan***) - 2355 - 8.01%
6. ஹொரஸ் டொக்கிரி (Horace Dockery) - 992 - 3.37%

### ரொறொன்ரோ கல்விசபை 22ஆம் வட்டாரம்

1. ஜெரி சாட்விக் (Jerry Chadwick) - 8172 - 31.05%
2. **அஸ்வின் பாலமோகன்** (***Ashwin Balamohan***) - 5538 - 21.04%
3. சொனி ஈங் (Sonny Yeung) - 3195 - 12.14%
4. வில்லியம் மக்டுகல் (William Macdougal) - 2598 - 9.87%
5. டியோனி கோலி (Dionne Cokey) - 2578 - 9.79%
6. எட்வேட் ஹில்மோர் (Edward Gilmore) - 2232 - 8.48%
7. பற்றிக் ருட்லீட்ஜ் (Patric Rutledge) - 1999 - 7.59%

## ரொறொன்ரோ நகரசபை உறுப்பினர்களின் சம்பளமும் சலுகைகளும்

ரொறொன்ரோ நகரசபை உறுப்பினர் ஒருவரின் வருடம் சம்பளம் $99,619,52. இதேபோல் நகரமுதல்வரின் சம்பளம் வருடம் $167,769.94 ஆகும்.

இவை தவிர மேலதிக சலுகைகளாக உடல் நலத்திற்கு காப்புறுதி, ஆயுள்காப்புறுதி, உடல் இயலாமைக்கான காப்புறுதி, பற்சிகிச்சை காப்புறுதி, வாகனம் உபயோகிப்பதற்கு செலவு ஆகியவற்றுடன் தங்கள் அலுவலகத்தில் மூன்று முழுநேர ஊழியர்களை வேலைக்கு அமர்த்தி வைத்திருக்கும் சம்பள செலவுகள் யாவும் நகரசபை நிர்வாகம் இவ் உறுப்பினர்களுக்கு கொடுக்கின்றது. இப்படி மேலும் பலவகையான மேலதிக சலுகைகளும் மக்களின் வரிப்பணத்திலிருந்து மக்களினால் தெரிவு செய்யப்பட்ட இவ் உறுப்பினர்களுக்கு மக்கள் நலன்களை கவனிக்கும் உறுப்பினர் என்ற ரீதியில் வழங்கப்படுகிறது.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# ஆசிரியருக்கு கடிதம்

கடந்த இதழில் (15.10.2010) வெளிவந்த, கவிஞர் வி. கந்தவனம் அவர்களால் எழுதப்பட்ட, மலைநாட்டில் வடக்கு வாசல் என்ற ஆக்கம் என்னை மாத்தளை நகருக்கு மீண்டும் அழைத்துச் சென்று விட்டது.

மாத்தளை கந்தசாமி வித்தியாசாலை, புனித தோமையார் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவன், மாத்தளை மண்ணில் 18 ஆண்டுகள் வாழ்ந்தவன் என்ற அடிப்படையில் அந்த ஆக்கத்திற்கு தொடர்புடைய மேலும் சில தகவல்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாத்தளை நகரில் சைவமும் தமிழும் தழைத்தோங்கவும், இசையோடு கலை, கலாச்சார பாரம்பரியங்கள் பேணிப் பாதுகாக்கப்படவும், உருவாக்கப்பட்ட பாடசாலைகள் கந்தசாமி வித்தியாசாலையும், பாக்கிய வித்தியாலயமும் ஆகும். இந்த இரு பாடசாலைகளையும் ஸ்தாபித்தவர் அமரர் ஸ்ரீமான் எஸ்.எஸ். கந்தசாமி அவர்கள்.

**- வே. விவேகானந்தன் -**

யாழ்ப்பாணத்திலே சேர் பொன். இராமநாதன் அவர்கள் ஆண்களுக்காகப் பரமேஸ்வராக் கல்லூரியையும் பெண்களுக் காக இராமநாதன் கல்லூரியையும் உருவாக்கியபோது, அவருடன் இணைந்து ஸ்ரீமான் எஸ்.எஸ். கந்தசாமி அவர்கள் கட்டுமாணப்பணிகளில் ஈடுபட்டதாக எனது தந்தையார் சொல்லக் கேட்டிருக்கிறேன். பின்னர் மாத்தளைக்கு குடிபெயர்ந்து சேர் பொன். இராமநாதனைப் பின்பற்றி ஆண்களுக்கென தனது பெயரில் கந்தசாமி வித்தியாசாலையினையும் பெண்களுக்கென தனது மனைவி பாக்கியம் அவர்களின் பெயரில் பாக்கிய வித்தியாலயத்தையும் அமைக்கத் தீர்மானித்தார்.

இலங்கையிலே பணபலம் படைத்த நாட்டுக் கோட்டை செட்டிமார் சங்கம் 1927 ஆம் ஆண்டு மகாத்மா காந்தியை இலங்கைக்கு அழைத்த போது கந்தசாமி அவர்கள் அவரை மாத்தளைக்கு வரவழைத்து இருபாடசாலைகளுக்குமான அடிக்கல்லை நாட்டுவித்தார். 1929ஆம் ஆண்டு இந்த இருபாடசாலைகளும் செயற்பட ஆரம்பித்தன.



பெண்கள் பாடசாலையான பாக்கிய வித்தியாலயம் விடுதி வசதி கொண்ட கட்டணம் அறவிடும் பாடசாலையாக இயங்கியது. ஆண்கள் பாடசாலையான கந்தசாமி வித்தியாசாலை இலவச கல்விப் பாடசாலையாக செயற்பட்டது. இலங்கை யில் 1944 ஆம் ஆண்டுதான் C.W.W. கன்னங்கரா அவர்களால் இலவச கல்வித்திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் ஸ்ரீமான் எஸ். எஸ். கந்தசாமி அவர்கள் 1929 ஆம் ஆண்டிலேயே தனது பாடசாலையில் அதனை அறிமுகப்படுத்தி வைத்தார்.

மாத்தளை வாழ் மாணவர்கள் தரமான தமிழ் கல்வியையும் சிறந்த சமய அறிவையும் பெற வேண்டும் என்பதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து ஆசிரியர்களை வரவழைத்தார். சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சைவக் குருமார் பரம்பரையைச் சேர்ந்த விஸ்வலிங்கம் வேலாயுதர் அவர்களை அதிபராக நியமித்தார். கந்தசாமி அவர்களின் கனவை நனவாக்கும் வகையில் அதிபரும் ஆசிரியர்களும் அரும்பணி ஆற்றினர்.

சைவ சமயத்தை பொறுத்தவரையில் மாத்தளையில் பிள்ளையார் கோயில், கதிரேசன் கோயில், ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் ஆகிய கோயில்களில் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் நீண்ட காலமாகவே பிரபல்யம் பெற்ற கோயிலாக விளங்கி வருகிறது. 1960 களில் இக்கோயில் அறங்காவல் சபைத் தலைவராக திரு. க. குமாரசாமி அவர்கள் பணியாற்றியானர். நில அளவையாளரான இவர் கந்தசாமி அவர்களின் மகனாவார்.

மாசிமக திருவிழாக் காலத்தின் போது யாழ்ப்பாணத்திலிருந்து C.S.S. மணிபாகவதர் அவர்களை அழைப்பித்து மகாபாரதம், இராமாயணம் தொடர்பான கதாப் பிரசங்கங்களை ஒழுங்கு செய்தார். இந்தியாவிலிருந்து பித்துக்குளி முருகதாஸ் அவர்களை அழைத்திருந்தார். சனி, ஞாயிறு தினங்களில் கந்தசாமி வித்தியாசாலை ஆசிரியர்கள் மூலம் இலவச சைவ சமய பாடவகுப்புகளை ஒழுங்கு செய்தார்.

இவ்வாறாக தமிழையும் சைவத்தையும் வளர்க்க கந்தசாமி குடும்பத்தினர் ஆற்றிய பணிகளை மாத்தளை வாழ் மக்கள் மறக்கமுடியாது. யாழ்ப்பாணத்திலே சேர் பொன். இராமநாதன் உருவாக்கிய பாடசாலைகளில் பரமேஸ்வராக்கல்லூரி பல்கலைக்கழகமாக மாறித் தன் தனித்துவத்தை இழந்தது போல், மாத்தளையில் கந்தசாமி வித்தியாசாலை, பாக்கிய வித்தியாலயத்தின் ஒரு பகுதியாக இணைந்ததன் மூலம் தன் தனித்துவத்தை இழந்தமை ஒரு சோக வரலாறு.





ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்

பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்




இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

Tel: 647-707-8671 / 416-829-4004

5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall )

Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi,English, Telugu & Other indian languages

# திருநாகேஸ்வரம் - ஒப்பில்லாத பெருமையுடையவன்

## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 87

**சென்ற இதழ் தொடர்ச்சி**

பெருமாளின் 108 திருப்பதிகளுள் ஒன்று, தாயார் அவதரித்த தலம், இரண்டாயிரம் வருடங்கள் பழமையுடையது, பேயாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகியோர் பாடிய இடம் என பல பெருமைகள் கொண்டது திருநாகேஸ்வரம் ஒப்பிலியப்பன் திருக்கோயில். திருநாகேஸ்வரம் நாகநாத சுவாமி கோயிலில் இருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது இக்கோயில். நாகநாதசுவாமி கோயிலுக்கு வருபவர்கள், மறக்காமல் ஒப்பிலியப்பனையும் 'ஒரு எட்டு' பார்த்துவிட்டுதான் போவார்கள், அதுபோல், ஒப்பிலியப்பனை தரிசிக்க வருபவர்களும் 'ஒரு எட்டு' சென்று நாகநாதசுவாமியை தரிசித்துவிட்டுச் செல்வார்கள். நாம் நாகநாதசுவாமியை தரிசித்து விட்டோம், அப்படியே 'ஒரு எட்டு' சென்று ஒப்பிலியப்பனைப் பார்த்துவிடுவோம்.

மகாவிஷ்ணுவின் மனைவியும் லட்சுமியின் ஒரு அம்சமுமான பூமாதேவி, ஒருநாள் விஷ்ணுவிடம், "எப்போதும் மகாலட்சுமியை மட்டும் மார்பில் தாங்கிக் கொண்டிருக்கிறீர்கள். எனக்கும் அந்த பாக்கியத்தை தாருங்கள்" என்று கேட்டாள். மகாவிஷ்ணு, அவளது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, "நீ பூலோகத்தில் ஒரு ரஷியின் மகளாக, திருத்துழாய் (துளசி) என்ற பெயரில் பிறந்து, இந்த பேற்றைப் பெறுவாய்" என்றார். இச்சமயத்தில், 'என்றும் பதினாறு' வயதுடைய மார்க்கண்டேய மகரிஷி, மகாலட்சுமியே தனக்கு மகளாகப் பிறக்க வேண்டி தவமிருந்தார். இந்த இரண்டு நிகழ்வுகளும் சேர்ந்துகொள்ள, லட்சுமியின் அம்சமான பூமாதேவி, குழந்தை வடிவில் ஒரு



துளசிச்செடிக்கு கீழே கிடந்து மார்க்கண்டேய மகரிஷிக்குக் காட்சித் தந்தார். தன் ஞானதிருஷ்டியால் அவள் லட்சுமியின் அம்சம் என்பதை அறிந்துகொண்ட மகரிஷி, அக்குழந்தைக்கு துளசி என பெயர்சூட்டி வளர்த்து வந்தார். அவளுக்கு திருமண வயது வந்த போது, திருமால், ஒரு முதியவர் வேடத்தில் வந்து மார்க்கண்டேய மகரிஷியிடம் பெண் கேட்டார். தவமிருந்து கிடைத்தத் தன் மகளை, ஒரு வயதான கிழவனுக்கா மனமுடித்துக் கொடுப்பது என மார்க்கண்டேயர் சம்மதிக்கவில்லை. வந்தவரைச் சமாளிக்க, "சிறியவளான என் மகளுக்கு சாப்பாட்டில் சரியாக உப்பு போட்டுக்கூட சமைக்கத் தெரியாது. அத்தகையவளை நீங்கள் மணம் முடித்தால் உங்கள் வாழ்க்கைதான் சிரமப்படும். எனவே, இது சரி வராது" என்று ஒதுங்கிக் கொண்டார். திருமாலோ விடுவதாக இல்லை. "உப்பில்லாத சமையலாக இருந்தாலும் சாப்பிட்டுக் கொள்கிறேன்" என்று வற்புறுத்தினார். தன் தவ வலிமையால், இது திருமாலின் திருவிளையாடல் என்பதையும், வந்திருப்பது திருமாலே என்பதையும் உணர்ந்த மார்க்கண்டேயர், தன் மகளை திருமாலுக்கு மணம் முடித்து கொடுத்தார். உப்பிலாத சாப்பாடு சாப்பிட ஒப்புக்கொண்டதால் உப்பிலியப்பன் என்றும், ஒப்பில்லாத பெருமையுடையவர் என்பதால் ஒப்பிலியப்பன் என்றும் திருநாமம் பெற்று திருநாகேஸ்வரத்தில் திருமால் மனைவியுடன் எழுந்தருளினார். துளசிதேவி அவர் மார்பில் துளசிமாலையாக மாறி நிரந்தரமாக தங்கினாள். இதனால் தான், எல்லாப் பெருமாள் கோயில்களிலும் துளசி மாலை பெருமாளுக்கு அணிவிக்கப்படுகிறது என்கிறது, தலவரலாறு.

திருநாகேஸ்வேரம் ஒப்பிலியப்பன், திருவிண்ணகரப்பன் என்ற இன்னொரு பெயரிலும் அழைக்கப்படுகிறார். இதனால், திருநாகேஸ்வரத்துக்கு திருவிண்ணகரம் என்ற பெயரும் உண்டு. இக்கோயில் அம்மன், பூமாதேவி. பொதுவாக எல்லாக் கோயில்களிலும் பூமாதேவி, பெருமாளுக்கு இடதுபுறத்தில் இருப்பாள். ஆனால், திருநாகேஸ்வரம் திருமாலுக்கும் பூமாதேவிக்கும் திருமணம் நடந்த தலம் என்பதால், இங்கு, சுவாமிக்கு வலதுபுறத்தில் பூமாதேவி இருக்கிறாள். பூமாதேவியை திருமாலுக்கு மணம் முடித்து தந்தபோது, மார்க்கண்டேயர், "ஒருபோதும் தன் மகளை விட்டு பிரியக்கூடாது" என்று நிபந்தனை விதித்தாராம். எனவே, பெருமாள் இங்கு தாயாருடன் இணைந்தே பவனி வருவார். இக்கோயில் உற்சவர்: பொன்னப்பன்.

திருநாகேஸ்வரம் ஒப்பிலியப்பன் திருக்கோயிலில் வேண்டிக்கொண்டால், தம்பதியர்களுக்குள் மன ஒற்றுமை அதிகரிக்கும், சகிப்புத்தன்மை கூடும் என்பது நம்பிக்கை. இங்கு, சுவாமிக்கு திருமஞ்சனம் செய்வித்து, நேர்த்திக்கடன் நிறைவேற்றுகிறார்கள். திருப்பதி வெங்கிடாசலபதிக்கு உண்டானது போல் இப்பெருமானுக்கும் தனி சுப்ரபாதம் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. ஒப்பிலியப்பன் சுவாமிக்கு காட்டிய தீபத்தின் முன்னால், அருள்வாக்கு சொல்லும் வழக்கமும் இங்கு இருக்கிறது.

## - வழிகாட்டி -

புரட்டாசி, ஐப்பசி, பங்குனி பிரம்மோற்ஸவம் ஆகிய திருவிழாக்கள் இக்கோயிலில் பிரசித்தமானது. ஆயிரக்கணக்கான மக்கள் கூடுவார்கள். திருமால், மார்க்கண்டேயரிடம் ஒரு பங்குனி மாத திருவோண நட்சத்திரத்தன்று பெண் கேட்டு வந்தார். திருமணம் ஐப்பசி மாத திருவோணத்தன்று நடந்தது. இந்த நிகழ்வின் அடிப்படையில் இத்தலத்தில் ஒவ்வொரு மாதமும் திருவோண நட்சத்திரத்தில், திருமால் சன்னதியில் சாம்பிராணி தூபம் காட்டப்பட்டு, அகண்ட தீபமும் வால் தீபமும் ஏற்றப்படுகிறது. இந்த விளக்கில் மகாலட்சுமி எழுந்தருளியிருப்பதாக ஐதீகம். இந்த தீப தரிசனம் பார்த்தால், செல்வம் பெருகும் என்பது நம்பிக்கை. ஆவணி திருவோணத்தன்று காலையில் பெருமாள் கருட வாகனத்தில் 'உதயகருடசேவை' அருள்கிறார். பின், 'தெட்சிண கங்கை' என்னும் நாட்டாறு தீர்த்தத்தில் நீராடுகிறார். அதன்பின்பு சிறப்பு பூஜை நடக்கிறது. இதனால், ஆவணி திருவோணத்தன்றும் இக்கோயிலில் நல்ல கூட்டம் இருக்கும்.

இத்தலத்தில் சுவாமி பாதம் நோக்கி காட்டிய வலது கையில் கீதை உபதேசமான, 'மாம் ஏகம் சரணம் விரஜ' என்று எழுதப்பட்டுள்ளது. இதற்கு, 'என்னை சரணடைபவர்களை காப்பேன்' என்று பொருள். நம்மாழ்வார் இவரை, 'யாருக்கும் ஒப்பில்லாமல் உயர்ந்திருப்பவர்' என்ற பொருளில் மங்களாசாசனம் செய்துள்ளார். அவருக்கு, திருவிண்ணகரப்பன் (மூலவர்), பொன்னப்பன் (உற்சவர்), மணியப்பன், என்னப்பன் (பிரகார சன்னதி), முத்தப்பன் என ஐந்து கோலங்களில் திருமால் காட்சி தந்தருளினார். இவர்களில் முத்தப்பன் சன்னதி தற்போது இல்லை. மணியப்பன் சன்னதியில் சுவாமியுடன் சங்கு, சக்கரம் அருகிலேயே இருப்பது விசேஷமான தரிசனம். இக்கோயிலில் நைவேத்யங்கள் உப்பில்லாமலேயே தயாரிக்கப்படுகிறது. உப்புள்ள பண்டங்களை கோயிலுக்குள் எடுத்துச் செல்வது பாவத்தை தரும் என்றும் நம்பப்படுகிறது. 108 திவ்ய தேசங்களில் இங்கு மட்டுந்தான் உப்பில்லா நிவேதனம் என்பது திருநாகேஸ்வரத்தின் சிறப்புகளில்

தொடர்ச்சி 18ம் பக்கம்


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# திருநாகேஸ்வரம்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒன்று. இத்தலத்திலுள்ள அஹோத்ர புஷ்கரணி மிகவும் விசேஷமானது. இதற்கு, 'பகலிராப்பொய்கை' என்றும் பெயருண்டு. இந்த குளத்தில் இரவு, பகல் எந்த நேரமும் நீராடலாம் என்பது சிறப்பம்சம்.

மார்க்கண்டேயர் வழிபட்ட தலம் என்பதால், இங்கு ஆயுள் விருத்தி, மிருத்யுஞ்ச ஹோமம் நடக்கிறது.

நீங்களும் ஒருமுறை வந்து உங்கள் ஆயுளை விருத்தி செய்துகொள்ளுங்கள்!

## எப்படி செல்வது? எங்கே தங்குவது?

கும்பகோணத்தில் இருந்து 5 கி.மி. தொலைவில் உள்ளது திருநாகேஸ்வரம். கும்பகோணத்தில் இருந்து நகரப் பேருந்துகள் அடிக்கடி செல்கின்றன. கும்பகோணத்திலேயே நல்ல தரமான தங்கும் விடுதிகளும் உணவகங்களும் உள்ளன. காலை 6 மணி முதல் 1 மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரையும் ஒப்பிலியப்பன் திருக்கோயில் நடை திறந்திருக்கும். கோயில் முகவரி: அருள்மிகு ஒப்பிலயப்பன் திருக் கோயில், திருநாகேஸ்வரம், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் - 612 204, இந்தியா. தொலைபேசி எண்: 91 - 435 - 2463385, 2463685.







ONE OLD MILL
BLOOR WEST
TRIDEL
BUILT FOR LIFE
மக்களின் முகல்தர தேர்வான
Tridel நிறுவனத்தின் புதிய வரவு
ONE OLD MILL
BLOOR WEST
VIP Discount Up to $5000
Call For More Information
HOMELIFE GTA REALTY INC.
416.321.6969
BUY THROUGH OUR BROKERAGE, YOU HAVE A CHANCE
TO WIN....
2011 3 Series BMW
CUBA VISIT FOR TWO FOR 1 WEEK
42" LCD TV
10 OTHER PRIZES
HOMELIFE
HOMELIFE GTA REALTY INC.
BROKERAGE, INDEPENDENTLY OWNED AND OPERATED
1711 McCowan Rd., #206 Toronto, ON M1S 2Y3. Bus: 419.321.6969 | Fax: 416.321.6963
145 Traders Blvd., #29 Mississauga, ON L4Z 3L3. Bus: 905.712.2666 | Fax: 905.712.0037
DRAW DATE:
SUNDAY | 28TH November, 2010
@ 4pm. in GTA SQUARE
www.homelifegtarealty.com

# அருண் வைத்தியநாதனின் குறும்படங்கள்

## ஒளியின் மொழி

அருண் ஒரு மென் பொறியிலாளர். இந்தியாவில் ராஜ் ரிவி போன்ற பல இடங்களில் வேலை பார்த்த அருண் அமெரிக்காவிற்கு மென் பொறியியலாளராக வேலை பார்க்க வந்தார். ராஜ் ரிவியில் கொலிவூட் ஸ்பெசல் என்ற நிகழ்ச்சியை தயாரித்து வழங்கினார். இந் நிகழ்ச்சியில் பல ஹொலிவூட் படங்களை ஆய்வு செய்தார். அதன் விளைவு இவருக்கு சினிமாவில் மேலும் ஆர்வம் ஏற்பட்டது. இவர் ஒரு மிமிக்கிரி கலைஞர். சீர்காழியில் பிறந்து நியூ யோர்சியில்



வாழ்ந்து கொண்டிருந்த வேளையில் ஒரு நாள் திடீரென தனது மென் பொருள் பொறியியலாளர் வேலையை விட்டு விடுவது என தீர்மானித்தார். அதன் பின்னர் நியூ யோர்க்கில் உள்ள திரைப்படக் கல்லூரியில் (New York Film Academy) முழு நேர மாணவனாக சேர்ந்தார். அதன் பின்னர் தன்னை சினிமாவிற்கே அர்ப்பணித்து விட்டார்.

இவரது அனைத்து குறும்படங்களும் ரொரண்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டுள்ளன. YOUTUBE ல் இவரது படங்களை பார்க்கலாம். இறுதியாக ஒரு தமிழ் முழு நீளத்திரைப்படத்தையும் இயக்கியுள்ளார். அச்சமுண்டு அச்சமுண்டு என்ற இப்படம் சர்வதேச திரைப்படவிழாக்களில் திரையிடப்பட்டது.



**- ரதன் -**

## Br(a)illiant

இந்தக் குறும்படத்தில் நடித்தவர்கள் அனைவரும் வேற்று மொழியினத்தினர். வசனங்கள் அற்றது இப் படம். ஒளிப்பதிவும் நடிப்புமே இப் படத்தின் மொழி. கறுப்பு வெள்ளைப் படமான இப் படம் ஒரு தேர்ந்த கள்ளனையும், களவுத் தொழிலுக்கு புதிதாக வரும் ஒருவரையும் பற்றியது. நடிகர்களின் சிறப்பான நடிப்பும் அருணின் இயக்கமும் எடிட்டிங் இப் படத்தின் சிறப்பம்சங்கள். இப் படத்தில் வரும் புது முக கள்ளனின் பாத்திரம் ஒரு யதார்த்தவாதத்தின் வெளிப்பாடு. அவனது மனதில் உள்ள குற்ற உணர்வும் மனதிற்குள் நகரும் ஊமைத்தனமான சமூகம் மீதான பார்வையும் அவனது செயலில் வெற்றி பெற உதவவில்லை. இப்படத்தை உற்று கவனித்தால் இதனை உணரலாம். கமரா இந்த இருவரினது முக பாவனைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. ஒவ்வொரு காட்சியும் மீடியம் சொட் முறையை மீறி படமாக்கப்படவில்லை. ஆனால் ஒரு இடத்திலும் Extreme close-up காட்சி முறையில் படமாக்கவில்லை. பொதுவாக உணர்ச்சிகளின் வெளிப்பாட்டிற்காக இம் முறையை கையாள்வார்கள். இப்படத்தின் தலைப்பை உற்று நோக்கின் படத்தின் கருவுக்கான காரணம் வெளிப்படும்.இக் குறும்படம் நல்லதொரு குறும் படத்திற்கு உதாரணம்.
http://www.youtube.com/watch?v=qJ7XePVTXsI

## The Seance

இப் படத்தையும் யுரியுபில் காணலாம். படத்தின் தலைப்பு ஆவி தொடர்பாய்வு என பொருள் படும். படத்தின் ஆரம்பத்தில் குளோசப்பாக மண்டை ஓடும் எலும்பும் காட்டப்படுகின்றது. ஆவியுடன் கதைப்ப வரிடம் ஒருவர் வருகின்றார். அவர் கேட்கும் ஒரேயொரு கேள்வி 'எனது காதலி என்னை திருமணம் செய்வாளா?' ஆவியுடன் கதைப்பவர் ஆவியை அழைக்கின்றார். ஆவி வந்தவரின் மீது வருகின்றது. குளோசப்பாக மேசை மீதுள்ள கைகள் காட்டப்படுகின்றன. கைகள் நடுங்குகின்றது. சில செக்கன்களில் முகம் பிரகாசமாகின்றது. ஆவி ஆய்வாளர் கேள்வியைக் கேட்கின்றார். ஆவி தனது பதிலைக் கூறுகின்றது. மீண்டும் ஆவி ஆய்வாளர் 'உன்னுடன் பல முறை நான் கதைப்பது மகிழ்ச்சியாக உள்ளது' என்கிறார். ஆவியோ 'நான் உடனடியாக போக வேண்டும்' என்கிறது. சில செக்கன்களில் வந்தவர் மீண்டும் வழமைக்கு திரும்புகின்றார். 'ஆவி என்ன சொன்னது?'

'உனது காதலியின் வயிற்றில் கரு வளர்கின்றது'
'நல்ல விடயம். சந்தோசமாக உள்ளது'
'உனக்கு டேவிட் என்பவரைத் தெரியுமா?'
'ஆம் எனது நெருங்கிய நண்பன்'
'உனது காதலி வயிற்றில் வளர்வது அவரின் குழந்தை'

இத்துடன் படம் முடிவடைகின்றது. 6.04 நிமிடங்களுக்குள் எடுக்கப்பட்ட இப்படம் ஒரு முழு நீள படத்துக்குரிய விடயத்தை கொண்டுள்ளது. ஒரு பொய்யான உலகத்தை விரும்பும் மனித உலகம் படத்தை முழுமையாக ஆக்கிரமித்துள்ளது. தனது காதலி தன்னை திருமணம் செய்வாளா'? என ஆவியிடம் கேட்குமளவிற்கு தைரியமற்ற கோழைத்தனமான காதலன் இந்த சமூகத்தின் எச்ச சொச்சங்கள். தன்னைச் சுற்றி என்ன நடக்குது என்பதே தெரியாமல் வாழும் மனிதர்கள் இதனை ஒரு அரசியல் விமர்சனமாகக் கூட கொள்ளலாம். சிலந்தி வலைக்குள் அகப்பட்டுள்ள மக்கள். அவர்களுக்கு அரசியல் வாதிகள் என்ன செய்கின்றார்கள். தங்களுக்கு என்ன நடக்கும் என்பது எதுவுமே தெரியாது. ஆவியிடம் தான் கேட்கவேண்டும். மறுபுறம் 'ஊர் என்ன சொல்லும்' என நினைப்பவர்கள் ஆவியைத் தான் தேட வேண்டும். வந்த ஆவியும் பூமியில் சிறிது நேரம் கூட தரித்து நிற்க விரும்பவில்லை. அருண் அற்புதம்.



இப்படமும் ஒரு வித்தியாசமான கருவைக் கொண்ட நவயதார்த்தவாத படமே. இந்த சமூகத்தின் அழுக்காறுகளை 6 நிமிடங்களுக்குள் காட்டியுள்ளார் அருண். படத்தில் ஆவியாக மாறுபவர் மிகச் சிறப்பாக நடித்துள்ளார். நவீன தொழில் நுட்பம் வளர்ந்து ஆட்சி செய்யும் இக் காலத்திலும் பல மூட நம்பிக்கைகள் இன்னமும் மாற வில்லை. அருண் பல ஆவியுடன் பேசுபவர்களை சந்தித்துள்ளார். அதன் பின்னரே இப்படத்தின் காட்சியமைப்பை நிர்மானித்துள்ளார். இப்படத்திலும் எடிட்டிங் ஒளிப்பதிவு இயக்கம் கன கட்சிதமாக உள்ளன.
http://www.youtube.com/watch?v=0JJDNJwlgYo

## Filmography

| Year | Title | Language | Notes |
|---|---|---|---|
| 2005 | Stinking Cigar | English | Short film |
| | Br(a)illiant | English | Short film |
| | Thaniyoru Manidhanukku | Tamil | Short film |
| | As You Wish | English | Short film |
| 2006 | The Noose | English | Short film |
| | The Seance | English | Short film |
| 2007 | One Soul | English | Short film |
| 2009 | Achchamundu! Achchamundu! | Tami English | Featur Film |





MORNINGSIDE HEIGHTS
Price Starts From $149,900
Leased
Don't Miss
The Business Oppuntuite
ONLY LIMITED UNITS AVAILABLE
For More Information
HOMELIFE GTA REALTY INC.
BROKERAGE, INDEPENDENTLY OWNED AND OPERATED
HOMELIFE
HIGHER STANDARDS
1711 McCowan Rd., #206 Toronto, ON M1S 2Y3. Bus: 419.321.6969 | Fax: 416.321.6963
145 Traders Blvd., #29 Mississauga, ON L4Z 3L3. Bus: 905.712.2666 | Fax: 905.712.0037
www.homelifegtarealty.com

# தேகாரோக்கியத்திற்கு மிக முக்கியமான தகவல்கள்

1. தொலைபேசியில் கதைக்கும்போது இடது காதைப் பாவியுங்கள்.
2. ஒரு நாளில் **இருதடவை** கோப்பி குடிக்காதீர்கள்.
3. மருந்து குளிசைகளை **குளிர்நீரில்** குடிக்காதீர்கள்.
4. மாலை 5 மணிக்குப் பின் **அதிகம்** உண்ணாதீர்கள்.
5. எண்ணெய் உணவுகளை உண்பதைக் குறைத்துக்கொள்ளுங்கள்.
6. காலையில் அதிகளவு தண்ணீரும் இரவில் குறைவாகவும் குடியுங்கள்.
7. போன் மின்னேற்றிகளை (Chargers) தூரத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.
8. காதில் அதிகநேரம் செல்போன்களை அல்லது ஒலி வாங்கிகளை வைக்காதீர்கள்.
9. சிறப்பான தூங்கும் நேரம் இரவு 10 முதல் காலை 6 மணிவரை.
10. தூக்கத்துக்கு போவதற்கு முன் மருந்து உட்கொள்ளாதீர்கள்.
11. செல்போனின் பற்றரி இறுதி நிலையில் இருக்கும்போது கதிர்வீச்சு 1000 தடவைகள் இருப்பதால் உடனே மின்னேற்றுங்கள்.

## உடல் உறுதிக்கும் உற்சாகத்திற்கும் சில தகவல்கள். வருமுன் காப்பது நல்லது. ஆரோக்கியமான சாறுகள்

1. கரற் + இஞ்சி + அப்பிள் எமது உடற்தொகுதிகளை இச்சாறு சுத்திகரித்து உற்சாகப்படுத்தும்.



2. அப்பிள் + கெக்கரிக்காய் + செலறி - புற்றுநோயைத் தடுக்கும். கொலஸ்ரோலைக் குறைக்கும். வயிற்றுக்கோளாறுகள், தலைவலி ஆகியவற்றை நீக்கும்.



3. தக்காளி + கரற் + அப்பிள் - தோல் நிறத்தை மேம்படுத்தும். வாய் நாற்றத்தை அகற்றும்.



4. பாவக்காய் + அப்பிள் + பால் - வாய் நாற்றத்தை அகற்றும். உடல் உஷ்ணத்தைக் குறைக்கும்.




5. தோடம்பழம் + இஞ்சி + கெக்கரிக்காய் - தோல் மினுமினுப்பையும் ஈரப்பதனையும் கூட்டுவதுடன் உடல் உஷ்ணத்தையும் குறைக்கும்.



6. அன்னாசி + அப்பிள் + வத்தாழைப்பழம் - மேலதிக உப்புகளை வெளியேற்றும். சிறுநீரகத்தையும், சிறுநீர்ப்பையையும் போசாக்கடைய வைக்கும்.



## மின்வலையில் வந்தவை - 4

7. அப்பிள் + கெக்கரி + கிவி - தோல் நிறத்தை மேம்படுத்தும்.



8. பேரிப்பழம் (Pear) + வாழைப்பழம் - சீனி நிலையை ஒழுங்காக்கும்.



9. கரற் + அப்பிள் + பேரிப்பழம் + மாம்பழம் - உடல் உஷ்ணத்தை அகற்றும். நஞ்சேற்றத்தை எதிர்க்கும். குருதி அமுக்கத்தைக் குறைக்கும். ஒட்சியேற்றத்தை முறியடிக்கும்.



10. ஹனிடியூ (Honeydew) + திராட்சை + வத்தகை + பால் - விற்றமின் C, விற்றமின் B12 கொண்டது. கலச் செயற்பாட்டை அதிகரிக்கும். உடல் நீர்ப்பீடத்தை அதிகரிக்கும்.




11. பப்பாளிப்பழம் + அன்னாசி + பால் - இது விற்றமின் C, E இரும்புச்சத்து மிக்கது. இது தோல் நிறத்தையும் அனுசேபத்தையும் (Metabolism) முன்னேற்றும்.




12. வாழைப்பழம் + அன்னாசி + பால் - இது விற்றமின்கள் நிறைந்த போசாக்குள்ள, மலச்சிக்கலைத் தடுக்கும் சாறு.




எமக்குப் பயனுள்ள பல விடயங்கள் மின்னஞ்சலில் வருகின்றன. அவற்றுள் யாவருக்கும் பயன்படுபனவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என இப்பகுதியை ஆரம்பித்துள்ளேன். உங்கள் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

- துறையூரான் -

# கருந்துளைகள் 26

வெற்றிடத்தில் மாயத்துகள்கள் தோன்றி உடனேயே அவை அழிந்து போவது பற்றிச் சென்ற தடவையில் பார்த்தோம். அவை எவ்விதம் அழிந்து போகின்றன என்பதில் இருந்து தொடர்ந்து பார்ப்போம்.

வெற்றிடத்தின் ஒருபுள்ளியில் தோன்றிய மாயத் துகள்கள் இரண்டும், ஒன்றையொன்று விலத்திய வண்ணம் செல்கின்றன. பின்னர் இரண்டும் உடனேயே ஒன்றை ஒன்று நோக்கி வந்து இணைந்து கொள்கின்றன. இவை இவ்விதம் இணைந்து கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில், வெற்றிடசக்தி என நாம் குறிப்பிட்டாலும் உண்மையில் அங்கு சக்தியில்லை உறுதியின்மைக் கோட்பாட்டின் படியே தோன்றிய துகள்களுக்கு, சக்தியும் இருக்கவேண்டும், இருக்கும். ஆனால் சக்திக் கோட்பாட்டின்படி, சக்தியை ஆக்கவோ அல்லது அழிக்கவோ முடியாது. ஆதலால் அங்கு மொத்தத்தில் சக்தி தோன்றியிருக்கக் கூடாது. எனவே தோன்றிய சோடித் துகள்களில் ஒன்று நேர் சக்தியையும், மற்றயது அதற்குச் சமமான மறை சக்தியையும் கொள்ள வேண்டும். அப்படிய-ாயின் மொத்தத்தில் சக்தி பூச்சியமாகிவிடும். ஆனால் துகள் ஒன்றிற்கு மறை சக்தியானது இருக்கமுடியாது. எனவே மறை சக்தியைக் கொண்ட துகள் தனது சோடியைத் தேடிப் பிடித்து தன்னை அழித்துக் கொள்ள வேண்டும், அழித்துக் கொள்ளும். எனவேதான் வெற்றிடத்தில் தோன்றிய நேர், முரண் சோடித்துகள்கள் மிகக் குறுகிய நேரத்திலேயே, அதாவது உடனேயே ஒன்றுடன் ஒன்று மீண்டும் சேர்ந்து தம்மை அழித்துக் கொள்ளுகின்றன. பார்த்தீர்களா இந்த மாயத் துகள்களின் நிலையை? வேற்றிடத்தின் உறுதியின்மைத் தத்துவத்தின் படி தோன்றவும் வேண்டும், அதேநேரம் அவை கொண்டிருக்கும் இயல்பினால் உடனேயே அழிந்து கொள்ளவும் வேண்டும். இதனாலும் கூட இவற்றினை மாயத்துகள்கள் எனக் கூறலாம் அல்லவா!

## பேரண்டம் - 77

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இனிக் கருந்துளைகளைப் பற்றிப் பார்ப்போம். கருந்துளைகளின் நிகழ்வு எல்லை யினுள்ளும், வெளியேயும் வெற்றிடம் உள்ளது எமக்குத் தெரியும். எனவே இவ்வெற்றிடங்களிலும் மாயத்துகள்கள் தோன்றி பின்னர் இணைவது நடந்து கொண்டேதான் இருக்கும், இவற்றில் கருந்துளையின் நிகழ்வு எல்லைக்கு மிக அருகில், கருந்துளைக்கு வெளியாக தோன்றும் மாயத் துகள்களின் நிலமையைப் பார்ப்போம். இவை உள்ளே தோன்றிய மாயத் துகள்களிலும், கருந்துளைக்கு அருகே இல்லாது வெளியே தோன்றிய மாயத் துகளின் நிலைகளுக்கும் வித்தியாசமான நிலையில் உள்ளன. இந்த மாயத் துகளிலும், ஒன்று நேர் சக்தியையும் மற்றயது மறை சக்தியும் கொண்டுள்ளன என்பதும் தெரியும். இங்கே இயற்கையின் இன்னொரு விளையாட்டினைப் பார்க்கலாம். கருந்துளையானது மிகப் பெரிய திணி வினைக் கொண்டதல்லவா! அதாவது கருந்துளையானது மிகப் பெரிய நேர் சக்தியை உடையது போலக் காணப்படும். அதனால் நிகழ்வு எல்லைக்கு மிக அருகில் தோன்றிய மாயத் துகள்களில் மறைசக்தியைக் கொண்ட மாயத்துகள் கருந்துளையின் மிகப் பெரிய நேர் சக்தியின் விளைவால் கவரப்பட்டு கருந்துளையினுள், நிகழ்வு எல்லையின் ஊடாக தோன்றிய உடனேயே உள்ளே வந்து விழுந்து தன்னை அழித்துக் கொள்ளும். (நேர்த்தன்மையும், மறைத்தன்மையும் ஒன்றை ஒன்று கவரும் என்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே) அதனால் இப்போது மறை சக்தியைக் கொண்ட துணிக்கைக்குத் தனது சோடியைத் தேடிப் பிடித்து தன்னை அழித்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. தோன்றிய கணத்திலேயே கருந்துளையினுள் விழுந்து தன்னை அழித்துக் கொள்ளுகின்றதல்லவா!.

இப்போது நிகழ்வு எல்லையின் வெளியே உள்ள நேர் சக்தி கொண்ட சோடித் துகளைப் பாருங்கள். தனியனாகி விட்டது. அத்துடன் இல்லாமற் போக வேண்டிய அவசியமும் இல்லை. இத்தனியனான நேர் சக்தித் துகள் ஒருவேளை கருந்துளையால் கவரப்பட்டு கருந்துளையினுள் விழலாம், இல்லாதுவிடில் கருந்துளையிற்கு வெளியே உள்ள பெரிய பேரண்டவெளிக்குள் சென்று விடலாம். அதிலும் சிறிய கருந்துளையாக இருப்பின், வெளியே அண்டவெளிக்குள் செல்லும் மாயத்துகளே அதிகமாகின்றது. இவ்விதம் வெளியே செல்லுகையில் இன்னொரு துகளுடன் இணைந்து போட்டோனாகவும் மாறி வெளிச்சமாக வெளியேறலாம்., வெளியேறுகின்றது. பார்த்தீர் களா விந்தையை! மாயத்துகளாகத் தோன்றிய துகள் மெய்த்துகளாக அண்டவெளிக்குள் வருகின்றதை. இந்த விளைவானது, வெளியில் இருந்து பார்க்கும் எங்களுக்கு, கருந்துளையானது துகளை, சக்தியை வீசுவது போல, அதாவது உமிழ்வது போலத் தெரியும். இதனைக் கருந்துளைக் கதிர்வீசல் என்போம். கருந்துளைக் கதிர்வீசலுக்கான விளக்கத்தை இவ்விதமாகத்தான் விஞ்ஞானிகள் விளக்குகின்றார்கள்.

ஆக, கருந்துளைகளும் கரும்பொருட்கள் போன்றே கதிர்களை வீசுகின்றன என்பது கொள்கை வடிவில் காட்டப்பட்டுள்ளது. இதனை மையமாகக் கொண்டு, கருந்துளை ஆவியாதல் பற்றி அடுத்த தடவையில் பார்ப்போம்.

- கனி -
416.261.1348
kani1vimal@hotmail.com



Served Over 15 Years In Toronto
Now in Richmond Hill




NTE AUTO INC.
New Trade Engineering
MS7 Quality Used Car Sales
346 Newkirk Road, #16, Richmond Hill Tel: 905-770-2575
416-399-6640
சகல விதமான வாகனங்கள் திருத்தும் நிலையம்
தற்போதைய விசேட கழிவு சேவைகள் சில....

Front Brake Service From . . . . . . . . $109. 95
Rear Brake Service From . . . . . . . . . $109.95
Transmission Service From . . . . . . . $ 99.95
Lube & Oil Service From . . . . . . . . . $ 29.95
Tire Change & Balancing From . . . . $ 14.95
Engine Tune up from . . . . . . . . . . . $159.95
Air Conditioning Service From . . . . $ 49.95
Computer Scanning from . . . . . . . . $ 39.95

We do BMW Service & Maintenance

எங்களுடன் தொடர்பு கொண்டு Towing செய்து வருபவர்களுக்கு விசேட கழிவு உண்டு.




Many more special, please contact for more information.

# BASEMENT RENT

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, living room, kitchen, full washroom. parking, TV, cable, high speed internet. Close to TTC, Kennedy subway, school & all amenities. Quiet place. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.334.5409

**BRIMLEY & ST.CLAIR**
2 Bedroom bsmt இல் 1 bedroom வாடகைக்கு உண்டு. Sep. entrance, parking, laundry, cable. Close to Kennedy subway, mall, Canadian Tire, tamil stores.
Avail. immediately.
416.757.1858 / 647.501.1858

**MORNINGVIEW & SEWELLS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
416.614.6480 / 416.625.1891

**BRIMLEY & LAWRENCE**
2 Bedroom walkout bsmt for rent. 2 parking. All facilities available. Close to TTC, school & mall. Avail. immediately.
416.879.6801 / 416.293.6253

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom walkout bsmt for rent. Sep. entrance. Parking, cable, laundry. Avail. Anytime. Close to ttc, school, shopping, etc.
தொடர்புகளுக்கு: 416.284.6226

**DUFFERIN & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 905.761.7318

**MARKHAM & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.417.5059

**WARDEN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, living room, laundry, cable & internet including. Close to TTC, hwy (401, DVP). Avail. immediately. பெண்கள் மட்டும்.
தொடர்புகளுக்கு: 416.997.6575

**VICTORIAPARK & LAWRENCE**
Walkout bsmt for rent. Sep. entrance, cable, parking all included. துர்க்கை அம்மன் கோவிலுக்கு அருகாமையில். Close to No frills, TTC, தமிழ் கடைகள்.
பெண்கள் விரும்பத்தக்கது.
416.288.9575 / 416.729.9575

**MARKHAM & 16TH AVE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to shop, school. Avail. immediately.
905.209.1421 / 416.878.3789

**BRIMLEY & LAWRENCE**
2 Rooms for rent in a basement. Sep. entrance & parking, laundry. Close to TTC, stores & other facilities. Very quiet place. Avail. Immediately. Bachelor preferred.
தொடர்புகளுக்கு: 416.264.8177

**FINCH & TAPSCOTT**
1 Bedroom bsmt apt for rent. Sep. entrance, parking. Close to TTC, Hindu temple, mall. Couple preferred.
தொடர்புகளுக்கு: 416.726.4186

**NEILSON & NIGHT STAR**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, parking. Close to school, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.569.5319

**KEELE & TESTON**
2 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.888.4970

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, bank. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.566.4728

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
416.438.5448 / 647.838.5448

**MCCOWAN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, internet. Close to TTC, mall, tamil stores, hospital, subway.
தனிநபர் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 905.554.2496

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 416.277.9044

**MORNINGSIDE & OLDFINCH**
One or two bedroom bright bsmt fo rent. Sep. entrance, parking, laundry, cable, internet. Close to TTC, school. Avail. immediately.
416.724.1063 / 416.896.7425

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt for rent. Cable, laundry. Close to TTC, school. பெண்கள் மட்டும்.
தொடர்புகளுக்கு: 416.282.0029

**McCOWAN & STEELES**
1 Bedroom bsmt. for rent. Parking, cable, laundry. Couple or ladies preferred. Close to TTC, YRT, shopping centre, school, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.903.2437

**MCCOWAN & EGLINTON**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, shopping, school. Avail. immediately.
416.264.6253 / 416.834.3677

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, parking, cable. Close to TTC, school, mall. Avail. December 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.299.3919

**McCOWAN & ELSON**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, school, mall & tamil stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.471.8615

**BRIMLEY & ELLESMERE**
Two bedroom bsmt for rent in a bangalow house. Walking distance to Scarborough Centre, Thomson park, school, mall, etc. Ideal place for single, students or couple. Avail. immediately.
647.367.8584 / 416.900.5369

**VICTORIA PARK & FINCH**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Cable, parking, washer, dryer. Close to ttc, school, stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.490.6725

**SHEPPARD & MORNINGSIDE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
Couple or 2 person preferred.
தொடர்புகளுக்கு: 416.671.2731

**MORNINGSIDE & MILITARY TRAIL**
3 Bedroom walkout bsmt for rent. Parking, laundry. Close to Scarborough Campus, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.464.2972

**MARKHAM & MCLEVIN**
1 Bedroom bsmt with sep. entrance for rent. or 2 bedroom bsmt for rent. Close to TTC, mall, shopping. Low rent.
தொடர்புகளுக்கு: 416.438.3534

**MCCOWAN & DENISON**
1 bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC. Single girl or single boy preferred. Avail. immediately.
416.587.5843 / 905.472.1454

**BRIMLEY & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry, cable. Close to bus, school, tamil stores, etc.
Avail. November 01, 10.
தொடர்புகளுக்கு: 905.947.8018

**MARKHAM & PAINTED POST DR.**
2 bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry, cable. Close to school, mall. Avail. immediately. Family preferred.
416.400.6921 / 647.707.1230

**MORNINGSIDE & SHEPPARD**
சந்திக்கு அருகாமையில் உள்ள Rough River ஏரியாவில் புதிதாக அமைக்கப்பட்ட இரு படுக்கை அறைகள் கொண்ட Bsmt வாடகைக்கு உண்டு. Close to TTC, Walmart, bakery, etc.
416.724.9125 / 647.895.4336

**MIDLAND & EGLINTON**
Newly renovated 2 Bedroom + 2 washroom bsmt for rent. Sep.entrance, laundry, cable. Close to Kennedy subway. Avail. immediately. No pets & No smoking
416.827.0147 (Week days after 5.00pm / weekends any time)

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to temple, GTA Square Mall, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.888.0926

**KENNEDY & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, hospital, school. Avail. November 01, 2010.
416.819.6654 / 647.703.7781

**BIRCHMOUNT & STEELES**
அழகான, காற்றோட்ட வசதியுள்ள walk-out Basement வாடகைக்கு உண்டு. Living room, kitchen, washroom, parking.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.731.1752

**MCLEVIN & SEWELLS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.897.4897

**MORNINGSIDE & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, stores, Scarborough campus.
Avail. immediately. தொடர்புகளுக்கு:
416.287.3510 / 416.904.0842

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, laundry. Close to TTC, school, mall, library. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.831.8549

**MORNINGSIDE & OLD FINCH**
One Bedroom bsmt for rent. Sep. entrance, internet, parking. Close to mall, TTC, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.712.1033

**NEILSON & SHEPPARD**
One Bedroom + living room bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.846.6258

**MCCOWAN & DENISON**
Two large bedroom bsmt for rent. Sep.entrance, parking, cable, laundry. Close to ttc, shopping, school, etc. Avail. December 01, 10.
தொடர்புகளுக்கு: 416.419.5790

**MARKHAM & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to school, stores, TTC. Avail. November 15, 2010.
தொடர்புகளுக்கு: 416.271.6657

**MCNICOLL & MCCOWAN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Very strictly No smoking, No drink & Clean. Rent $650 & 40% utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.342.3313

**DONMILLS & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC. No smoking & No drink Very strictly. Rent $300. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.342.3313

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

**DONMILLS & SHEPPARD**
3 அறைகள் கொண்ட bsmt for rent. Sep. Entrance. Parking, laundry, cable, internet. Close to 5 நிமிட நடை தூரத்தில் பஸ் தரிப்பிடம், Donmills Subway, school, mall, DVP, hwy 404 & 401, Fair view mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.502.8053

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

மேலும் பக்கங்கள் 25, 26

## ROOM RENT

**PARLIAMENT & WELLESLEY**
1 Bedroom for rent in an apartment. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.917.1013

**KENNEDY & CLARENCE BRAMPTON**
1 Bedroom for rent. Very convenience location. Share bathroom & kitchen. Single female only. Rent is $400 per month.
தொடர்புகளுக்கு: 416.735.7800

**LAWRENCE & BELLAMY**
Bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Everything included. Rent $275. Avail. immediately.
416.289.3459 / 416.433.0491

**MCCOWAN & EGLINTON**
1 Bedroom for rent. Close mall, TTC, etc. பெண்கள் or student மட்டும்.
தொடர்புகளுக்கு: 416.502.3033

**BRIMLEY & EGLINTON**
1 Room in a bsmt for rent. Shared kitchen and washroom, sep.entrance, laundry, parking, hydro and cable included. No smoking. Working single male only. Convenient location. Very clean. Rent $350.
தொடர்புகளுக்கு: 416.268.5014

**MCCOWAN & EGLINTON**
One Master bedroom for rent. Close to all facilities. Avail. December 01, 2010.
416.262.3756 / 416.400.7396

**WARDEN & SHEPPARD**
ஒரு அறை basement இல் இரு நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
416.299.4895 / 416.201.1222

**MIDDLEFIELD & FINCH**
2 Bedrooms for rent. Close to TTC, ஐயப்பன் ஆலயம், GTA mall.
தொடர்புகளுக்கு: 416.332.2840

**NEILSON & FINCH MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. வாரத்தில் 10 மணித்தியாலம் வேலை கொடுக்கப்படும். விரும்பினால் வேலை செய்யலாம். Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.351.0422

**MARKHAM & ELLESMERE**
Three bedrooms bsmt இல் Two rooms தனியாக அல்லது சேர்த்து வாடகைக்கு கொடுக்கப்படும். Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.710.3104

**MIDLAND & EGLINTON**
1 Bedroom for rent with all facilities. Close to TTC, mall. பெண்கள் or வயதானவர்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything.
Pl. Call: 416.293.6211

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt rooms available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**MARKHAM & SHEPPARD**
3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall.
416.335.5242 / 416.820.1999

**DANFORTH & EGLINTON**
Shared Room for rent in bsmt. Another room available for a lady in main floor. Close to bus, stores, 5 min. to Kennedy subway. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.201.3111

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் Tvi, Sun TV, Vijay TV, internet, தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

## HOUSE FOR RENT

**HWY 7 & 9 TH LINE**
4 Bedroom house for rent. Close to all facilities. Avail. November 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.735.8403

**WESTERN & HWY 7 WOODBRIDGE**
3 Bedroom house for rent with bsmt. Close to all facilities. Avail. December 01, 2010. Rent $1400 + utilities.
தொடர்புகளுக்கு: 416.991.8365

**BRIMLEY & FINCH**
3 + 1 Bedroom house for rent. Close to all facilities. Avail. immediately.
416.450.9152 / 416.297.9152

**NEILSON & ELLESMERE**
3 Bedroom house for rent. Close to school, TTC, hospital, mall, university. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.286.8056

**MARKHAM & LAWRENCE**
Newly renovated 3 Bedroom house for rent. Rent $975 + 60% utilities per month. Laundry, cable & parking. Avail. December 01, 2010
தொடர்புகளுக்கு: 416.836.0074

**NEILSON & MCLEVIN**
3 Bedroom மேல்தளத்திலும், 1 bedroom bsmt இலும் வாடகைக்கு உண்டு. Close to all facilities. Avail. immediately.
416.282.2668 / 416.799.0352

**KENNEDY & FINCH**
3 + 2 Bedroom house for rent. Close to all facilities. அறைகள் தனித்தனியாக கொடுக்கப்படும். **3** அறைகள் சேர்த்தும் கொடுக்கப்படும். 2 அறைகள் சேர்த்தும் கொடுக்கப்படும். Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.568.6407

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

**BASMENTT WANTED**
Finch Road இல் நிலமட்டத்துடன் ஒரு படுக்கையறை கொண்ட bsmt வாடகைக்கு தேவை. மேலதிக தொடர்புகளுக்கு
416.284.0712 / 905.201.7608

## CONDO. FOR RENT

**MCLEVIN & TAPSCOTT**
2 Bedroom condo. for rent. Close to all facilities. Avail. immediately.
416.291.9964 / 416.520.2754

**SHEPPARD & MARKHAM**
2 + Den ground floor condo. for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.826.8823

**PHARMACY & FINCH**
Two Bedroom condo. for rent. Rent $1200. Parking, utilities, cable included. Avail. November 15, 2010.
905.472.9594 / 647.808.9142

## CONDO FOR SALE

**5235 FINCH AVE**
2 Bedroom + den condo. for sale. 2 Washroom, 2 parking. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 416.816.8775

## CONDO. FOR RENT / SALE

**($79,000 / $1050 + HYDRO)**
**DIXON & KIPLING**
Renovated corner unit. Approximately 950 - 1000sq.ft, 24hrs. gated, security, laundry, 1 bus to subway. Existing fridge, stove. 1st & last month rent should be paid in advance. Gym indoor pool. Avail. November 01, 10.
Home: 905.793.5779 (After 7pm)
Work: 905.793.4493 x 234
647.300.0706

## HOUSE FOR SALE

மானிப்பாயில் 3 3/4 பரப்பு காணியில் உள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. கோவில், வைத்தியசாலை, பாடசாலை என்பன அருகில் உள்ளன.
தொடர்புகளுக்கு: 011.94.1.1250.3018
mohan1821@hotmail.com

**NEILSON & FINCH**
3 Bedroom + 1 bedroom finished bsmt house for sale. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.648.0641

## SPACE FOR RENT

**MARKHAM & ELLESMERE**
100 பேர் கொண்ட பிறந்தநாள் விழா, ஒன்று கூடல், புத்தக வெளியீடு மற்றும் நடன வகுப்பு, இசை வகுப்பு நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. மேலதிக தொடர்புகளுக்கு
416.568.1221 / 416.725.1125

**MARKHAM & MCNICOLL**
100 Ironside Crescent. Unit # 4. 1400 Sq.feet. Half Space or full space. Utilities not included.
தொடர்புகளுக்கு: 416.431.5406

மேலும் பக்கங்கள் 24, 26

## JOB JOB JOB

### GENERAL HELP FOR FACTORY

**Fax Resume to 905.669.6587**

**KENNEDY & ELLESMERE**
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் சுப்பர் மார்கட் ஒன்றின் மீன் பகுதிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. மேலதிக
தொடர்புகளுக்கு: 647.430.8238

## SALE SALE SALE

Brand new watersoftner installed $1300. 10 Years warranty. Washer & dryer for sale. Liverpool. 2 years old. $500 only.
தொடர்புகளுக்கு: 416.671.5025

**பிள்ளைகள், முதியோர் பராமரிப்பு**
பாடசாலைக்கு பிள்ளைகளை கூட்டிச்செல்லுதல், பெற்றோர் வேலை முடிந்து வரும் வரை பிள்ளைகளைப் பராமரித்தல் (Day care), Tuition, முதியோர்களை பராமரித்தல் போன்றவற்றிற்கு அழையுங்கள். **சிற்றுண்டி வகைகள்** orderக்கு செய்து delivery செய்யப்படும்.
தொடர்புகளுக்கு: 416.731.2833

## ஆடைகள் விற்பனைக்கு

**தீபாவளி மலிவு விற்பனை**
நவீன Design wedding sarees, heavy work sarees, calcutta designer sarees, hand work banarasi sarees, masakali hand work patiala, fancy hand work choli set. என பல வகையான தெரிவுகள். ஒரு முறை நேரில் வந்து பார்த்தால் புரியும்.
416.400.7398 / 905.201.6791

## மணமகள் தேவை

Toronto வில் CGA, MBA முடித்த மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 647.808.9142

## மணமகன் தேவை

உயர்குல சைவவேளாளர் 40 வயதுடைய கொழும்பில் Accountant ஆக பணிபுரியும் அழகான மணமகளுக்கு Sponsor செய்யக்கூடிய மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு: **416.875.4051**

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் உரும்பராயை சேர்ந்த கனடாவில் வேலை செய்யும் அவிட்ட நட்சத்திரம், 41 வயது மணமகனுக்கு கனடாவில் வசிக்கும் மணமகள் தேவை. யாழ்பாணத்தில் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: **416.431.1345**

## CAR FOR SALE

1997 Honda Accord EX model car for sale. White colour. 260,000 km. Price $2000. Good condition.
தொடர்புகளுக்கு: 416.292.3949

## CARS FOR BUY & SELL

Toyota Camry, Corolla, Honda, Honda Civic கார்கள் வாங்குவதற்கும் விற்பனைக்கும் உண்டு. 2005 Corolla, 1995 Honda விற்பனைக்கு உண்டு. அத்துடன் ***Van Service*** உம் உண்டு.
அழையுங்கள் : **416.625.4146**



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

**BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070**

## Answers TUTORIAL 269

(1) (a) $5^{2x-1} = 5^{2x}\ 5^{-1} = (5x)^2/5 = 15^2/5 = 45$

(b) $\text{Log}_3 (\sqrt{3}/2) - \text{Log}(1/2) = \text{Log}3^{\sqrt{3}} - \text{Log}_3 2) - (\text{Log}_3 1 - \text{Log}_3 2)$

$= 1/3\text{Log}3^3 - \text{Log}_3 2 - 0 + \text{Log}_3 2 \quad =1/3$

(c) $\text{Log}_8 18 = \text{Log}_8(2 \times 3^2) = \text{Log}_8 2 + 2\text{Log}_8 3 = \text{Log}_8 8^{1/3} + 2x \ =1/3 + 2x$

(2) (a) $7^{x+2} - 7^x = 48\sqrt{7}$ $\quad 7x(7^2 - 1) = 48\sqrt{7}$ $\quad 7x\,(48) = (48)\,7^{1/2}$

(b) $3^{2x} + 3^x = 20$ $\quad 3^{2x} + 3^x - 20 = 0$ $\quad (3^x)^2 + 3^x - 20 = 0$

Let $3^x = y$ $\quad y2 + y - 20 = 0$ $\quad (y - 5\ x^{y-4}) = 0$

$(3^x - 5)\ (3^x - 4) = 0$ But $3^x + 5 > 0$ for any value of $3^x - 4 = 0$, $3^x = 4$

$x\ \text{Log}3 = \text{Log}\ 4$ $\quad x = \text{Log}4/\text{Log}3$

(3) y = 6/3x - 1

(4) $y= x^3 - 2x^2 - 5x + 10/x + 2$ When we divide $x^3 - 2x^2 - 5x + 10$

$y = x^2 - 4x + 3 + 4/x + 2$ Limit of $4/x + 2$ when x ........> $\infty = 0$

$Y = x^2 - 4x + 3$ is a parabolic asymptote.

(5) Normal to the plane $\pi$: $4x - 2y + 5z - g = 0$ is n = (4, -2, 5) An equation of a line through the origin with direction vector n will be x = 4t, y=-2t, z=5t substituting in to $\pi$ give 16t + 4t + 25t - 9 = 0. t = 1/5, Therefore the normal intersect the place at (4/5, -2/5, 1)

## Tutorial 270 Questions

(1) The roots of $9x^2 - 28x + 3 = 0$ are r and s. Find the value of $\text{Log}_3 r + \text{Log}_3 s$. (Grade 11 & 12)

(2) What is the sum of the serious

$\text{Log}_{10}(3/2) + \text{Log}_{10}(4/3) + \text{Log}_{10}(5/4)$ ________ $\text{Log}_{10}(200/199)$.

(For Grade 11 & 12)

(3) Prove the identity $1 - \text{Sin}^2\varnothing/1 + \cot\varnothing - \text{Cos}^2\varnothing/1 + \tan\varnothing = \text{Sin}\ 2\varnothing/2$. (Gr.11&12)

(4) Determine, to two decimal places, where the slope of a tangent line and the slope of the secant line that passes through A (2, -4) and B (3, 0) are equal on the graph of $F(x) = x^3 - 3x^2$. (For Gr 11 & 12)

(5) Solve the following system of equations and give a geometrical interpretation of the results. $x + 2y + 2 + 3 = 0$ $\quad x + 7y + 4z + 13 = 0$

$2x - y - z - 4 = 0.$


**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.

Classes available at *Scarborough & Stouffville*

**Contact: 647.340.9490 / 647.831.0363**

**Tutoring**



***Tutoring for students from grade 3 to 12.***

Courses include: **Math, Science, Algebra and Geometry, Advance Function, Physics, Chemistry and English.** **Also tutoring available for University student.**

***You will have a better chance of achieving your goals. Courses taught by experience University graduates. Cost for the courses areas the following:***

Grade 3 to 5 from $30.00/month Grade 6 to 8 from $40.00/month

Grade 9 to 12 from $50.00/month **Location:** Near **Birchmount & Sheppard.**

For more information contact *Kula* (B.Engineer McMaster University Canada, B.Sc Jaffna University SriLanka) at

**Home: (416) 850-9397 Cell: (416) 317-9413**



**யோகா சோதிடம்**

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

**Tutoring**

Gr.1-12; College & University

* English * French * Math * Physics * Chemistry * Biology *

- Systematic and individualized Plan to Build Strong Base in Core Subject Areas
- Strict Adherence to Ontario Curriculum
- Regular School Teachers and Canadian University Graduate and Post Graduate Students Taking Classes

**GTA Tutors**

**Ph: (647) 705 0725**

Our Aim is to Make Students Competent Internationally while Committed to Affordable Rates

**YARL WINDOW BLINDS & DRAPERY**

Since 1991

Tel: 416.806.5397

905.201.7733





VENETIAN/VERTICAL/ROLLER WOOD/FORMWOOD BLINDS

WOOD & VINYL SHUTTERS

WE ARE SPECIALIZED IN CUSTOM MADE Drapery & Blinds

CALL: N. SELVAM

We have experience to make your home more beautiful

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு **www.vlambaram.com** அல்லது **www.tamilexpress.net**

## TUITION CLASSES

Maths, English, Science, Art & Tamil.
Gr. 8 Preparation for next grade.
• Homework help • Flexible time.
1 to 1 or group classes.
Call: 905.554.2496

## COMPUTER REPAIR

உங்கள் கணினி (Computer) யில் ஏற்படும் குறைபாடுகளை நேரில் வந்து நிவர்த்தி செய்யவும் மற்றும் கணினி (computer) திருத்த வேலைகளுக்கும் அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள் நிமல் - **416.301.1999**

## NEED HELP WITH MATH & SCIENCE

**Tutoring available for students from grade 6 - 12.**

Qualified math & science teacher. Reasonable rates. You will see results in no time. For more information.
416.553.1599 / 416.286.0043

## TUTORING

**BRIMLEY & LAWRENCE**

For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS.
***Grade 5 - 12.*** Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: ***416.669.3101***



FREE DIAGNOSE

## Computer Repair

PC Repair, Upgrade,Virus Removal, Antivirus, Firewall,Data Recovery, Etc...



கணணி சார்ந்த திருத்த மற்றும் அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள் - Niruthan N

Laptops & Desktops Accessories, Used Computers ,Scanning, printing, Etc...

Pro-Win Computer Ser. Ltd
919 Ellesmere Road, Suite # 302
Scarborough, M1P 2W7.
Tp: 647-3405568/ 416-8797489
(Kennedy & Ellesmere)

## WANTED

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. Any condition.
Raj - ***647.269.6552***

## மணமகள் தேவை

உயர்குல சைவவேளாளர் 30 வயதுடைய ஆண் தாதி கிறிஸ்தவ மணமகனுக்கு கிறிஸ்தவ மணப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு: 647.342.3313

## தமிழ் வகுப்பு

பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தரம் 1 - தரம் 12 வரை உள்ள மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கப்படும். உங்கள் பிள்ளைகளும் தமிழில் எழுத வாசிக்க அழையுங்கள். 905.554.2496


மேலும் பக்கங்கள் 24, 25


NOVEMBER **28** SUN DAY 5.30PM

சுடர் ஏந்திய தொடர் ஓட்டம்
காலம் இலக்கிய நிகழ்வு

செழியனின்
## வானத்தைப் பிளந்த கதை
(ஈழப் போராட்ட நாட்குறிப்பு)
புத்தக வெளியீடு

பிரதம பேச்சாளர்
**A.R.வேங்கடாசலபதி**
Professor Madras Institute of Development Studies
Associate Fellow, South Asia Initiative
Coordinate Researcher, Harvard-Yenching Institute
Harvard University

MID SCARBOROUGH COMMUNITY CENTRE
2467 EGLINTON AVE EAST
KENNEDY SUB WAY
தொடர்புகளுக்கு: Kalam@tamilbook.com

## LOCKER ROOMS AVAILABLE

5 அடி, 6 அடி, 7 அடி அளவுள்ள தனித்தனியான Locker Rooms ஸ்காபரோவில் வாடகைக்கு உண்டு. குறைந்த காலம் அல்லது நீண்ட காலத்திற்கு வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: Email: vlambaram@sympatico.ca

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# APARTMENTS FOR RENT



# $250 Move In Bonus

***Best Building in Scarborough!***
***Clean, family building, FREE parking.***
***Close to schools, bus stop, Tamil store in building.***

**Pl. Call: 416.264.2818**

$100 $250 $100

## *Ontario Vegetarian Food Bank*
## Thanks giving food drive 2010

$100 $100

www.vegfoodbank.ca

$250 $250

**தொண்டர் சேவை மூலம் தொடர்ந்து வேலை வாய்ப்பு - Employment**

ODSP, Welfare வருவாயில் தாங்கி இருப்பவர்களாயின் எமது நிறுவனத்துடன் பதிவு செய்து தொண்டாற்றும் பொழுது எமது தொழில் வேலைவாய்ப்பு ஆலோசகர்கள் உங்களை உங்கள் தகைமை, திறமைக்கேற்ற தொழில் பயிற்சி அளித்து உங்களை ஆயத்தம் செய்வார்கள்.

$100 $100

எந்தவித ODSP, Welfare சம்பந்தமான உங்கள் பிரச்சினைகளுக்கும் இலவச ஆலோசனை வழங்கப்படும், மொழி பெயர்ப்பு சேவை உட்பட உங்களால் முடிந்தவரை தான தர்மம் செய்யுங்கள். நீங்கள் உண்ணும் பொழுது ஒருகைபிடி அடுத்தவருக்கு கொடுத்து உண்ணுங்கள்.

$250 $250

**தானமும் தர்மமும் தான் எமது தலைமுறையை வாழவைக்கும், வழிப்படுத்தும் வளப்படுத்தும்.**

$250 $250

உணவுத்தானம் செய்ய விரும்புவர்கள் உங்கள் கைகளால் பசித்திருப்பவர்களுக்கு உணவைக் கொடுக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**தானம், தர்மம், தொண்டு**

$100 $100

**குமரன் - *(416)744 HELP (4357)***
*2370 Midland Ave. #B5 / Sheppard*
*2400 Finch Ave. West / Weston #10*
அலுவலக நேரம் 10am to 6pm Mon. - Sat.

$250

$100 $250 $100

# ஈழம் சினிமா, *Speaking Parts, I am slave (TIFF 2010)*

இன்று பல இளம் இளைஞர்கள் 'எமக்கான சினிமா'வை எங்களுக்கென ஒரு தனித்துவ திரைப்பட மொழியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். கடந்த காலங்களில் பல புலம் பெயர் திரைப் படங்கள் சர்வதேச திரைப்பட விழாக்களை அலங்கரித்துள்ளன. சர்வ தேசரீதியாக எமது அவலங்களை வெளிப்படுத்தவும் இவை உதவும். அவ்வகையான முயற்சிகள் எங்கிருந்தாலும் இனம்கண்டு பாராட்டுவதுடன் அவர்களை உற்சாகப் படுத்தப்படுத்த வேண்டியது எமது கடமை. நோர்வேயில் இருந்து இயங்கும் 'ஈழம் சினிமா' என்ற இணையத்தளம் எமது படைப்பாளிகளின் படைப்புக்களை உலகறியச் செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளது. இவர்களது நோக்கங்களாக ஈழத் திரைப்பட முயற்சி களுக்கு ஆதரவளிப்பது, உலகெங்கும் பரந்து வாழும் ஈழக் கலைஞர்களை ஒன்றிணைப்பது, இளம் சந்ததியினருக்கு எமது கலைகளைப் பற்றிய புரிந்துணர்வை வளர்ப்பதுடன் அவர்களது முயற்சிகளுக்கு உதவியும் ஆதரவும் வழங்குவது, எமது படைப்புகளுக்கான ஒரு பதிவுத் தளத்தை உருவாக்குவது போன்ற விடயங்கள் ஆகும். இவர்களது இணையத்தளத்தில் பல குறும்படங்களை பார்க்கலாம். அத்துடன் பல கட்டுரைகள், பேட்டிகள், கலைஞர்களைப் பற்றி அறிமுகங்கள், திரைப்பட விழாக்கள் பற்றி செய்திகள் போன்ற விடயங்கள் உள்ளன. அத்துடன் படைப்பாளிகள் தொழில்நுட்பம் பற்றிய ஆலோசனைக்கும் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள் பற்றிய விபரங்களும் உள்ளன. ஒரு கருத்துப் பரி-மாற்றத்துக்கும் இத்தளம் உதவி செய்கின்றது. இவர்களது முயற்சியை பாராட்டுவதுடன் இன்றைய தேவையாக உள்ள இவ் இணையத்தளத்தை உருவாக்கியமைக்கு இவர்களுக்கு நாங்கள் நன்றிக் கடனுடையவர்களாகவும் உள்ளோம். இதன் பின்னணியில் இயங்கும் வன்னி மவுஸ் இயக்குனர் சுபாஸ் பாராட்டுக்குரியவர்.

http://www.eelamcinema.com

## *Speaking Parts*



Atom Egoyan குறிப்பிடத்தக்க படம். இயக்குனரின் கலைத் தன்மை வெளிப்பாட்டிற்கு இப்படம் ஒரு சிறந்த உதாரணம். இப்படம் உடலுறவு, மரணம், நவீன தொழில்நுட்பம் போன்ற விடயங்களை மீள் பார்வைக்குட்படுத்துகின்றது. ஊடகங்கள் குறிப்பாக வீடியோ, தொலைக் காட்சி போன்றவற்றின் நம்பகத் தன்மையையும் அவை மனித வாழ்வில் ஏற்படுத்தியுள்ள முக்கிய இடத்தையும் கேள்வி கேட்கின்றது. (தொலைக் காட்சித் தொடர்கள் பலரது வாழ்வில் ஒரு அன்றாட செயல்பாட்டாக மாறி விட்டது) பார்வையாளர்களுக்கு செய்தி திரிபுகளையும் கவர்ச்சியையும் இவ் ஊடகங்கள் வழங்குகின்றன. பார்வையாளர் கள் இவற்றை முழுமையாக நம்புகின்றார்கள் என்பது இயக்குனரின் குற்றச்சாட்டு.

நவீன ஊடகங்களை தமது படங்களில் பாத்திரங்களாக கொண்டுவந்து அவை பற்றிய தீவிர விமர்சனங்களை முன்வைத்த படைப்பாளிகளுள் Atom Egoyan குறிப்பிடத்தக்கவர். இவர் எப்பொழுதும் பார்வையாளர்களை கவர வேண்டும் என்பதற் காகவோ, அவர்கள் விருப்பத்துக்காகவோ படங்கள் எடுப்பதில்லை. அவரது படங்களில் பார்வையாளர்களின் முகத்தைக் காணலாம். அவர்கள் தங்களை பல பரிமாணங்களில் தரிசிக்கலாம். இவரது பெரும்பாலான படங்களில் இவரது மனைவி நடித்துள்ளார். இப் படத்திலும் லிசி என்ற பாத்திரத்தில் நடித்துள்ளார்.

ஹொட்டல் ஒன்றில் வேலை பார்க்கும் லான்ஸ் இரு பெண்கள் மத்தியில் அகப்பட்டு விடுகின்றார். லான்ஸ் ஒரு துணை நடிகராக பகுதி நேரங்களில் செயற்படுகின்றார். இவருடன் ஹொட்டலில் வேலை பார்க்கும் லிசிக்கு லான்ஸ் மீது ஓர் கண். இவர் அருகில் உள்ள விடியோக் கடைக்குச் சென்று லான்ஸ் நடித்த படங்களை வாடகைக்கு எடுத்து பார்ப்பது வழமை. வீடியோ கடைக்காரர் கூட இவரை ஒரு வினோதமாகவே பார்ப்பார். ஒரு சில காட்சி களில் வரும் லான்சுக்காக லிசி உருகுவது கடைக்காரருக்கு வினோதமாகவே படுகின்றது. கடைக்காரர் பகுதி நேரமாக கலியாண வீடுகள், விருந்துகள் போன்றவற்றை வீடியோ படம் பிடிப்பவர். சில திரைப்பட முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார். லிசி இவரிடம் வீடியோ கற்று ஒரு கலியாண வீட்டிற்கு கடைக்காரரின் உதவியாளராகச் செல்கின்றார். லிசியால் அக்கலியாணம் குழப்பத்தில் முடிகின்றது. இச்சம்பவம் லிசிக்கும் கடைக்காரருக்குமான உறவை வலுப்படுத்துகின்றது.

லான்ஸ் அதே ஹொட்டலில் அங்கு தங்கும் பெண்களுக்கு ஒரு பாலியல் தொழிலாளி யாகவும் செயல்படுகின்றார். இதற்கு இவரது முகாமையாளரும் ஒத்துழைக்கின்றார். ஹொட்டலில் தங்கும் கிளரா ஒரு தொலைக் காட்சிப் படத்திற்கு திரைக்கதை ஆசிரியர். லான்ஸ் இவர் மூலம் அப்படத்தில் பிரதான பாத்திரத்தில் நடிப்பதற்கு முயற்சிக்கின்றார். அதற்கேற்ப திரைக்கதையையும் மாற்றுகின்றார். லான்சுக்கும் கிளராவிற்குமான உறவு தொலைபேசி, தொலைக்காட்சியூடாக தொடர்கின்றது. video conferencing இக் கதையில் கிளாரா, தனது சகோதரனுக்கு உடலுறுப்பை தானம் செய்கின்றார். அப்படியி ருந்தும் சகோதரன் இறந்து விடுகின்றான். இது உண்மைச் சம்பவங்களைக் கொண்டது. லான்ஸ் இதில் கிளாராவின் சகோதரனாகவே நடிக்க விரும்புகின்றார்.

தயாரிப்பாளர் டேவிட் இக்கதை மாற்றத்தை நிராகரிக்கின்றார். தொலைக்காட்சி கூட்ட மொன்றில் video conferencing. இவர் கிளாராவை திட்டுகின்றார். 'எனக்கு மக்களுக்கு என்ன விருப்பம் என்பது தெரியும். அதனால்தான் நான் இந்த நிலையை அடைந்துள்ளேன்' என இறுமாப்புடன் கூறுகின்றார்.

ஒரு விடயத்தை இப்படம் உறுதியாக கேட்கின்றது 'ஊடகங்கள் யாரின் கையில் உள்ளது? உறவுகளுக்கிடையில் உள்ள இடைவெளியையும் (மனோரீதியாகவும் இயல்பாகவும்) சிக்கலையும் இப்படம் பதிவு செய்துள்ளது. லிசி லான்சை விரும்புகின்றாள். லான்ஸ் இதனை நிரா-கரிப்பதுடன் அவளை ஒதுக்குகின்றான். லிசி லான்சின் புகைப்படங்களை கூட தன்னுடன் வைத்துள்ளாள். லிசி லான்சிடம் Let me love you என சில தடவைகள் கூறியும் உள்ளாள். வீடியோவில் லான்ஸ் நடித்த படக்காட்சிகளைப் பார்ப்பதன் மூலம் தனது உறவை வளர்த்துக் கொள்கின்றாள். கிளாராவிற்கும் லான்சுக்குமான உறவு சமூக எல்லைகளைத் தாண்டி பின்னர் வீடியோ கொன்பிரன்சின் மூலமும் தொடர்கின்றது. தயாரிப்பாளர் தொலைவில் இருந்து கொண்டு இவ் உறவுகளின் மீதான தனது ஆதிக்கத்தை வீடியோ கொன்பிரன்சிங்கூடாக செயல்படுத்துகின்றார்.

## *I am slave (TIFF 2010)*

இவ்வருடம் ரொரண்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. எம்மவர் செல்வா இராசலிங்கமும் இப்படத்தில் அமீர் என்ற பாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படம் இங்கிலாந்தில் வாழும் அடிமைகளைப் பற்றியது. சூடானில் மல்யுத்த வெற்றி வீரரின் 8வயது மகள் கடத்தப்பட்டு முதலில் சூடானின் தலைநகரில் ஒரு செல்வந்தரின் வீட்டில் வீட்டு வேலைகள் செய்கின்றாள். பின்னர் இங்கிலாந்துக்கு அனுப்பப்படு கின்றாள். அவள் தொடர்ச்சியாக சித்திர வதைகளை சந்திக்கின்றாள். அதிகாரிகள-டம் சென்றால் தந்தை கொல்லப்படுவார் என வேறு மிரட்டப்படுகின்றாள். இறுதியில் இச்சிறையில் இருந்து மீண்டு சூடானுக்கு செல்கின்றாள். Mende Nazer என்ற பெண்ணின் உண்மைச் சம்பவமே இப்படம். படம் முழுவதும் சித்திரவதைகளும் கொடுமைகளும் பரவலாக காட்டப்படுகின்றன. எட்டு வயதில் சமையல், உடுப்பு தோய்த்தல், துப்பரவு செய்தல்,

### தூறல்

**வானரன்**

கூட்டல் போன்ற சகல விடயங்களும் செய்ய வேண்டும். மணி என்ன இரவு 10? வேலை செய்யத்தான் வேண்டும். இது சூடானில். பின்னர் இது இங்கிலாந்திலும் தொடர்ந்தது. படத்தில் தந்தையும் மகளும் சந்திக்கும் காட்சியை விட அனைத்தும் கொடூரமானவை.



இயக்குனர் சூடானில் நடைபெறும் அரசியல் குழப்பங்களை கவனத்தில் எடுக்காமலேயே சூடான் தலை நகரை சுற்றி வருகின்றார். ஆச்சரியமாகத்தான் இருந்தது. Death of president, Last king of Scotland படங்களை இயக்கிய Gabriel Range இயக்கியுள்ளார். இன்றும் உலகெங்கும் அடிமைகள் தொடர்ச்சியாக உள்ளார்கள். பொருட்களை விற்பது போல் இவர்கள் விற்கப்படுகின்றார்கள். இலங்கையில் 1970களில் யாழ்ப்பாணத்தின் பல வீடுகளில் மலையகத்தை சேர்ந்த குழந்தைகள் மிகவும் மோசமாக கொடுமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் பாடசாலைக்குச் செல்ல கூட அனுமதிக்கப்படவில்லை.

கடந்த காலங்களில் லண்டனில் பெருமளவு குழந்தைகள் கடத்தி வரப்பட்டு வீட்டு வேலை மற்றும் பாலியல் தொழில் செய்யுமாறு வற்புறுத்தப்படுகின்றனர். 2003ம் ஆண்டளவில் சுமார் 63 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டிருந்தது. 2007ம் ஆண்டு அப்போதைய பிரித்தானிய அமைச்சர் Vernon Coaker "Research suggests that [trafficking] is not reducing in either scale or reach. It's a sad sign of our times that children are still being traf-ficked to the UK as modern slaves." எனத் தெரிவித்திருந்தார். அதேசமயம் Debbie Ariyo, director of Afruca (Africans Unite Against Child Abuse) அரசை கடுமையாக

தொடர்ச்சி 30ம் பக்கம்

# திரை விமர்சனம் - ஒச்சாயி



- பிலிம்நியூஸ் கிருஷ்ணன் -

புதிய இயக்குநர், புதுமுக நடிகர்கள், தயாரிப்பு நிறுவனமும் புதியது, சிறிய பட்ஜெட் படம் வேறு... ஆனாலும், பெரிய நடிகர்களின் திரைப்படங்கள் அளவுக்கு செய்திகளில் பரபரப்பாக பேசப்படுகிறது, 'ஒச்சாயி'. காரணம்... படத்தின் பெயர்தான். 'ஒச்சாயி என்பது தமிழ்பெயர் இல்லை' என்று, தமிழில் தலைப்பு வைத்தால் வழங்கப்படும் வரிவிலக்கை இப்படத்துக்கு மறுத்துவிட்டது, தமிழக அரசு. உடனே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநி-லச் செயலர் தா. பாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் போன்ற அரசியல்வாதிகள் படத்துக்கு ஆதரவாக அறிக்கை விடுகின்றனர், பத்திரிகைகள் வரிந்து கட்டிக்கொண்டு எழுதுகின்றனர். இவ்வளவு பேர் அக்கறைகொள்ளும் அளவுக்கு இது நல்ல படமா?

இல்லை... கத்தி எடுத்தவனுக்கு கத்தியால்தான் சாவு என்ற கருத்தை வலியுறுத்தும் வழக்கமான தமிழ்படம்தான். திரைத்துறைக்காரர்கள் மொழியில் சொன்னால், 'பெற்றோர்கள் செய்யும் தவறால் பிள்ளைகளின் வாழ்க்கை எப்படி தடம் மாறி, தறிகெட்டு போய்கிறது' என்பதுதான் படத்தின் 'ஒரு வரி கதை'.

மனைவி இறந்ததால், தாய் இல்லாத மகன் தயாவின் எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு, இரண்டாவது திருமணம் செய்கிறார் ராஜேஷ். ஆனால், அமைதியான அவர் வாழ்க்கையில் விதி விளையாடுகிறது. இரண்டாவது மனைவிக்கும் வேறொரு இளைஞனுக்கும் தொடர்பு இருப்பதை அவர் நேரிலேயே பார்த்துவிடுகிறார். ஆவேசத்தில் மனைவியையும் இளைஞனையும் கொலை செய்துவிட்டு, சிறைக்கு செல்கிறார். இதனால், தாயும் தந்தையும் இல்லாமல் அனாதையாக வளரும் கதாநாயகனை, கொலைகாரன் பிள்ளை என்று ஊரும் உறவினர்களும் துரத்தியடிக்கிறார்கள். குப்பை மேட்டில் வளர்கிறான். பசிக்கொடுமையால் சிறு சிறு திருட்டு செயலில் ஈடுபடுகிறான். ஒரு கட்டத்தில் அதையும் மீறி கொலையும் செய்து விடுகிறான். கொலை வழக்கில் இருந்து அவனைக் காபாற்றும் ரவுடி திரவிய பாண்டியன், தயாவை தம்பியாக தத்தெடுந்து, முரட்டுத்தனமான ரவுடியாக வளர்கிறார்.

தண்டனைக் காலம் முடிந்து சிறையிலிருந்து விடுதலையாகும் ராஜேஷ், பிள்ளை பற்றிய கனவுகளோடு ஊர் திரும்புகிறார். ஆனால், ஊரே அஞ்சும் ரவுடியாக, அப்பனையே சரக்குக்கு 'சைட் டிஷ்' வாங்க அனுப்புகிற அளவுக்கு முரடனாக அவன் வளர்ந்திருப்பது கண்டு வேதனையடைகிறார். மகனுடைய நிலையை நினைத்து வருந்தி, திரவியபாண்டியனிடம் இருந்து அவனை மீட்கப் போராடுகிறார். 'ஒரு கல்யாணம் செய்துவைத்தால் எல்லாம் சரியாகப் போய்விடும்' என்ற ஊர் வழக்கப்படி, மகனை நல்லவனாக மாற்ற, அனாதையான தன் தங்கை மகள் தாமரையை அவனுக்கு மணம் முடித்து வைக்க பேசுகிறார். சித்தியின் தகாத செயலால், பெண்கள் என்றாலே வெறுக்கும் தயா, தாமரையை விரும்பாமல் எடுத்தெறிந்து பேசுகிறான். ஆனால், நாளடைவில் தாமரை மீது அவனுக்குள் காதல் மலர்கிறது.

இந்நிலையில், காதல், கலாட்டா என்று மாறி விட்ட தயாவிற்கும் பெரிய மனிதர் போர்வையில் ஒளிந்திருக்கும் மதுரை தாதாவான சந்தானபாரதிக்கும் இடையே மோதல் ஏற்படுகிறது. சந்தானபாரதிக்கும் தயாவுக்கும் தொழிலில் போட்டி ஏற்படுகிறது. ஒருவரை ஒருவர் கொல்லத் துடிக்கின்றனர். இதையறிந்த திரவியபாண்டியன், சந்தானபார-தியை எச்சரிக்கிறார், பொதுமக்கள் முன்னிலையில் செருப்பால் அடிக்கிறார். இதனால் பொங்கி எழும் சந்தானபாரதி, திரவியபாண்டியன் மற்றும் தயா கூட்டத்தையே கொலை செய்ய வேறொரு ரவுடி கும்பலிடம் பேரம் பேசுகிறார்.

எல்லாப் படங்களிலும் கடைசியில் கதாந-ாயகன்தானே வெற்றி பெறுவான், இப்படமும் அப்படியே முடிகிறது.

கதாநாயகன் தயா, கதாநாயகி தாமரையும் இருவருமே புதுமுகங்கள். கதைக்கு ஏற்ற நடிகர்கள். கிராமத்து முகங்கள். நடிப்பிலும் தங்களது திறமையை சரியாக வெளிப்படுத்தி இருக்கிறார்கள். ஆனால், அவ்வப்போது 'பருத்திவீரன்' கார்த்தியை ஞாபகப்படுத்துவதை தயா தவித்திருக்கலாம்.

படத்தில் இரண்டாவது கதாநாயகன் என்று சொல்லும் அளவிற்கு அசத்தியிருக்கிறார் திரவிய பாண்டியன். இவர்தான் படத்தின் தயாரிப்பாளரும்கூட. கஞ்சா கருப்பு, 'கிலா கவர்ச்சி காமெடி ரசிகர்களை கலகலப்பாக வைக்கிறது. ராஜேஷ், பெரிய மாயனாகவே வாழ்ந்திருக்கிறார், ராஜேஷ். தன் மனைவி, வேறொருவனுடன் இருப்பதை பார்த்துவிட்டு பதறும் போதும், கோபத்தில் அவர்களை வெட்டிச் சாய்த்துவிட்டு, பிறகு தன் மகனை நினைத்து வருந்தும்போதும் அவரது நடிப்பு அனுபவம் மிளிர்கிறது. சந்தான பாரதி, 'பருத்திவீரன்' ஓமுரு போன்றோர் அளவான நடிப்பை வெளிப்படுத்தி அசத்தி இருக்கிறார்கள். சந்தானபாரதி மகனாக, லூசுப்பையனாக வரும் ஒச்சு, நல்ல தேர்வு.

சத்தத்தை தவிர்த்து பாடல் வரிகள் புரியும் விதத்தில் படத்திற்கு ஏற்ற இசையை கொடுத்திருக்கிறார் இசையமைப்பாளர் ஜீவராஜா. பிரேம்சங்கரின் ஒளிப்பதிவும் ஒகே தான்.

பல வருடங்களாக இதேபோன்ற கதை மற்றும் காட்சிகளுடன் வந்த பல படங்களை ஞாபகப்படுத்துவதை இயக்குநர் தவிர்த்திருக்கலாம். முடிவும் எதிர்பார்த்த மாதிரியே இருக்கிறது.

சரி, அது என்ன ஒச்சாயி?

மதுரை, உசிலம்பட்டி பக்கங்களில் கள்ளர் சமுதாய மக்களின் குலதெய்வம் ஒச்சாயி. ஆண் குழந்தை பிறந்தால் ஒச்சாண்டி, ஒச்சப்பன் என்று பெயர் வைப்பதும், பெண் குழந்தை பிறந்தால் ஒச்சாயி, ஒச்சம்மா என்ற ரீதியில் பெயர் வைப்பதும் இந்த மக்களிடையே சாதாரணம். "இந்த ஒச்சாயி எனக்கு மட்டுமல்ல, இயக்குநர் பாரதிராஜா, கவிஞர் வைரமுத்து, நடிகர் வாகை சந்திரசேகர் ஆகியோருக்கும் குலதெய்வம். இந்த நிலையில் ஒச்சாயி தமிழ்ப் பெயரா எனக் கேட்பது சரியல்ல. மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இந்தப் படத்தை எடுத்துள்ளேன். எனவேதான், ஒச்சாயி என்ற அழகிய தமிழ் பெயரை வைத்தேன்" என்கிறார், இயக்குனர் ஆசைத்தம்பி.

வன்முறைதான் தமிழக தென்மாவட்டங்களின் யதார்த்தமும் மண் மணமும் என்ற சினி-மாக்காரர்களின் யதார்த்தத்தில் வந்திருக்கும் மற்றுமொரு படம்.

NUTECHWORLD
Your Neighbourhood Computer Store
- Computer (Desktop, Laptop)Repairs
Upgrades
Virus,Adware,Spyware,etc Removal
Data backup, Recovery.
FREE Diagnostic**
- HP,DELL,ACER,IBM,NONAME
- Printer Repairs - Laser,Inkjet
- Networking - wired or wireless
- We do in-home diagnostic & repairs with discounted rates
- Other Services: Wallmount TV / Home theatre installation
Video Surveillance system
installation & maintenance
Batteries, Cables* 2 For $1.50
We Sell Computer / Electronic Accessories
CD/DVD Media, Cooling Fans, Cables,Laptop bags, iPOT Accessories,Thermal Intake PSU's ,Usb hubs,
Tel :416 335 5222
Info@nutechworld.com
5214 Finch Ave.East. Unit #160. Scarborough- ONT
( GTA Square Mall - Middlefield & Finch)
*Selected items, ** Offer ends August 15, 2010. Applies to computers / Printer in store service only.

17.10.2010
SaiSwaralaya
School of Carnatic Music
விஜயதசமியை முன்னிட்டு புதிய கர்நாடக வாய்ப்பாட்டு,வீணை,பண்ணிசை வகுப்புகள் ஆரம்பம்.
Tel: 416 299 1514

# தேவை என்பதே ஒற்றுமைக்கான வேத ஒலியாகும்

தமிழர்களுக்குள் ஒற்றுமை கிடையாது, அதனால்தான் அவர்கள் இப்படியாக பிரிந்து அழிகிறார்கள் என்ற கருத்தை அடிக்கடி உச்சரிக்காத தமிழரை எங்குமே காண முடியாது. ஒற்றுமை என்றால் எல்லோரும் ஒரே கொள்கையை ஏற்றுக் கொண்டு அதன் வழியே நிற்பதுதான் ஒற்றுமை என்று நம்மில் பலர் கருதுவதால்தான் தமிழரிடையே ஒற்றுமை இல்லை என்று கருதுகிறோம்.

அதிலிருந்து மேலும் ஒருபடி முன்னேறி, நமது கருத்தை ஏற்காதவர்கள் உலகத்தில் உயிருடன் வாழக்கூடாது என்றளவிற்கு முன்னேறினோம், அதனால் அழிந்தவர்கள் ஏராளம் ஏராளம்.

அன்று..

ஒரே கொள்கையைத்தான் எல்லோரும் ஏற்க வேண்டுமென எகிப்திய மன்னர்கள் கட்டளையிட்டார்கள். எல்லோரும் இணைந்து பிரமிட்டுக்களை அமைத்தால் மன்னன் மகிழ்வடைவான். நைல்நதி பெருக்கெடுத்து உங்களை அழிக்காது. மன்னன் இறைவனின் பிரதிநிதி என்பதால் நீங்கள் பிரமிட்டை அமைக்க வேண்டும். இக்கருத்தை அனைவரும் மறுப்பின்றி ஏற்க வேண்டும் என்றார்கள்.

அந்த ஒற்றுமை உலக சாதனைக்குரிய பிரமிட்டுக்களை படைத்ததை யாருமே மறுக்க முடியாது. ஆனால், பிரமிட்டுக்களுக்கு மேல் என்ன நடந்தது. பிரமிட்டுக்களால் ஒற்றுமைப்பட்ட சமுதாயத்தை வைத்து எதுவுமே செய்ய முடியாமலும், செய்யத் தெரியாமலும் எகிப்தியப் பேரசு படிப்படியாக அழிந்தது. மக்களிடையே மரண அச்சத்தை ஊட்டி தாம் உருவாக்கிய ஒற்றுமையானது நாளடைவில் வெறும் அடிமைகளை மட்டுமே வளர்த்தது என்ற உண்மையை எகிப்திய அரசி கிளியோபாட்ரா உணர்ந்து கொண்டாள். கடைசியில் பாம்பின் வாயில் கையை வைத்து மரணத்தைத் தேடிக் கொள்ள வேண்டிய அவலமே அவளுக்குப் பரிசாகக் கிடைத்தது.

ஒற்றுமை என்றால் ஒரு கருத்தை எல்லோரும் ஏற்கத்தான் வேண்டும் என்ற எண்ணம் நாலாயிரம் வருடங்களுக்கு முன்னரே தவறென நிறுவப்பட்டுவிட்டது. ஆனால் இதை சரியாக விளங்கி தமிழ்ப்படுத்திய பெருமை அறிஞர் அண்ணாவையே சாரும். 'வேற்றுமையிலும் ஒற்றுமை காண்போம்.' இந்த வாசகத்திற்கு சொந்தக்காரர் பேரறிஞர் அண்ணாவே.

வேற்றுமை உருபுகளை சொற்களுடன் ஒற்றுமைப்படுத்தினாலே பொருள் வேறுபடும் என்கிறது தமிழ் இலக்கணம். இந்த உண்மையை அறிஞர் அண்ணா கண்டு கொண்டிருக்காவிட்டால் கோடான கோடி தமிழக மக்கள் புதுமாத்தளன் போன்ற பேரவலத்திற்குள் என்றோ சிக்குப்பட்டிருப்பார்கள். காரணம், தனித்தமிழ்நாடு கேட்கும் கட்சிகள் தடை செய்யப்படும், அவர்களுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுமென ஜவகர்லால் நேரு சட்டத்தை கொண்டு வந்தபோதே அண்ணாவின் தூரப்பார்வை விழித்துக் கொண்டது. அந்த இக்கட்டான நேரத்தில் மாற்றுக் கொள்கை உடையோரை துரோகிப்பட்டம் கட்டி உணர்ச்சி அரசியல் நடாத்த வழியிருந்தும், விவேகமாக செயற்பட்ட அண்ணா ஒற்றுமையை வேற்றுமையில் கண்டு வெற்றி பெற்றார்.

ஆமாம், ஒற்றுமையை வேற்றுமையில் காண்பது எப்படி? இதோ ஒரு சிறிய கதை.

இன்புளுயன்சா நோயினால் உலகத்தில் மில்லியன் மில்லியன் மக்கள் அழிந்து கொண்டிருந்தார்கள். ஏறத்தாழ ஐரோப்பாவின் சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கே அழிந்துவிட்டது. இதற்கான மருந்தைத் தேடி முழு உலகமுமே போராடியது. பயன் கிட்டவில்லை.

ஒரு நாள். பெனிசிலியம் என்ற நச்சுக் காளானை பிடுங்கிவந்து மேசையில் வைத்த அலக்சாண்டர் பிளமிங் தற்செயலாக அதை மூடி வைக்க மறந்துவிட்டார். வெளியே சென்றவர் மறுபடியும் வீடுவந்து அந்தக் காளானைப் பார்த்தார். அந்தக் காளானில் பட்ட காற்று அருகில் இருந்த தாவரங்களை அப்படியே கொன்றொழித்திருந்தது.

ஆம். அந்த நச்சுக் காளானுக்குள்தான் உலகத்தையே காப்பாற்றக் கூடிய மகத்தான சக்தி இருந்தது. இன்றுவரை உலகத்தின் மொத்த சனத்தொகைக்கு இணையான மனிதஉயிர்களை காப்பாற்றியது இந்த பெனிசிலியத்தில் இருந்து உருவான பென்சிலீன் மாத்திரையே.

உலகத்தையே காப்பாற்றிய பெருமை கடவுள் உட்காரும் ரோஜாவுக்கோ, தாமரைக்கோ கிடையாது. இந்த நச்சுக் காளானுக்கே இருக்கிறது. எத்தனையோ அழகு மலர்களை எல்லாம் பாடுகிறோம். நாம் பெனிசிலியம் காளானை போற்றி ஒரு கவிதை பாடியிருக்கிறோமா. ரோஜாவுக்காக பாடிய கவிதைகளில் ஒரு கவிதையையாவது பெனிசிலியத்திற்காக பாடினோமா. கிடையாது. நமது கவிதைகளில் கூட சேர்த்துக் கொள்ள முடியாத பெனிசிலியம் தான் உலகிற்கே உயிர்ப்பிச்சை தந்திருக்கிறது. எல்லாவற்றையும் ஒற்றுமைப் படுத்துவோமென்று பெனிசிலியத்தையும், ரோஜாவையும் இணைத்து மாலை கட்டினால் என்ன நடக்கும். கட்டிய மறுகணமே மாலை கருகிச் சலசலத்துவிடும்.

வேறுபட்டு நிற்பதனால் இந்த உலகம் வாழும் என்பதே இயற்கை சொல்லும் இனிய வேதம். ஒவ்வொரு பூக்களையும் அதனதன் அழகோடு பூக்க அனுமதிப்பது வேற்றுமையல்ல அதுதான் உண்மையான ஒற்றுமையாகும்.

இப்புவியில் படைக்கப்பட்ட எல்லாவற்றுக்குமே ஒரு தேவை இருக்கிறது. தேவை என்பது வேத மந்திரம் போன்ற சொல்லாகும். தேவை என்ற சொல் எல்லாவற்றையும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் பயன்படுத்தும். நமக்கு ஒற்றுமைதான் தேவை என்று அலற வேண்டாம். அறிவுள்ளவன் பார்வையில் ஒற்றுமையும் தேவையும் ஒரே கருத்துள்ள சொற்களே. இயற்கையை இயற்கையோடு அனுபவியுங்கள் அங்குதான் இன்பம் இருக்கிறது. அங்குதான் இறைவன் இருக்கிறார் என்றார் ஐன்ஸ்டைன். எல்லாவற்றையும் அவையவைக்கே உரிய இயற்கையோடு வளர அனுமதித்தால் நாம் தேடும் ஒற்றுமை தானாகவே மலரும். புதுமாத்தளன் சோகத்தை அழிக்க மிகப்பெரிய பென்சிலீன் மாத்திரையாக அதுவே அமையும். எல்லாவற்றையும் அதனதன் பாட்டில் விட்டிருந்தால் புதுமாத்தளன் சோகமே வந்திருக்காது.

இதை உணர்ந்து புதுமாத்தளன் சோகத்தை அழித்தால் நம் கண் முன் புதுவழி பிறக்கும்.

- நன்றி அலைகள்

# ஈழம் சினிமா...

சாடியிருந்தார். "It's a scandal nobody has been convicted when we know so many people who have been trafficked and have lost their childhood. ஐ.நா வின் அறிக்கைகளின் படி பின்வரும் நாடுகளில் உள்ள குழந்தை அடிமைகளின் தொகை.

- United States: 40,000
- Middle East: 61,000
- European Union: 270,000
- China: 300,000
- Latin America/Carribean: 399,000
- Africa: 685,000 (considered as the "middle passage across the Atlantic") (the Philippines with 500,000)
- Asia: 4,100,000
- India: 22,000,000



இந்தியாவில் உள்ள குழந்தைகளை நீங்கள் கூட பார்த்திருப்பீர்கள் வீதிகளில் பிச்சை எடுக்குமாறும், வீட்டு வேலைகள், பாலியல் தொழில் போன்றவற்றில் பல குழந்தைகள் உள்ளார்கள். தொழிற்சாலைகளில் பலர் உள்ளனர். இது தீபாவளிக் காலம். சிவகாசி பட்டாசு - வெடித் தொழிற்சாலைகளில் இக் குழந்தைகளைக் காணலாம். பிரிட்டன் போன்ற நாடுகள் தமது மேல் தட்டு வர்க்கத்தினருக்காக சட்டங்களை தீவிரமாக நடைமுறைப்படுத்துவதில்லை. நவீன அடிமைகள் என வித்தியாசப்படுத்திக் காட்டுகின்றார்கள். முதல் ஏதோ இல்லாதமாதிரி.! மனித வரலாற்றின் தொடக்கத்தில் இருந்து மனித அடிமைகள் தொடர்கின்றன. சட்டம், ஜனநாயகம், அரசு, ஐ.நா போன்று மனிதனை நிறுவனமயப்படுத்தி ஒழுங்குபடுத்தும் அமைப்புக்களின் தோற்றம் வளர்ச்சியடைந்த போதும் அவற்றால் இதனை கட்டுப்படுத்த முடிவதில்லை. வல்லமை படைத்தவர்களின் கைகளில் உலகம் இயங்குகின்றது. அது மாறும் வரை இது தொடரும்.

# சிந்திக்க ஒரு கணம்



மானிடரை இறைவன் படைத்தான்
மகத்தான யந்திரம்
மனிதன் படைத்தான் பற்பல யந்திரம்
அற்புதமான கணனியும்
உலகம் முழுவதும் இணைத்திட வாய்ப்புக்கள்
வகைவகையாய் வசதிகள்
இன்பமாய் வாழலாம்
மானிடன் படைத்த யந்திரமோ
பழுதடைந்தாலும் திருத்தி ஓடலாம்
சில்லுக்காற்றுப் போனால்
காற்றடித்து ஓடலாம்
ஆனால் மனித யந்திரமோ
தோற் பையினுள் துருத்தியைப் போல்
கீச்சுக் கீச் சென்று ஓடுதாம் ஒரு மூச்சு
மூச்சுப் போனால் திரும்பி வராது
திரும்பப் பெறவோர் மருத்துவமும் கண்டதில்லை
விந்தையான தோர் மானிட யந்திரமோ.

- சரஸ்வதி சோமசுந்தரம் -

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com அல்லது www.tamilexpress.net

# தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது







## மேலைத் தேசத்தில் கீழைத்தேசத்து வாசனைகள்

Niru Niru
நிரு பிராண்ட்

# நிரு பிராண்ட் தயாரிப்புக்களே




# விடுதலை! விடுதலை! விடுதலை!

**என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள்., நலம் பெறப்பிரார்த்திக்கிறேன்.**

யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு அருகாமையில் அமைந்திருந்த தமிழர் சுயாட்சிக்கழகக் காரியாலையத்துக்குள் சென்றேன். 'விடுதலை' இதழின் பொறுப்பை ஏற்றேன். ஆசிரியத்தலையங்கம், சிறப்புக்கட்டுரைகள், அரசியல் துணுக்குகள் எழுதவேண்டும். கழக உறுப்பினர்கள் தரும் கட்டுரைகளைச் சரிபார்த்து, தேவையில்லாத பகுதிகளை, நீக்கி, தேவையானவற்றைப் புகுத்தி தரமாக்கிப் பிரசுரிக்க வேண்டும். யாழ் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பார்பதி அச்சகத்திற்குப் போய் அங்கு அச்சாகும் கழகப் பிரசுரங்களைச் சரிபார்க்க வேண்டும். மாலை நேரங்களில் பிரசாரப்பணிக்குத் தொண்டர்கள் வந்தால் அவர்களோடு கூடிச் சென்று நமது காவலூர் தொகுதிக்கு மட்டுமல்லாது நம்முடைய அபேட்சகர்கள் போட்டியிடும் பருத்தித்துறை, நல்லூர் தொகுதிகளுக்கும் சென்று உரை நிகழ்த்த வேண்டும். இரவு, நேரம் சென்றால் காரியாலத்தில் தங்கலாம்.

சட்டத்தரணி மாணவர்களான எஸ்.கே.மகேந்திரன், ஸ்ரீகாந்தா மற்றும் செயலாளர் சிவானந்தசுந்தரம் மலேப்பாம்பு மகேஸ்வரன் ஆகியோர் வந்தாலும் அவர்களைக் காரியாலயத்தில் தங்கிச் செல்ல அனுமதியுங்கள். காரியாலயப் பொறுப்பாளராய் மண்டைதீவைச் சேர்ந்த பாலசிங்கம் கடமையாற்றுவார் என்ற பணிப்புரைகளை எனக்கு வழங்கினார் கழகத்தலைவரான வ. நவரெத்திரனம். அவருடைய மக்கள் இருவர் அன்று சிறுவர்கள். இன்று சட்டத்தரணி மோகன் ஆகியும் பொறியலாளர் ஜெகன் ஆகியும் கனடாவில் வாழ்கின்றார்கள்.

'விடுதலை' இதழைப் பொறுப்பேற்றதும் என் எண்ணத்தில் இரண்டு பெருந்தகைகள் நினைவுக்கு வந்தார்கள். ஒருவர் எட்டையபுரம் சுப்பிரமணியபாரதியார். மற்றையவர் காஞ்சிபுரம் அறிஞர். அண்ணா விடுதலை என்ற சொல்லின் உணர்பொருளும், புரிந்துணர்வும் மக்கள் மத்தியில் பிரக்ஞை பூர்வமாய் படிந்து இதயத்தில் பாடல் மிகுதியும் உதவியதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அந்தப் பாடலின் மொட்டை ஒட்டிப் பல கவிஞர்கள் பாடல் இயற்றினார்கள். பாரதியின் அப்பாடல் அன்றும் அதிர வைத்தது. இன்றும் அதிரச் செய்கிறது. இனியும் அதிர்வினை உண்டாக்கும்.

விடுதலை! விடுதலை! விடுதலை! என்று தொடங்கும் அப்பாடல் மூன்று கண்ணிகளையுடையது. திறமை கொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும் தேர்ந்த கல்வி ஞானம் எய்தி வாழ வேண்டும். ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இருக்கக் கூடாது. மனிதர் யாவரும் ஒரு நிகராய் சரிநிகராய் சமானமாக வாழவேண்டும். மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொளுத்த வேண்டும். ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமான-மாக வாழ்வோம் என்ற தமிழியத்திற்கு பொருத்தமான இப்பாடலை கழகக் கூட்டங்களில் பாடவைத்தோம். இத்துடன் எல்லாளன், சங்கிலியன் ஆண்ட தமிழ் ஈழம், புல்லாளர் கையினின்றும் மீட்டிடுவோம் வாரீர் என்ற பாடலையும் மேடைகளில் பாடினோம்.

ஈ.வெ.ரா பெரியாரின் திராவிட இயக்க கொள்கை இதழான 'விடுதலை' இதழின் ஆசிரியரான அறிஞர் அண்ணா அதன் இலட்சிய தாகத்துக்கு ஏற்ற கதைகளையும், கட்டுரைகளையும் எழுதினார். தமிழ் பத்திரிகை உலகில் அண்ணாவின் எழுத்து நடைவித்தியாசமான விறுவிறுப்பை உண்டாக்கிய நடையாகும். அவரைப் பின்பற்றியே பலர் எழுதத்தொடங்கினார்கள். அண்ணாவின் எழுத்துமுறையில் இலக்கணத் திருப்பங்களும் இருந்தன. இவை அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒரு கொள்கையை வளர்க்க எழுத்துக்கலையாலும் முடியும் என்ற எண்ணத்தை அண்ணாவின் எழுத்து வன்மை உருவாக்கியது.

பெரியார் பேசுவார் என்பதைப் பேசுவார் பெரியார் என்றும், வடக்கு வாழ்கிறது. தெற்கு தேய்கிறது என்பதை, வாழ்கிறது வடக்கு தேய்கிறது தெற்கு என்றும் எழுதினார். எழுவாய், பயனிலை என்ற ஒழுங்கை, பயநிலை எழுவாயாக மாற்றித் தமிழுக்குச் சுவை சேர்த்தார் அலங்கார அடுக்குகளாலும், அழகான எளிமையான இலகு தமிழாலும். வாசிப்பு தன்மைக்கும் விருப்புக்கும் அண்ணாவின் தமிழ்நடை ஆக்கமளித்தது. தமிழ் உரைநடை வளர்ச்சியில் புதிய பரிமாணத்தை உருவாக்கிய தமிழாளராய் அண்ணா தரமுயர்ந்தார். எந்த எந்த மனத்தடைகளை நீக்கி, மனச்சிறைகளை விட்டு விடுதலையாக வேண்டும் என்பதற்கு அவர் விடுதலை இதழில் எழுதிய எழுத்துக்கள் எடுகோள்கள் ஆயின.

படித்தறியா மிக ஏழைக் கிழவனேனும்
பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பானாயின்
துடித்தெழுந்து தன்மெலிய தோளைத் தட்டி
தொனை மிகுந்த கந்தல் உடை கசக்கிக் கட்டி
எடுத்தெறிய வேண்டும் இந்த அடிமை வாழ்வை
இப்பொழுதே இக்கணமே
என்றென்றார்த்து...எழுவான்

என்று நாமக்கல் கவிஞர் பாடியது உண்மை. நாம் அனுபவத்தில் கண்காட்சிகள் எத்தனையோ. இது போன்றே அண்ணாவின் விடுதலை இதழைப் படித்தவர்கள் தமிழ் உணர்வும், இனமானமும், நாட்டுப்பற்றும் உண்டாகி காந்திய வழியையே மறுபரிசீலனை செய்தார்கள்.

ஈழத்து 'விடுதலை' இதழும் பாரதி பாதையில், அண்ணாவின் அடிச்சுவட்டில் வெளிவர வேண்டும் என்று எண்ணினேன். கழகத்தின் கட்டுப்பாட்டிற்குள் நின்று, எல்லைகளையும் வெளிகளையும் கவனித்து ஆசிரியத்தலையங்கம், கட்டுரைகளை எழுதினேன். சுயாட்சிக் கழகத்தின் வளர்ச்சிக்கு விடுதலை இதழ் பணியோடு, பேச்சுப் பணியும் இணைந்தது இக்காலப் பகுதியில் நவத்தாருக்கு இரத்ததிலகம் இடும் புரட்சி நிகழ்வையும் தொடக்கிவைத்தேன். ஓர் இனத்தின் சுயாட்சிக்காக, விடுதலைக்காக, தாயகப்பற்றிற்காக உலகத்திலேயே முதன் முதலாக இரத்தத்திலகம் இட்ட செயல்பாட்டினை பல ஏடுகள் பாராட்டி எழுதின. அமெரிக்க நாட்டு இதழ் ஒன்றும் இது பற்றி வியப்புக் கட்டுரை வெளியிட்டிருந்தது. நிற்க!

தமிழர் சுயாட்சிபற்றிய பலரும் பலகோணங்களில் 'விடுதலை' இதழுக்கு கட்டுரைகள் எழுதினர். இரண்டு இனங்கள் வாழும் நாட்டில் சுயாட்சி அமைப்பு எப்படி இருக்க வேண்டும்? நடைமுறையில் எங்காவது நடந்திருக்கிறதா? உதாரணம் சொல்லி விளக்கமுடியுமா? என்று ஒருவாசகர் கேட்டிருந்தார். நடைமுறை உதாரணம் ஒன்றை எல்லா மக்களும் தெரிந்த விடயத்தை உதாரணம் காட்டி விடுதலையில் ஒரு கட்டுரை எழுதினேன். பலருக்கு அந்த விளக்கம் புரிதலைக் கொடுத்தது. நான் காட்டிய பிரத்தியட்சப் பிரமாணம் சிதம்பரம் நடராஜர் கோயில் வளாகத்தில் திருமால் கோயில் கொண்டு நித்திரைகொள்ளும் நிகழ்வாகும்.

தில்லையில் பல நடராசப்பெருமான் கோயில் கொண்டிருக்கும் ஆலயத்திலே வெங்கடேசப் பெருமானும் கோயில் கொண்டிருக்கிறார். Town House போன்ற அமைப்பு அது. நடராசரோடு பக்கத்துச் சந்தியில் கோவிந்தராஜப் பெருமாள் கோயில் கொண்டிருப்பது ஒரு அதிசயம். இருவருக்கும் பூசை, நைவேத்தியம், மந்திரங்கள், பாராயணங்கள் வேறு வேறானவை. பத்ததிமுறையும் சந்ததி முறையும் வித்தியாசமானவை. ஒரே சந்நிதியில் இருந்தாலும், இருவரையும் ஒரே இடத்தில் நின்று தரிசிக்க வசதியிருந்தாலும், கணக்கு வழக்கு, சொத்து, சுதந்திரம், சுயாட்சி எல்லாம் தனித்தனியாகவே உண்டு. இதுதான் சிதம்பர இரகசியமாகும்.

திருவிழாக்கள் பெருவிழாக்கள் வேறாகவே நடக்கும். நடராசருக்கு அர்ச்சனை பூசை செய்பவர்கள் தலையிலே இடப்பக்கமாகச் சரித்து முடிகட்டிய தீட்சிதர்கள். நெற்றியில் திரிபுண்டரமாகத் திருநீறு தரிப்பவர்கள். கோவிந்தராஜப் பெருமானுக்கு பூசை செய்பவர்கள் தலையில் மொட்டை போட்ட நெற்றியில் நாமம் தரித்த ஐயங்கார்கள். ஆடல் வல்லானுக்கு அழகுத் திருக்கோயிலும் (விமானக் கூரையில் 21,600 பொன் ஓடுகள், 72,000 பொன் ஆணிகளால் அடித்துப் பொருத்தப்பட்டுள்ளன. மனிதன் நாள்தோறும் விடும் மூச்சின் எண்ணிக்கையும், மனித உடம்பில் உள்ள நரம்புகளின் கணக்கும் அறிவிக்கப்படுவது. பழங்குடியினன். பழங்குடிதொறும் எழுந்தருளிய பரன் முன்னைப் பழம்பொருட்டும் முன்னைப் பழம் பொருள் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியன். சுயநிர்ணயம் உடையவன். உலகெலாம் உணர்ந்து ஓதுதற்குரியவனின் உரிமை நிலம். சொந்தமண்.

ஆனந்தசயனம் செய்யும் கோவிந்த ராஜனுக்கு அற்புதக் கோயிலும் இயங்குவது போன்று இலங்கையில் தமிழ் சிங்கள இனங்களும் இரண்டு, பக்கத்து நிலங்களில் பாரம்பரிய பூமிகளில் வாழ நினைத்தால் வாழலாம். ஒருவர் நிலைக்க மற்றவரை நசுக்கினால் இருப்பு ஈடாடும், பகைவளரும். சண்டைவரும், குண்டுவரும், சாவுவரும், உயிர் உடமைச்சேதங்கள் கவலையைத்தரும். ஊர் இரண்டுபட்டால் பக்கத்து நாடுகளில் கொண்டாட்டம் தொடங்கி விடும். பிள்ளையையும் கிள்ளுவார்கள் தொட்டிலையும் ஆட்டுவார்கள். அந்த அபாய நிலைவராமல், நீ ஒரு பாதி, நான் ஒரு பாதி என்று பங்கு போட்டு வாழ்வதே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு புத்தி பூர்வமான தீர்வாகவும், நடவடிக்கையாகவும் இருக்கும்.

சிதம்பர ரகசியம் என்று ஒன்று சொல்லுவார்கள். அது ஒரு வேறு தெய்வங்கள் இருவேறு பத்ததிமுறை, பூசலற்ற புரிந்துணர்வு வழிபாடு என்று அதனைப் புரிந்து கொள்ளலாம். இதுபோல் இலங்கை ரகசியத்தை நாம் உருவாக்கினால் உலகத்திற்கு உதாரணமாவோம். பக்கத்து வீட்டுக்காரர் வேலியால் எட்டிப் பார்க்கப்படுவார். எல்லை மீறி கதியால் நடவும் யோசிப்பார். தன்வீட்டுக் கோழி நமது வீட்டிற்கு வந்தால் நம்மிடம் அனுமதி கேட்டே வந்து, பதி...பதி... போட்டுக் கோழியைப் பிடித்துக் கொண்டுபோவார். நமக்கும் நன்றி சொல்லுவார். இதுவே 'இறைமை, சுயநிர்ணயம், சுயாட்சி' என்று 1968 இல் விடுதலை இதழில் எழுதினேன். என்ன பிரயோசனம். பேரினவாதம் அசையவில்லை. ஈழத்தமிழினம் அடுத்த நடவடிக்கையில் நகர்ந்தது. கட்சிகள் கூட்டணி அமைத்தன. வட்டுக்கோட்டைத் தீர்மானம் உருவாகியது. இதற்கும் சிங்களத் தலைமைகள் அக்கறை காட்டவில்லை. இளைஞர்கள் போராளியானார்கள். பச்சை மண்ணும் சுட்டமண்ணும் ஒட்டாது என்று அனுபவங்களால் உணர்ந்தோம், அல்லல் பட்டோம், அழிந்தோம். இழந்தோம் நண்பா! மிகுதி உனக்கு நான் சொல்லியா தெரியவேண்டும். நிற்க!

சுயாட்சிக் கழக ஏடான 'விடுதலை' இதழுக்கு ஸ்ரார் ரொவி உரிமையாளர் இராசதுரை அரணாக இருந்தார். அவருடைய உதவியால் 'விடுதலை' ஏடு தடங்கல் இல்லாமல் வாரா வாரம் வெளிவந்தது. தமிழர் சுயாட்சி பற்றிய சிந்தனையை வளர்க்கவும், தமிழர் அடையாளங்கள் பேணப்படவேண்டும். தமிழர் கலை, கலாசாரங்கள் பேணப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழர் எங்கிருந்தாலும் ஒற்றுமையாய் ஒன்றுபட்டு வாழவேண்டும். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கினால் அனைவர்க்கும் தாழ்வே' என்ற உண்மையும் உணர்வும் தமிழர்களுக்குள் நிலைக்க வேண்டும் என்ற இலட்சிய நோக்கோடு என் இதழ் இயல் வாழ்வு நகர்ந்தது. தமிழ் மொழி இனம் என்ற அடையாளங்களோடு தமிழர் சமயம் என்ற கொள்கைவழியில் 'ஆலயமணி' என்ற சமய இதழைத் தொடங்கினேன். திங்கள் தோறும் அவ்விதழ் வெளியானது. ஆலயமணியின் ஓசையை அடுத்த கடிதத்தில் தருகிறேன்.



வேறு என்ன,
பிறபின்பு,

- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

# இன்னொரு... ஆச்சி வீடு

**பகுதி 7**

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

கடந்த இதழ் தொடர்ச்சி...

நியாயமான கேள்விதான். ஆனால் இப்படியாகவும் யோசிக்கலாம்தானே எப்படி என்பது போல் பார்த்தார் நல்லை நாதன்.

அந்த நேரம்தான் பொருத்தமானதாக இருந்திருக்கும். பல நாட்களாகப் பார்த்திருந்து சரியான சந்தர்ப்பம் வர அதனைப் பயன்படுத்திவிட்டார்களோ என்னவோ. அப்படி இருந்தால் நெருப்பு வைத்த ஆளை ஊராக்கள் கண்டிருப்பதற்கான சந்தர்ப்பங்கள் நிறையவே இருக்கும். விசாரணையில் ஆளைக் கண்டு பிடித்து விடலாம் என்ற வச்சிரவேலு ஊரவர்கள் நின்ற இடத்தினை நோக்கி நடக்க, நல்லைநாதனும் பின் தொடர்ந்தார்.

## சி.வி. நாதன்

சிவந்த முகத்துடன் இருவரையும் மாறி மாறிப் பார்த்தார், நீலகண்டர்.

அவரது அலுவலக அறைக்குள் காக்கி உடுப்புகளுடன் இருந்த இரண்டு அதிகாரிகளையும் இன்னார் என்று தெரிந்து கொண்டதினாலேயே அவரது முகம் சிவந்திருந்து. அது பயத்தினாலா அல்லது வேறு எதினாலேயா என்பது அவருக்குத் தெரியவில்லை.

வச்சிரவேலுவும் நல்லைநாதனும் நீலகண்டரைத் தேடி வந்தவேளையில் அவர் வீட்டில் இல்லை. அவசியம் சந்தித்து விட்டுத்தான் போக வேண்டும் என்று அகிலாண்டம்மாளிடம் இருவம் கூற, அவள்தான் வேறுவழியின்றி நீலகண்டரின் அலுவலக அறையில் இருவரையும் இருக்கச் சொன்னவள், அரை மணித்தியாலத்திற்குள் வந்துவிட்டார் நீலகண்டர்.

வச்சிரவேலுவைப் பற்றியும் நல்லைநாதனைப் பற்றியும் நிரம்பவே கேள்விப்பட்டிருந்தார். சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பார்கள். ஒருவேளை சோழியன் குடுமி சும்மா ஆடினாலும் ஆடும், இந்த இருவரும் சும்மா ஒரு இடத்திற்குப் போகமாட்டார்கள். ஏதாவது குற்றம் குறை கண்டு அல்லது ஐமிச்சம் இருக்கும் இடங்களுக்குத்தான் போவார்கள்.

வேறு எங்காவது போயிருக்கலாமே! ஏன் என்னிடம்? இனி மற்றவர்கள் என்னையும் எனது கணிப்பைப் பற்றியும் என்ன நினைப்பார்கள்?

இருவரையும் கண்டதும் ஏனோ தெரியவில்லை, நீலகண்டருக்குக் கோபம் தான் வந்தது. ஆனாலும் அடக்கிக் கொண்டார், அரச அதிகாரிகளாச்சே! முகம் அப்படியே அவரது உள்ளத்தில் உள்ளதை எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது.

பழமும் சாப்பிட்டு என்னவோ போட்டவர்கள் என்பார்களே! அதுபோன்ற அந்த இருவருக்குமா இது விளங்காது!. ஆனாலும் கடுமைக்குப் பேர்போன அவ்விருவருமே ஏனோ தெரியவில்லை முகத்தில் புன்னகையைத் தவழவிட்டுக் கொண்டிருந்தார்கள்.

முதலில் நீலகண்டர்தான் பேசினார். சம்பிரதாய வார்த்தைகள் ஏதுமில்லை. நான் உங்களுக்கு என்ன செய்ய வேணும்? குரல் கொஞ்சம் உறைப்பாகவே இருந்தது.

எப்படி இருக்கிறியள், கனியனார். நல்லைநாதன்தான் கேட்டார்.

நீலகண்டருக்கு ஏதோ உறைத்தது. சமாளித்துக் கொண்டே, நான் நல்ல சௌக்கியமாகத்தான் இருக்கின்றேன். பூரண உத்தியோக உடுப்பில் இருவரும் வந்திருக்கிறியள். அதுதான் இன்னமும்தான் நீலகண்டர் குசல வார்த்தைகளைக் கூறவில்லை.

இருவரும் இன்னமும் புன்னகை தவழும் முகத்துடனேயே இருப்பது போல இருந்தது நீலகண்டருக்கு. புதிருடன் அவர்களைப் பார்த்த நீலகண்டர் இரண்டு பெரிய அதிகாரிகளும் வந்திருக்கிறியள். அதுதான்., என்னெண்டு தெரியேல்லை.. நீலகண்டர் கொஞ்சம் இழுத்துக் கொண்டே கேட்டார்.

வச்சிரவேலு கேட்டார் மிஸ்டர் நீலகண்டன் குரலில் மிடுக்குத் தெரிந்தது. கனியர் விடுபட்டிருந்தது, நேரடியாகவே விசயத்திக்கு வாறேன். கிட்டடியில் நடந்த ஒரு விபத்துப்பற்றி உங்களை விசாரிக்க வந்திருக்கிறோம்.

என்னிடம் விசாரிக்க வந்திருக்கிறியளா இல்லை என்னை விசாரிக்க வந்திருக்கி றியளா எனக் கேட்க வேண்டும் போல் இருந்தது கனியருக்கு. ஆனால் கேட்கவில்லை. என்ன வென்று கேட்பது போல அவர் இருவரையும் பார்க்க,

வச்சிரவேலுவே தொடர்ந்தார். உங்களுக்கு ஒட்டிப்பிறந்த இரடடையர்களைப் பற்றித் தெரியும் எண்டு நினைக்கிறோம். அவர்களின்ரை குறிப்பைக் கூட உங்களை எழுதச் சொன்னதாக அறிகின்றோம். அந்த விடயமாகத்தான் வந்திருக்கிறோம்.

நல்லைநாதன் ஏதோ கூற வர நீலகண்டர் ஓமோம். எனக்கு நல்லாய் ஞாபகம் இருக்கு. அவையின்ரை மாமன்தான் வந்தவர். பேர்கள் கூட நல்ல ஞாபகம். இன்பன், இனியன். எனது வாழ்க்கையிலேயே இப்படியொரு குறிப்பை நான் கண்டதில்லை. ஏன் எவருமே பார்த்திருக்க மாட்டார்கள். ஒட்டிப்பிறந்ததால் அல்ல, அந்தக் குழந்தைகள் பூமியில் பிறந்த நட்சத்திரம் அப்படி.

நல்லைநாதனும் வச்சிரவேலுவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். ஆறேழு வருடங்களுக்கு முன்னர் வந்த குறிப்பைப் பற்றி இன்னமும் உங்களுக்கு ஞாபகம் இருக்குதா?

இருவரும் சேர்ந்த மாதிரிக் கேட்டார்கள். குரல்களில் ஏதோ தொக்கி நின்றது. நீலகண்டர் அதனைக் கவனித்தாரோ தெரியவில்லை, பதில் சொன்னர். ஆறு வருசமில்லை. எனது ஆயுள் முழுவதுக்கே மறக்கமுடியாத நட்சத்திர நேரமது. எப்படி அதை மறக்கமுடியும்? அந்த ஒட்டிப்பிறந்த இரட்டையரில் ஒருவன் இறந்து விட்டான். எட்டாவது பிறந்தநாளின் முதல்நாள் வீட்டோடு எரிந்து போனான். நீலகண்டர் அதிர்ந்து விட்டார். அவரது கணிப்பின்படியேதான் நடந்திருக்கின்றது. ஆனாலும் அவரால் இது பற்றி நீங்கள் ஏதும் அறியவில்லையா?

இல்லை. உங்களுக்குத் தெரியும்தானே! அவையள் இஞ்சையிருந்து ஒரு ஆறேழு மைல் தள்ளித்தான் இருக்கினம். அதாலை அவ்வளவுக்கு விசயங்கள் எல்லாமுமே இஞ்சை தெரியவராது. நீலகண்டரின் குரலில் சோகம் மாதிரி ஏதோ இருப்பது போல் இருப்பதைக் கண்டார்கள்.

வித்தியாசமான குறிப்பு எண்டு சொல்லுறியள். சீவியத்திலை மறக்க மாட்டேன் எண்டும் சொல்லுறியள். அந்தக் குறிப்புப் பிள்ளைகளுக்கு இரண்டு கிழமைக்கு முன் நடந்த விபத்துப் பற்றித் தெரியவில்லை எண்டும் சொல்லுறியள். அது எப்படி நல்லைநாதன் கேட்டார். அவரது குரலிலும் கொஞ்சமாகப் போலீஸ் தோரணை ஏறியிருந்தது.

\- இன்னமும் வரும்

வாசகர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.


IDOL BANQUET HALL



50 - 250 பேர் கொள்ளக் கூடிய Banquet Hall இல் திருமணவிழா, பூப்புனித, பிறந்தநாள் வைபவங்கள் அனைத்தையும் சிறப்பாக கொண்டாடுவதற்கு

அழையுங்கள்: 416.908.8344





சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# மகாஜனக்கல்லூரி நூற்றாண்டு பூர்த்தி விழா

மகாஜனக்கல்லூரியின் நூற்றாண்டு பூர்த்திவிழா கடந்த ஒக்ரோபர் 17ஆம் திகதி ஸ்காபரோவிலுள்ள மெற்றோ பொலிற்றன் மண்டபத்தில் கொண்டாடப் பட்டது. விழா மாலை ஆறு மணியளவில் பழைய மாணவர் சங்க காப்பாளர்களான திரு. திருமதி. இரஞ்சன் மற்றும் திரு. திருமதி. நந்தீஸ்வரர் அவர்களின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. இவ்விழா ஒருங்கிணைப்பாளராக உபபொருளாளர் திரு. சிவ கௌரிபாலனும் நிகழ்ச்சி தொகுப்பாளராக செல்வி. வைஷ்ணவி ஞானசரவணபவனும் கடமையாற்றினார்கள். மகாஜனக்கல்லூரியின் கல்லூரிக்கீதம் விழாவிற்கு வருகை தந்த மகாஜனங்கள் எல்லோராலும் இசைக்கப்பட்டது. அதை தொடர்ந்து செல்வி. அனுஷ்கா முரளிதரனின் கனேடிய தேசியகீதமும் பின்னர் அமைதி வணக்கமும் செலுத்தப்பட்டது.

முதலாவது நிகழ்ச்சியாக திரு. வர்ணராமேஸ்வரன் அவர்களின் வர்ணம் இசைக்கல்லூரி மாணவர்களது மெல்லிசை நிகழ்ச்சி ஆரம்பமானது. இந்நிகழ்ச்சி ஆரம்பிக்க முன்னர் திரைக்கு பின்னால் இசைக்குழுவினர் தம்மை தயார்படுத்திக் கொண்டிருந்த நேரத்தை தனக்கு சாதக-மாக பயன்படுத்திக் கொண்டு யோர்க் பல்கலைகழக மாணவியான செல்வி. வைஷ்ணவி ஞானசரவனபவன் சபையோரின் பொது அறிவுக்கு சவால் விடுத்தார். மகாஜனாவின் தமிழ் என்ன? (பொது சனம்) மகாஜனக்கல்லூரியின் (Mahajana College) முதல் அதிபர் யார்? (தெ.து. ஜெயரட்ணம்) மற்றும் அமெரிக்காவின் முதல் அதிபர் யார்? (ஜோஜ் வாசிங்கடன்) போன்ற சில கேள்விகளை சபையோரிடம் கேட்டார். வர்ணம் இசைகல்லூரியினர் தமது மெல்லிசையை "சந்தனமும் ஜவ்வாதும் சேர்ந்து மணம்கமிழ" என்ற தெய்வீக கானத்துடன் ஆரம்பித்தனர். ஒருசில மெல்லிசைப்பாடலை தொடர்ந்து வரவேற்புரையை மகாஜனக்கல்லூரி பழையமாணவர் சங்க உபதலைவர் திரு. ந. பிரதீபன் நிகழ்த்தினார். அடுத்ததாக மகாஜனக்கல்லூரி அன்று முதல் என்ற விவரணச்சித்திரம் திரையில் காண்பிக்கப் பட்டது. இதில் மகாஜனக்கல்லூரியின் ஆரம்பகால குடிசைப்பாடசாலை, இடைக் கால கட்டிடங்கள் என்பன காண்பிக்கப்பட்டது.

இதை தொடர்ந்து பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. இ. இரவீந்தரன் உரை நிகழ்த்தினார், அவர் தனது உரையில் மகாஜனா அன்னையின் நூற்றாண்டை கொண்டாட அமைக்கப்பட்ட தமது நிர்வாக-சபை இக்காலப்பகுதியில் செய்த செயற்திட்டங்களை எடுத்து விபரித்தார். இவற்றுள் சில முத்திரை, மலர் வெளியீட்டு விழா, ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றிய கனடாவிலும் வெளிநாடுகளிலும் நடத்திய திறன்காண் போட்டிகள் மற்றும் மொன்றியலிலும் ரொறொன்ரோவிலும் நடத்திய மூன்று முத்தமிழ் விழாக்களாகும். இவற்றைவிட மகாஜனக்கல்லூரிக்கு நிறுவியவர் நினைவுநாள் பரிசளிப்பு விழா, புலமைப்பரிசில்கள், கல்லூரி ஆலயம் புனருத்தாரணம், கணிதத்திறன் போட்டி மற்றும் கணினி வேலைத்திட்டம் போன்றவற்றிற்காக இதுவரை 16 இலட்சம் ரூபாய் அனுப்பியுள்ளதாகவும் மொத்தமாக 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான வேலைத்திட்டங்களை பொறுப்பேற்றுள்ள தாகவும் கூறினார்.



பிரதமவிருந்தினராக இவ்விழாவிற்கு மகா-ஜனக்கல்லூரியின் பழைய மாணவரும் St. Georges லண்டன் பல்கலைக்கழகத்தின் பிரசவ மற்றும் பெண்கள் நோய் சிகிச்சை பிரிவின் தலைமைத்துவத்தை வகிக்கும் பேராசிரியரும், யூன் 2009 இல் இங்கிலாந்து மகாராணியால் "Sir" பட்டம் வழங்கப்பட்டவருமான பேராசிரியர் சேர் சபாரட்ணம் அருட்குமரன் இங்கிலாந்தில் இருந்து வருகை தந்திருந்தார். இவர் இங்கிலாந்தின் Royal College Of Obstetrics and Gynaecology யின் தலைவராகவும் பணியாற்றுகிறார்.



பிரதமவிருந்தினரை பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர் Dr. க இரவீந்திரன் அறிமுகம் செய்து வைத்தார். பேராசிரியர் சேர் சபாரட்ணம் அருட்குமரன் மகாஜனக்கல்லூரியில் இருந்து பேராதனையிலுள்ள இலங்கை பல்கலைகழகத்தின் மருத்துவ பீடத்திற்கு 1968 இல் சென்றார். அதன் பின்னர் 1982 இல் இருந்து சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் அதைத் தொடர்ந்து 1997 இல் இருந்து இங்கிலாந்திலுள்ள Nottingham பல்கலைக்கழகத்திலும் பின்னர் 2001 இல் இருந்து St. George's லண்டன் பல்கலைக்கழகத்திலும் பணியாற்றி வருகின்றார். இவர் இதை விட பலபொது நிறுவனங்களிலும் பதவி வகித்து வருகின்றார். பேராசிரயர் சேர் சபாரட்ணம் அருட்குமரன் இதுவரை 26 புத்தகங்களை எழுதிப்பிரசுரித்துள்ளார். 240க்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் 150 புத்தகங்களுக்கான அத்தியாயங்கள் எழுதி உள்ளார். பேராசிரியர் சேர் சபாரட்ணம் அருட்குமரனை பற்றி எழுதிய London Gazette "பிரித்தானியாவிலேயே மருத்துவத்துறையில் அதி சிறந்த முன்னோக்கு சிந்தனையுள்ள தலைவர்" என இவரை வர்ணித்துள்ளது.

பிரதமவிருந்தினர் பேராசிரியர் சேர் சபாரட்ணம் அருட்குமரன் தனது பிரதம விருந்தினர் உரையில் தனது பாடசாலை நாட்களை நினைவு கூர்ந்தார். பிரதமவிருந்தினர் உரையை தொடர்ந்து வர்ணம் இசைக்கல்லூரி மாணவர்கள் வீணை வாசித்து அண்மையில் நாங்கள் கொண்டாடிய சரஸ்வதி பூசையை நினைவூட்டினார்கள். மகாஜனக்கல்லூரியின் இந்த நூற்றாண்டு பூர்த்திவிழாவிற்கு யாழ்ப்பாணத்திலுள்ள மற்றைய கல்லூரி பழைய மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்திருந்தனர். இவர்களின் சார்பில் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. இ. மகேந்திரன் உரை நிகழ்த்தினார். தான் முதன் முதலில் மகாஜனக்கல்லூரிக்கு உதைபந்தாட்டம் விளையாடச் சென்றதையும் பின்னர் உறவினரான மகாஜனக் கல்லூரி மாணவர் ஒருவரின் குறும்புத்தனத்திற்கு அதிபரால் அழைக்கப்பட்டு மகாஜனக்கல்லூரிக்கு சென்றதையும் நினைவு கூர்ந்தார்.

அடுத்து இன்றைய மகாஜனாவைப் பற்றி உரையாற்றிய முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் கல்லூரியின் இன்றைய நிலைபற்றி தெளிவாக விளக்கினார். ஒரு காலத்தில் 2500 மேற்பட்ட மாணவர்கள் கற்ற மகாஜனக்கல்லூரியில் தற்போது 1500 மாணவர்களே கல்வி பயில்கின்றார்கள். பாடசாலை முடிவுற்ற பின்னர் மேலதிக வகுப்புக்கள் நடைபெற வசதியில்லாததால் மாணவர்கள் எல்லாம் யாழ்ப்பாண நகர பாடசாலையை நோக்கி செல்கின்றார்கள். பழைய மாணவர் சங்கம் பாடசாலையில் மாலைநேர வகுப்புக்கள் நடைபெற அல்லது தன்னலம் கருதாது மேலதிக சேவை செய்யும் ஆசிரியர்களை ஊக்குவிக்க மேலதிக பண உதவி செய்யவேண்டும் என்று கேட்டார். மகா-ஜனக் கல்லூரி ஒரு விடுதியுடன் கூடிய கல்லூரி அதில் ஆதரவற்ற நிலைக்கு ஆளான சிறுவர்களை இருத்தி அவர்களுக்கு கல்விபுகட்ட வெளிநாடுகளிலுள்ள பழைமாணவர் சங்கங்கள் முயலவேண்டும்மெனவும் கேட்டுக் கொண்டார்.

அண்மையில் தனது 75வது பிறந்தநாளை கொண்டாடிய திரு. பொ. கனகசபாபதி அதிபர் அவர்களுக்கு பேராசிரியர் சேர் சபாரட்ணம் அருட்குமரன் அவர்கள் வாழ்த்துக்கேடயம் ஒன்றை வழங்கி கௌரவித்தார். மகாஜனக்கல்லூரி பழையமாணவர் சங்க செயலாளர் திரு. க. முத்துலிங்கம் நன்றியுரை தெரிவித்தார். இதை தொடர்ந்து இராப்போசனம் ஆரம்பமானது. இராப்போசனத்தின் போதும் மற்றும் சிற்றுண்டிகள் பரமாறும் போதும் சைவ உணவுப் பரிமாற்றம் பிரத்தியேகமாக நடைபெற்றது. இராப்போசனத்தின் போதும் அதை தொடர்ந்தும் வர்ணம் இசைக்கல்லூரி மாணவர்கள் மெல்லிசை வழங்கிக்கொண்டிருந்தார்கள்.

அருந்ததி ஞா.



விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com** அல்லது
**www.tamilexpress.net**

# உடல் வலிகள் நீக்கும் யோகா

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

இந்த நூற்றாண்டில் மனித சமுதாயத்தில் பெரும்பாலானோர் உடல் உழைப்பின்றி உணவு உறைவிடம் மற்றும் ஆடம்பர வசதிகளை அனுபவிக்கவே விரும்புகின்றனர். ஆனால் உண்மையில் மனிதனைத் தவிர பறவைகள், விலங்குகள் போன்ற இதர உயிரினங்கள் அனைத்தும் தமக்கு இன்றியமையாத தேவைகளான உணவு மற்றும் சகல தேவைகளையும் தாமே தமது உழைப்பால் முயன்று தேடிக்கொள்கின்றன. எந்த ஒரு உயிரும் தனது அடிப்படைத் தேவையாவன உணவை தனது விருப்பத்திற்கேற்ப உடலின் தன்மைக்கேற்ப உண்பதே அந்த உயிரின் ஆரோக்கிய வாழ்வுக்கு துணை புரிகின்றது. எனவே உடல் உழைப்பு என்பது மனித சமுதாயத்திற்கு அவசியமானது. அத்துடன் உடலுக்கு ஒத்துவராத உணவுகளை கண்ட இடங்களிலும் நேரம் தவறியும் உண்டு அதன் கழிவுகள் முறையாக உடலிலிருந்து வெளியேற்றப்படாமல் உடலானது நோய்களின் இருப்பிடமாகின்றது. மேலும் சிறு அசைவுக்குக்கூட வலியைத் தருகின்றது. எனவே மனிதன் ஆரோக்கியமாக வாழ தகுந்த உடல் உழைப்பும் பொருத்தமான உணவுத் திட்டமும் அவசியமாகின்றது.

## உடல் வலி

வலிகள் என்பது உடலில் தேங்கிய கழிவுப்பொருட்களின் அசைவை நாம் உணர்வதே. வேலைப்பழுவால் வரும் வலியானது சில மணிநேரத்தில் மறைந்துவிடும். ஆனால் உடலிலுள்ள கழிவுப்பொருட்கள் ஊனச்சதையாக மாறி தொடைகள் என்பன பருமனடைகின்றன.



அவை உடலின் அசைவுகளுக்கு இடையூறாகின்றன. அத்துடன் அடிவயிற்றிலும் பிறஉறுப்புகளிலும் கொழுப்புகள் சேருகின்றன. இதனால் இரத்தத்தில் கழிவுகள் சேர்ந்து இரத்தக் குழாய்களை மெதுவாக அடைக்கத் தொடங்கும் போது இரத்த சுற்றோட்டம் சரியாக நடைபெறுவது தடைப்படுகின்றது. இதனால் எந்தெந்த உறுப்புக்களுக்கு சுத்தமான இரத்தம் போதிய அளவு எடுத்துவரவில்லையோ அந்தந்த உறுப்புக்களில் வலிகள் உருவாகின்றன.

இந்த உடல் வலிகளைப் போக்குவதற்கு பலர் மருத்துவர்களை நாடிச்செல்லும்போது இராசாயனப் பொருட்களின் உருவாக்கத்தாலான மாத்திரைகள் தான் அதற்குப் பிரசாதமாகக் கிடைக்கின்றது. இந்த மாத்திரைகளை உட்கொள்ளும் போது வலிகளை உணராத தன்மை உடலில் தற்காலிகமாக மட்டும் தோன்றும். இதனால் வலிகள் குணமாகி விட்டதென்று எண்ணக்கூடாது. இந்த மாத்திரைகள் அதனை மாற்றி இன்னொரு நோயை உருவாக்குகின்றது. எனவே இந்த உடல்வலிகளை நீக்க உணவுப் பழக்கத்தில் மாற்றத்தை கொண்டுவருவதுடன் பொருத்தமான யோகாசனப் பயிற்சிகளை மேற்கொள்வதுதான் நிரந்தர தீர்வாகும்.

## *Healing Body Pain Through Yoga*

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. "Use it or Lose it" பயன்படுத்து அல்லது இழந்து விடுவாய்". உடலிலுள்ள 44 மூட்டுக்களையும் மற்றும் சகல உறுப்புக்களையும் எக்காலத்திலும் நன்கு இயங்கும் நிலையில் வைத்திருக்க வேண்டும். எந்த உறுப்பாவது இயங்க மறுத்தால் அந்த இடத்தில் நோய்களும் வலிகளும் உருவாவதுதன் இயல்பு. இந்த மனித உடலிலுள்ள 72 ஆயிரம் நரம்புகளுக்கும் அதனோடு சேர்ந்தியங்கும் தசைகளுக்கும் எலும்புகளுக்கும் பூரணமான பயிற்சியைக் கொடுத்து அதனை சிறந்த முறையில் தொழில்படவைக்கும் சக்தி யோகா சாசனங்களுக்கு மட்டும்தான் உண்டு என்று இக்கால மருத்துவர்களும் உடன்படுகின்றனர்.

எனவே இந்த யோகாசனப் பயிற்சியை ஒரு நிபுணரின் உதவியுடன் பழகி தினம்தோறும் ஒரு 20 நிமிடமாவது செய்து வந்தால் தலைவலி முதல் சித்த மருத்துவம் கூறும் 4448 நோய்களும் அதனுடன் கூடிய உபாதைகளும் பறந்தோடும் என்று பண்டைக்கால நூல்களே கூறுகின்றன. இதனை மேல்நாட்டு மருத்துவ ஆராய்ச்சியாளர்களும் இக்காலத்தில் ஒத்துக்கொள்ளுகின்றனர்.




ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm


# விழுகின்ற இலைகள்



விழுகின்ற இலைகள் சருகாகிப் போகும்
அடிக்கின்ற காற்று அதைக் கொண்டு போகும்
எழுகின்ற இலைகள் இதைக் கண்டு நகைக்கும்
எண்ணியே பார்க்காமல் இந்நிலை நமக்கும்
வாழ்கின்ற மக்கள் வீழ்வது திண்ணம்
வீணாக யாவரும் சேர்க்கிறார் செல்வம்
தொழுகின்ற தெய்வம் தூக்கியே விடுமே
ஒழுகின்ற வழியில் ஒழுகினால் மட்டும்

பருவத்தின் முதிர்வில் இலைகள் பழுக்கும்
பாசத்தின் நிறைவில் இதயம் கனக்கும்
உருவத்தின் வனப்பில் உள்ளங் கனியும்
உள்ளத்தின் கனிவால் உவகை பிறக்கும்
ஒவ்வொருவர் வாழ்விலும் உவகை பிறந்தால்
உலக மெல்லாம் அமைதி நிலைக்கும்
பெருநிலப் பரப்பில் பேரானந்தம் நிலைத்தால்
பஞ்ச பூதங்களும் பரிவுடன் இயங்கும்

வண்ணமாய் இலைகள் வீழ்கின்ற வேளை
வாரி இழுத்துப் பசளையாய் இடுவோம்
மண்ணிலே மனிதன் மடிகின்ற வேளை
மதிப்பின்றி மறுநாள் தகனஞ் செய்கிறோம்
கண்ணுக்கு விருந்தாய் இருந்த இலைகள்
இறந்தாலும் பயன் இருந்தாலும் பயனே
விண்ணுக்குப் போக விமானம் அமைத்தாலும்
மண்ணுக்குள் மனிதன் மடிவது திண்ணம்

----துறையூரான்-----


## *HERBALL WELLNESS CENTRE*

3005 Islington Ave., NorthYork, ON

***(Wellness Centre To Nurture Spirit Mind & Body)***

(1) மருந்தை அருந்தாமல் மனதையும் உடலையும் தூய்மைப்படுத்தி அமைதி காணும் வழிமுறை

(2) எந்த வயதில் உள்ளவராயினும் மன அமையின்றி தவிகிகிறீர்களா? உடல் பருமன், உள உளைச்சல், மனவிரக்தி இவற்றினால் கவலைப்படுகிறீர்களா?

(3) கவலையை விடுங்கள். உங்களுக்கு வாழ்க்கை முறைப்படி இயற்கை வழியில் உங்கள் மனதையும் உடலையும் தூய்மைப்படுத்தும் மூலிகைகள், தியானம், யோகப் பயிற்சிகள், ஓய்வு எடுக்கும் முறை என்பன கற்றுத்தரப்படும்.

(4) பலவிதமான சித்த வைத்திய ஆலோசனைகள் உடலுக்கேற்ப அருந்தும் உணவு என்பன விசேட சேவைகளாகும்.

(5) 3 நாள் பயிற்சிப் பட்டறை, 5 நாள் பயிற்சிப் பட்டறை, 7 நாள் பயிற்சிப் பட்டறை என்பன நடைபெறும்.

(6) இங்கே 3 நாள் பயிற்சி பட்டறையில் நீங்கள் பெற்றுக்கொள்ளும் பயன் நீங்கள் 30 நாட்கள் விடுமுறை செல்வதால் ஏற்படும் பயனுக்கு சமனாகும்.

*செப்ரெம்பர் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு Clinic ஆரம்பித்தது வைக்கப்படும். குறிக்கப்பட்ட இருப்பிடங்களே உண்டு. உங்கள் தேவைக்கு முந்துங்கள்.*

**அமைதியை நாடி அழையுங்கள் *416.997.4357***

**குறள்நெறி - லலிதா ஜசிக்கா**

# மகாகவிஞன் கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை

26.09.2010 ஆம் திகதி கவிமணி அவர்களின் நினைவு. இதனை முன்னிட்டு இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

தமிழகத்திலே நாஞ்சில் நாட்டில் உள்ளது தேரூர் என்கிற சிற்றூர். இவ்வூரில் மாரி மழைபோல எளிமையான இனிமையான சொல்வளம் கொண்ட நல்ல கவிதைகளைத் தந்த பெரும் கவிஞர் ஒருவர் வாழ்ந்துள்ளார். தமது கவிதைத்திறனால் உலகில் வாழும் தமிழ் மக்களின் உள்ளத்தில் நீங்காத இடத்தினைப் பெற்றுள்ளார். இவரின் மறைவிற்குப் பின்னர் அவரின் பிறந்த ஊரில் பெரிய அழகியதொரு மாளிகையை நினைவுச்சின்னமாக 21.11.1955 ஆம் திகதி நிறுவியுள்ளார்கள். இதில் இவரின் வாழ்க்கை வரலாறு சுவை சொட்டச் சொட்ட பாடிய எண்ணற்ற கவிதைகள், தமிழ்ப்பணிநூல்கள், இவர் கற்ற இலக்கியவளமிக்க நூல்கள் என்பன இடம்பெற்றுள்ளது. இத்தகைய மாளிகையில் ஒளிச்சுடராகத் திகழ்பவர் மகாகவிஞர் கவிமணி தேசிக தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள். இவர் தனது ஆரம்பக்கல்வியை தேரூர் தொடக்கப் பள்ளியில் ஆரம்பித்தவர். கோட்டானு ஆங்கில பாடசாலையிலும் கற்றவர். இவரின் ஊருக்கு அருகாமையில் உள்ள வாணன்திட்டு என்னும் ஊரில் வாழ்ந்த ஆதீனத்தலைவர் சாந்தலிங்கத்தம்பிரான் அவர்களிடமும் இவரின் பின்னர் வந்த சங்கரலிங்கத் தம்பிரான் அவர்களிடமும் தமிழ்மொழியை முறையாக தெளிவாக கசடறக்கற்றவர். இதனால் செந்தமிழ் மொழியில் மிக்க பற்றுக்கொண்டு விளங்கினார். 'எவ்வுடலும் ஈசன்கோயில், எவ்வுயிரும் இன்புற்று இருக்க வேண்டும் என்ற உயரிய குறிக்கோளையும் கொண்டவர். இவர் கோட்டாறு தொடக்கப்பள்ளியிலும், கோட்டாறு ஆசிரியப்பயிற்சி பள்ளியிலும், பெண்ஆசிரியர்கள் பள்ளியிலும் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்து நல்லாசிரியர் என்ற

**- கனடா அ. சிவானந்தன் -**

மதிப்பினைப் பெற்றவர். இப்பணியை தெய்வீகப் பணியாக போற்றி செய்தவர் இவர் எனலாம். இவர் இசைஞானமும் கொண்டவர். கவிதைகளை இயற்றுவதிலும் திறமைமிக்கவர். கலைமகளின் அருளையும் பெற்றவர். 1901 ஆண்டு புத்தேரியில் பிறந்த புனிதவதி உமையம்மையார் என்னும் நங்கையை வாழ்க்கைத் துணையாகப் பெற்று அகமகிழ்ந்தார்.

விநாயகம்பிள்ளை அவர்கள். இவரின் தந்தையார் பெயர் சிவதானுப்பிள்ளை. தாயார் ஆதிலட்சுமி அம்மாள். இவர்களுக்கு புகழ்மிக்க மகனாக 14.07.1876 இல் பிறந்தவர் தான் தேசிகவிநாயகம்பிள்ளை என்பவர். இவர் தம் வாழ்நாளில் செய்த தன்னலமற்ற நற்பணிகளால் மக்கள் மத்தியிலும் தான்பிறந்த தேரூர் மக்கள் மத்தியிலும் உன்னதமான இடத்தினைப் பெற்றுத் திகழ்ந்தார். அவன் அருளால் அவன் தாள் வணங்கும் பாக்கியத்தையும் பெற்றவர். மிகச்சிறந்த ஞாபகசக்தியைக் கொண்டவர். இவரின் சமூகப்பணிகள் சமூகத்தின் அறியாமைமிக்க இருளைப் போக்கியுள்ளது. பாட்டுக்கொருபுலவன் பாரதிமட்டுமல்ல, கவிமணியும் உண்டு என்பதற்கு அமைய இவரின் பாடல் யாவும் மிக்கபெருமைக்குரியது. ஔவைக்கிழவியை நம்கிழவி அமுதின் இனிய சொற்கிழவி என்று தினமும் போற்றி ஒழுகியவர். உலக உண்மைகளை எடுத்துரைக்கும் கம்பன் கவிதை நூலில் தீராத தாகம் கொண்டவர். செந்தமிழ்ச் செல்வர் திருக்குறளை தினமும் சிந்தனையில் கொண்டு ஆராத இன்பம் பெற்றவர். பாரதியார் பாடல்களை நித்தமும் போற்றி உவகை பெறுவார். இத்தகைய பெரியார்களை தம் குருவாகக் கொண்டவர் கவிமணி அவர்கள். இதனால் திறமான செந்தமிழ்ப்பாடல்களை எல்லோரும் சுவைக்கும் படியும் வாழ்க்கைக்கு வழி காட்டிய பெரியார் இவர் எனலாம். எல்லோர் உள்ளத்திலும் நிலையான இடத்தினைப் பெற்று தேரூர் தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் 26.09.1954 ஆம் திகதி இறைவன் திருவடியைச் சேர்ந்தார். இன்று இவரின் ஆக்க நூல்களும் நினைவு மாளிகையும் இவர் புகழை எடுத்துக்காட்டும் சின்னங்களாகத் திகழ்கின்றன.

மகாகவிஞன், கவிமாமணி, கவிமணி என்ற தகுதிக்குரியவர் தேரூர்

திருவனந்தபுரத்திலிருந்து வெளிவரும் 'தமிழன்' கேரளா சொனஸடிபேப்பர் ஆகியனவற்றில் இவரின் கவிதைகள், ஆராய்ச்சி உரைகள் முதலில் வெளிவரத் தொடங்கின. மதுரைத் தமிழ்ச்சங்கம் வெளியீடு 'செந்தமிழ்' மாதப்பத்திரிகையில் இவரது கவிதைகள் இடம்பெற்றமை நினைவு கொள்ளத்தக்கது. இவரின் முதலாவது கவிதை நூல் அழகம்மையாகும். இதனைத் தொடர்ந்து 'காந்தளூர்ச்சாலை' சரித்திர ஆராய்ச்சிநூல், மலரும் மாலையும் கவிதைத் தொகுதிநூல், ஆசியஜோதி, உமர்கய்யப்பாடல்கள், இளந்தென்றல் குழந்தைப் பாடல்நூல், மருமக்கள் வழிமான்மியம் என்னும் நகைச்சுவை போன்றவை இவரின் படைப்பு நூல்களாகும். சமூகத்தில் ஊக்கம்குன்றி உரம்குன்றி ஓய்ந்த தமிழர்க்கு விழிப்புணர்ச்சியை அளிக்கும் வீரக் கவிதைகளையும் பாடியுள்ளார். மலையாள நாட்டில் நிகழ்ந்து வந்த மருமக்கள் வழிமான்மியம் என்னும் மாபெரும் சமூகக் கொடுமையை வேரோடு நீங்கிய பெருமை கவிமணியின் பாடலுக்குண்டு. அதாவது கணவனின் மரணத்திற்கு பின்பு மனைவிக்கு சேரவேண்டிய சொத்து, பொருள் யாவும் கணவனின் சகோதரியின் மூத்தமகனுக்கே சேரும் உரிமை இருந்து வந்தது. இதனால் கணவனைப் பிரிந்த மனைவியின் குடும்பம் சீர் அலைந்து போயின. இதனை மக்களின் உதவியோடு நீக்கியவர் கவிமணி அவர்கள். இச்செய்தியை 'மருமக்கள் வழிமான்மியம்'



என்னும் நூலில் காணலாம். தேசிகவிநாயகம்பிள்ளை 1931 ஆண்டில் ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். யோகி. ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதிய கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை வரலாறு, வித்துவான் செ. சதாசிவம் எழுதிய கவிமணி வரலாறு, கவிமணிமலர், கவிமணி நூற்றாண்டு விழாமலர் போன்ற நூல்களின் இவரின் அற்புதமான வாழ்க்கை வரலாறு விரிவாக இடம்பெற்றுள்ளது. சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 24.12.1940 ஆம் திகதி அறிஞர் பெருமான் உமாமகேசுவரனார் தலைமையில் தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. அன்றைய விழாவில் 'கவிமணி' பட்டமும் வழங்கப்பெற்றது. 11.05.1943 ஆம் திகதி ஆத்தங்குடியில் கவிமணிக்கு பாராட்டு விழா நிகழ்ந்தது. இதில் செட்டிநாட்டரசர் ராஜா பேர் அண்ணாமலை செட்டியார் சிறப்பு சொற்பொழிப்பு ஆற்றி பொன்னாடை போர்த்தும் தங்கப்பரிசும் அளித்துள்ளார். தான் பெற்ற பரிசினை திருவி தாங்குகூர் பல்கலைகழகத்திற்கு அன்பளிப்பு செய்து பி.எ. வகுப்பில் தமிழில் முதல் மதிப்பெண் பெறும் மாணவனுக்கு வட்டியை பரிசலாக பெற அறங்கட்டளையை எழுதியுள்ளார். இப்பரிசு இவரின் தாயார் ஆதிலட்சுமி அம்மையாரின் நினைவாக வழங்கப்படுகின்றது.

திருவனந்தபுரம் நீதிபதி கே.ஜீ சேவியர், எஸ் வையாபுரிப்பிள்ளை, இசையரசு தி. இலட்சுமணபிள்ளை, பண்டிதர் முத்துராப்பிள்ளை, ரசிகமணி டி.கே. சிதம்பரநாதமுதலியார், கவியோகி சுத்தானந்தபாரதியார், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், ராஜா சேர் அண்ணாமலை செட்டியார் போன்ற தமிழ் பெரியாருடன் நெருங்கிய நட்பினைக் கொண்டவர். திருவனந்தபுரம் திருச்சி ஆகிய ஒலிபரப்பு நிலையத்தில் இவரின் பேட்டிகள் இடம்பெற்றுள்ளன. திருவிதாங்கூரில் மதுக்கடைகளை முடிவித்த பெருமை இவருக்கு உண்டு. 1948 ஆண்டு நாகர் கோவிலில் நடைபெற்ற மூன்றாவது தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் கலந்து கவிமணி சிறப்பித்துள்ளார். உயர்ந்த உள்ளத்தோடு செய்த இவரின் ஒப்பற்ற பணி மக்கள் மத்தியில் நன்மதிப்பினைப் பெற்றது என்பதில் ஐயமில்லை. இவரின் நினைவுநாளை நாம் போற்றுவதோடு அவரின் ஆக்க நூல்களையும் பெற்று அவர் காட்டிய நற்பாதையை நாமும் போற்றி ஒழுகினால் மிக்க பயன் உண்டு. இவர் காட்டிய நற்பாதையை நாமும் போற்றி ஒழுகினால் மிக்க பயன் உண்டு. இவர் பாடிய கவிதைகள் எல்லாம் மிக்க சுவையினைக் கொண்டதாகும். நல்கருத்துக்களையும் உள்ளடக்கியுள்ளது.

**பருவமழை பொய்யாது பெய்ய**
**வேண்டும்**
**பயிர்களெல்லாம் செழித்தோங்கி**
**வளரவேண்டும்**
**தருமநெறி தவறாது தழைக்க**
**வேண்டும்**
**சாதிமதச் சண்டையெல்லாம்**
**ஒழியவேண்டும்**

இது கவிமணியின் பாடலாகும்.

இதன் வாயிலாக இவரின் உயர்ந்த மனநிலையைக் காணலாம். இது இவரின் மாரிமழை கவிதையில் ஒரு துளியாகும். இவரின் பாடல்கள் தெவிட்டாத அமிர்தம் போன்றது.


ADROIT HOME INSPECTION
Qualified, Professional Inspector
Home Renovation
& Preventive
Maintenance Tips
Call : Siva
416-875-6474
www.adroithomeins.com




## கனடாவில் கால் நூற்றாண்டு

1986க்கு முன் கனடாவுக்கு வந்தவர்கள் தமது அனுபவங்களையும், தாம் எதிர்நோக்கிய இன்னல்களையும் பகிர்ந்து கொள்ளும் நோக்கில் ஒரு நூலாக வெளியிட எண்ணியுள்ளோம். கட்டுரைகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்படலாம். மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும். **416.284.9158**
**416.888.8950 (Cell)**

# குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பது சம்பந்தமாக பெற்றோருக்கான சில முக்கிய ஆலோசனைகள்



சிறந்த பெற்றோராக வாழ வேண்டுமானால் உங்கள் கடமை என்பது குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பது தான். அதைத் தவிர வேறு எதுவும் இல்லை. குழந்தைகளோடு இருக்கின்ற நேரங்களில் பெற்றார் உண்மையாகவே மகிழ்ச்சியாக இருக்கின்றார்களா? குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக இருப்பதாக பேரம் பேசிவிட்டு அதேநேரத்தில் தமது அன்றாட வேலைகளை முழுமூச்சில் கவனிக்கிறார்களா? கடைகளுக்குச் செல்வது, உறங்குவது அடுத்த வீட்டுப் பெண்களுடன் அரட்டை அடிப்பது, வீட்டைப் பராமரிப்பது ஆகிய வேலைகளில் அதிக நேரத்தைச் செலவிடுகிறார்களா?

**- ஆர்.எஸ். சேவியர் -**

இவை போன்ற செயல்களில் பெற்றோர் ஈடுபடும் போது குழந்தைகளின் மீது தமது தனிப்பட்ட கவனத்தைச் செலுத்த முடியாமல் போய்விடும் என்பதும் உண்மைதான். குழந்தைகளிடம் தங்கள் அன்பை எத்தனை பெற்றோர் அழகாக வெளிப்படுத்தி இருக்கிறார்கள்? உங்கள் வார்த்தைகளைக் கேட்டு நடந்ததற்காக உங்கள் குழந்தைகளைப் பாராட்டி இருக்கிறீர்களா?

உங்கள் குழந்தைகளின் நல்ல நடத்தையை எப்போது மன மகிழ்வோடு ஒப்புக்கொண்டீர்கள் அல்லது பெருமைப்பட்டீர்கள் எனக் கூறமுடியுமா? உங்கள் குழந்தை ஆர்வமாக கதை சொல்லும் போது அதை உற்றுக் கேட்டு மகிழ்ந்தீர்களா? எல்லாவற்றையும் விட எமக்கு நீங்கள் தான் மிகவும் முக்கியம் என்பதை அந்தப் பிஞ்சு உள்ளங்களுக்கு புரிய வைக்க முயற்சித்தீர்களா? இவை போன்ற மிக எளிமையான ஆனால் அடிப்படையான கேள்விகளுக்கு சரியான விடை தெரியுமானால் நீங்கள் உங்கள் குழந்தைகளை மிக நல்ல முறையில் வளர்க்கலாம். மிகச் சிறந்த பெற்றோராக மற்றவர்களால் பாராட்டப்படலாம். குழந்தைகள் பூக்களை விட மென்மையானவர்கள். அவர்களுடன் நீங்கள் இருக்கும் போது உங்களின் சிறிய அலட்சியமும் தவறும் அவர்களை முள்ளாக உறுத்தும், மனதில் வடுவாகத் தங்கி கசப்பான உணர்வை எப்போதும் ஏற்படுத்தும். இதைத் தடுக்கத்தான் பெற்றோர்களுக்கு இந்த ஆலோசனைகள் தேவைப்படுகின்றன. இதன் மூலமாகப் பல பெற்றோர்கள் தங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ள முடியும். தவறுகள் தவிர்க்கும் போது குழந்தைகளை மகிழ்ச்சியோடு நல்ல முறையில் வளர்க்கவும் முடியும்.

'எந்தக் குழந்தையும், நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே - அது
நல்லவனாவதும் தீயவனாவதும்
அன்னை வளர்ப்பதிலே'

என்ற ஒரு பாடலும் உண்டு. இன்றைய குழந்தைகளே நாளைய சமுதாயத்தின் தூண்கள். அவர்கள் நல்ல முறையில் வளர்க்கப்படுதல் மிக அவசியம் என்பதை சகல பெற்றோர்களும் புரிந்து பொறுப்புடன் செயற்பட்டால் வீட்டிற்கும், நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் பெருமை தரும் செயல் என உறுதியாக நம்பலாம்.

---

215

நகைச்சுவைத் தொடர்

## ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்

அன்னம்மாக்கா தெரியாத பெயரை வாசிச்சு கஸ்டப்படுறியள் என்றபடி முருகேசரைப்பார்க்க.. முருகேசர் உலகரைப்பார்த்துச் சிரித்தார்.

காலங்கள் மாறும் - காட்சிகள் மாறும்




நகரசபை - மாகாணசபை - மத்தியஅரசு என விலாவாரியாக விளங்கப்படுத்தியபோது ரஜினியின் மகள்..சௌந்தர்யாவின்...
காலங்கள் காட்சிகள் மாறும்
ஆனால் சிலர் என்றும் மாறுவதேயில்லை..

அப்ப உலகண்ணை செக்கண்ட். உலகண்ணை நாங்கள் ஸ்ரீபன் காப்பருக்கு வோட்போடத்தேவையில்லையோ என செக்கண்ட்புளோர் செல்லம்மா கேட்டு உலகர் பேசத்தொடங்கி உருத்திர தாண்டவமாடி ஒருவாரம் கூட ஆகவில்லை அதற்கிடையில் லெக்சனும் முடிந்துவிட்டது என்னெண்டு தெரியேல்ல முருகேசண்ணை.. லெக்சன் கேக்கிற.. சிலபேற்றை பேர் வாசிக்கேலாமல் கிடக்கு என ஆட்டிலறி அன்னம்மா சொல்லி முடிக்க முதலே செக்கண்ட்புளோர் செல்லம்மா.. சொன்னா அதுதானே தமிழ் ஆக்கள் கேக்கினம் அவைக்குப்போடன்.

திருமண விமர்சனம் பார்த்துவிட்டு ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவும்.. இன்னும் மாநகரசபை லெக்சனுக்கு..விளக்கம் தெரியாமல் இருக்கின்றனர். செக்கண்ட்புளோர் செல்லம்மாவைப்போல் ஆட்டிலறி அன்னம்மாவைப்போல் வாழ்ந்த நாட்டில் சரி வந்த நாட்டில் என்ன நடக்கிறதென்று தெரியாமல் பலர் இருக்கின்றனர்..



காக்க - காக்க கதிர்வேல் காக்க

நவராத்திரி விழாவும் பிள்ளைகளுக்கு ஏடுதொடக்குதலும் கலகலப்பாக முடிந்துவிட்டது. இனி அடுத்தது - தீபாவளி,



கந்தசஸ்டி.



கந்தசஸ்டி விரதம் இஞ்சை கனபேர் பிடிக்கத் தேவையில்லை என செக்கண்ட் புளோர் செல்லம்மா உலகரைக் கடைக்கண்ணால் பார்த்தபடி சொன்னா.



காலையில் ஒரு துண்டு தவிட்டுப்பாண் பட்டர் பூசாமல் என ஆரம்பித்து
உப்புச்சப்பில்லாத சாப்பாடு.
சாப்பிடும் வயிற்றை சரவணன் காக்க..



வழமைபோல தீபாவளி மலிவு விற்பனை.. அது ஒருபுறம்
கொலோவின் முகமூடிகள் ஒருபுறம்




விநாயகசதுர்த்தி தினத்தில் இந்தியாவில் பிள்ளையாரை கடலில் போட்டு உடைக்கிறார்களே..மூடநம்பிக்கை கனடாக்காரர் என்ன நினைப்பினமெண்டு கேட்டு செக்கண்ட் புளோர் செல்லம்மாவை நளினம் செய்தா ஆட்டிலறி அன்னம்மா.

உலகில் விவசாயநிலங்கள்.. குண்டும் குழியும் ஒருபுறமும்.. புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளால் விவசாயம் செய்யமுடியாத நிலம் எத்தனை ஏக்கர்.





அப்படியிருக்க ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட பூசனிக்காய்கள் ஒக்ரோபர் 31 திகதி முடிந்ததும் வீதிக்கு வந்து.. குப்பைக்குப் போகின்றன அது மாத்திரம் விஞ்ஞான உலகத்திலை நம்பலாம்.
பிள்ளையார் உடைக்கிறதுதான் என..முணுமுணுத்தா.. செக்கண்ட்புளோர் செல்லம்மா.

'ஊரோடு ஒத்துவாழ்'
when in Rome, do as the Romans do

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com அல்லது www.tamilexpress.net

# முழு மதியும் தொழு பிறையும்

உலகின் இரு பெருஞ்சுடர்களாகும் சூரியன் வெம்மை உடையது, சந்திரன் குளிர்ச்சியுடையது. சூரியன் மாறுபாடின்றி ஒரே மாதிரியாக இருப்பது. ஆனால் சந்திரன் தேய்ந்தும் வளர்ந்தும் காணப்படுவது. அது தேய்பிறை, வளர்பிறை எனப்படுகின்றது. முழுநிலவு என்ற நிலையிலிருந்து தேய்ந்து ஒன்றுமில்லாமல் போய் பின்பு படிப்படியாக வளர்ந்து முழு நிலவு ஆகுகின்றது. அது பூரண சந்திரன் எனப்படும். சந்திரன் ஒளி உமிழும் ஒழுங்கான வடிவம் உடையது அல்ல என்பது வள்ளுவர் கருத்து இதனாற்றான் போலும்; 'மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல், காதலை வாழி மதி' என்ற குறள் பிறந்திருக்க வேண்டும். தேய்தல், வளர்தல் அத்துடன் களங்கமும் மதிக்கு உண்டு என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது. மதியில் மனிதன் நடந்தது புதிய வரலாறு.

திரிசடையில் திங்களை சூடியுள்ளான் இறைவன். அத்துடன் கங்கையையும், பாம்பையும் அணிந்துள்ளான். சடையில் அவன் அணிந்துள்ளது பிறைச் சந்திரன். அது குறைநிலவு, முற்றா நிலவு. சிவபெருமான் தலையிலுள்ள சந்திரன் மட்டுமே என்றும் வளர்ச்சியின்றி பிறையாகவே இருக்கின்றான் என்பதற்கு குமர குருபரர் பின்வரும் பாடலில் விடையளித்துள்ளார். இப்பாடல் மும்மணிக்கோவையில் உள்ளது.

**மன்றுடையான் செஞ்சடை மேல்வாளரவுக் உள்ளஞ்சி**
**என்றும் மதி தேய்ந்தே இருக்குமால் - நின்று தவம்**
**செய்யும் முனிவோர் காமத் தீர்ப்பிணிக்கு அஞ்சித் தமது**
**பொய்யுடலை வாட்டு மாப் போல**



தவம் செய்யும் முனிவர்கள் காமம் என்னும் தீமைக்கு அஞ்சியே தமது உடலை வருத்துவது போல சிவன் தலையிலுள்ள சந்திரனும் அங்குள்ள நாகத்திற்கு அஞ்சி அது விழுங்கி விடும் என்பதால் வளராமல் பிறையாகவே இருக்கின்றதாம்.

சந்திரன் பிறையாக இருப்பதற்கு இன்னுமொரு காரணத்தைக் காட்டுவார் வேறொரு புலவர். சிவனுக்கு அருகே என்றும் அமர்ந்திருக்கும் உமையின் முகம் மிக்க அழகுடையது. முழு நிலவை விட ஒளிமிக்கது. இதனைக் கண்டு அதனோடு போட்டி இடமுடியாது என்று உணர்ந்தே

**ஒன்றும் உட்கறுப்பினோடு ஒளியின் வாள் உரீஇ**
**தன் தனி முகத்தினால் என்னைத் தாழ்த்து அற**
**வென்றவள் துணைவனை இன்று வெல்குவேன்**
**என்றது போல வந்து எழுந்தது இந்துவே**

இதற்கு எதிர்மாறான கருத்தை வெண்ணிலாவே என்ற பாடலில் பாரதியார் பகர்ந்துள்ளார்.

**மாதர் முகத்தினை நினைக்கிணை கூறுவர்**
**வெண்ணிலாவே அஃது**
**வயதிற் கவலையின் நோவிற் கெடுவது**
**வெண்ணிலாவே**

சந்திரன் வளர்ச்சி பெறாமல் என்றும் பிறையாகவே இருக்கின்றது என்பர். இதுதான் தண்டியலங்காரப் பாடல்.

**இன்று உமையாள் மாசிலா வான்முகம் கண்டு ஏக்கற்றோ**
**அன்றி விட அரவை அஞ்சியோ - கொன்றை**
**உளராவாரோடும் ஒளிர் சடையீர் சென்னி**
**வளராவாறு என்றோ மதி**

முழுமதிக்கு தனிச்சிறப்பு உண்டு. அது நிறைமதி எனப்படும். உலகம் முழுவதும் குளிர் நிலவில் குளிக்கும், திளைக்கும். அது கண்டு கடல் பொங்கும், காதலர் உள்ளமும் பொங்கி இன்பக் களிப்பில் மூழ்கும். வெண்ணிலவு பிரிவுத் துன்பத்தை பெரிதுபடுத்துவது. காதலனை விட்டுப்பிரிந்த காதலிக்கு சந்திரன் தோன்றிவிட்டால் துயர் அளவு கடந்து விடும். இது எங்கும் காதலர்க்கு நிகழ்வதேயாம். நந்திக்கலம்பகத்தில் வரும்பாடல் கருத்து இது. பெண்ணில்லா ஊரில் பிறந்தாரைப் போல வரும் வெண்ணிலாவே இந்த வேகம் உனக்காகாதே என்று பேசுவாள். நீ பிறந்த ஊரில் பெண்கள் பிறக்கவில்லை போலும். ஏனெனில் ஒரு பெண்ணாவது உனது ஊரில் இருந்திருந்தால் பிரிவாற்றாது பெண்மனம் படும் துயரத்தை நீ அறிந்திருப்பாய் என்று கடிந்துரைத்திருப்பாள்.

முழு நிலவிற்கும் பெண்கள் முகத்திற்கும் எப்பொழுதும் போட்டி இருந்தேயுள்ளது. சீதையின் முகஅழகு நிலவை வென்றுவிட்டது. எனவே அவளது கணவனான இராமனை ஒளியாகிய வாளினால் வென்று பழி தீர்த்துக் கொள்வேன் என்று சந்திரன் எழுந்ததாக கம்பர் கவியில் சித்தரித்துள்ளார்.

வெண்நிலவு வரவு கண்டு குமுதமலர் மலரும்தான். மதியை தலையில் சூடிய இறைவன் முற்றா வெண்டிங்கள் முதல்வன் எனப்போற்றப்படுகின்றான். இஸ்லாமியர்கள் பிறையை போற்றுகின்றார்கள். பிறை கண்டே ரம்ழான் நோன்பு தொடங்குகிறது. மூன்றாம் பிறை காண்பதற்கு முந்தியடிப்பவர்களும் உண்டு. முஸ்லீம் நாடுகள் தமது கொடிகளில் பிறையைப் பொறித்துள்ளன. எனவே கறைக்கண்டன் தலையில் விளங்கும் பிறை குறையற்ற நிறைவுடையது என்றே கொள்ள வேண்டும்.

**பிறையணி முடியினானே பிஞ்ஞகா பெண்ணோர் பாகா**
**மறைவலா இறைவா வண்டார் கொன்றையா வாம தேவா**
**அறைகழலமர ரேத்து மணியனா மலையுளானே**
**இறைவனே யுன்னை யல்லாலியாது நான் நினைவிலேனே.**



**நா. க. சிவராமலிங்கம்**

# வணக்கத்துக்குரியவர்கள்




நாலும் தெரிந்தாலும்
நாலு பேர் முன்னிலையில்
இடம் அறிந்து
வேளை அறிந்து
சபை அறிந்து
தன்னை அறிந்து
பிறர் குறிப்பறிந்து
உறவாடும் உறவுகள்
வணக்கத்துக்குரியன

பிறர்க்கு செய்த உதவியை
அன்றே மறந்துவிட்டு
பிறர் செய்த உதவியை
மறவாது மனதில் இருத்தி
காலம் வரும் போது
தவறாது உதவும் உறவுகள்
வணக்கத்துக்குரியன

பொருட்களை தராசில் வைத்து
சமப்படுத்துவது போல்
உறவுகளை தராசில்
நிறுத்துப்பாராது
உறவோடு பழகும்
உறவுகள்
வணக்கத்துக்குரியன

நான் செய்யவேண்டியது என்ன?
என்பதே என் கேள்வி
என்று
தானே தன் பங்கை அறிந்து
தன்னைத்தானே சீர் செய்து
உறவாடும் உறவுகள்
வணக்கத்துக்குரியன

மற்றவர்கள் தம் பங்கை
செய்வார்கள் என்று
அவர்களை சுயமாக
இயங்க விட்டு
ஆலோசனைக்காக நாடி வரும்போது
தன் கருத்தைககூறும்
இங்கிதமுள்ள உறவுகள்
வணக்கத்துக்குரியன

பிறர் செய்வதை
நாளும் நாளும்
தன் தலைக்குள் போட்டு
மற்றவர் பற்றி அறியும் வேட்கையில்
நாளும் நாளும்
கேள்விக்கணைகளால்
துளைப்பது
என் வேலை அல்ல என்று
தன்னை அறிய
தனக்குத்தானே கேள்விகேட்டு
தன்னை அறிய முற்படும்
உறவுகள்
வணக்கத்துக்குரியன

மனித உறவுகளில் குற்றம் குறைகள்
மலிந்திருப்பது
சகசம் என்றே
உறவை நினைத்து
குறைகளை மறந்து
முன் மாதிரியாக
பழகும் உறவுகள்
என்றும் வணக்கத்துக்குரியன

---ரஞ்சி கதிர்---




## Always made with a freshly cracked Canada Grade A egg.

The one and only Egg McMuffin®. Try it with a premium roast coffee for the perfect start to your day.

**NOW SERVING BREAKFAST UNTIL 11:00am EVERY DAY at the following locations:**

Kingston Rd. & Lawrence Ave.
Markham Rd. and Progress Ave.
Markham Rd. and Finch Ave.
Malvern Town Centre
Port Union and Kingston Rd.
Walmart - Milner Ave.
Walmart - Steeles Ave.

©2010 McDonald's

i'm lovin' it®



# விசுவாசம் - வாழ்வெனும் பந்தாட்டம்

வாழ்வெனும் பந்தாட்டத்தில் நிச்சயம் வெற்றி ஈட்டுவேன் எனும் நம்பிக்கையுடன் வரையறுக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு அமைய நம்பிக்கையுடன் நான் விளையாடு வதால் தோல்வியை பற்றிய பயமே எனக்கு இல்லை.

“நான் நிச்சயம் வெற்றியடைவேன்” எனும் விசுவாசத்துடன்தான் வாழ்வெனும் பந்தயத்தில் நீ விளையாடுகிறாய். ஆனால் உன்னால் நிச்சயம் வெற்றியடைய முடியுமா? எவருடன் சேர்ந்து, எவ்விதக் கோட்பாடுகளுக்கமைய நீ ஆடுகிறாய் எனும் விவரங்கள் முதலில் உனக்குத் தெரிந்திருக்க வேண்டும். வெற்றியீட்டுவது தான் உனது குறிக்கோள். ஆனால் அத்துடன் சில சமயம் தவறாக ஆடி வெளியேற்றவும் படலாம். சறுக்கியும் விழலாம் என்பதையும் நீ மறக்கக் கூடாது. நீ நிச்சயம் தோல்வி அடையப்போவதில்லை என்பதே இதன் அர்த்தம். அரங்கில் உன்னைப்போல் பலர் விளையாடுகின்றார்கள். அவர்களின் நோக்கமும் வெற்றியீட்டுவது தான்.

ஆச்சரியப்படாதே! மற்ற வீரர்கள் உன்னை உதைத்துத் தள்ளி விழுத்தி உன்னிடமிருந்து பந்தைப் பறிக்க எத்தனிப்பார்கள். நீ ஆட்டம் இழந்து வெளியேற்றப்பட்டாலும் கலங்கி வருத்தப் படாதே. ஆட்டத்தின் விதிமுறைக்கிணங்க விளையாடாமல், எதிரிகளை ஏமாற்றலாம் எனச் சிலர் நினைப்பார்கள். மைதானத்திலுள்ள சகல வீரர்களுக்கும் வெற்றி அடைவதற்கு வேண்டிய திறமையும்




சந்தர்ப்பங்களும் உன்னைப்போலவே உண்டு. ஒவ்வொருவரும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு எவ்வாறு தம் திறமைகளை உபயோகிக்கிறார்கள் என்பது ஆட்டத்தின் விதிமுறைகளைப்பற்றிய அவர்களின் அறிவைப் பிரதிபலிக்கின்றது. அவர்களுக்கு நீ இடம் கொடுத்தாலன்றி அவர்கள் உன்னைத் தாக்கித் தள்ளிக் கீழே விழுத்த முடியாது. நீ அனுமதிக்காமல் அவர்களால் உன்னை அடித்துத் தாக்க முடியாது. வெற்றியடைய வேண்டும் எனும் குறிக்கோளுடன் நீ முயற்சிக்கும்போது ஒருவராலும் உன்னை வென்றிட முடியாது.

வாழ்வெனும் விளையாட்டின் விதிமுறைகள் மிகச் சுலபமானவை. சத்தியத்தைக் கடைப் பிடித்து எப்பொழுதும் உண்மையையே பேசு. எந்த நேரத்திலும் எவருக்கும் எதற்கும் பயப்படாமலிரு. உன் பிரக்ஞையின் எண்ண ஓட்டங்களைக் கண் காணித்து எப்பொழுதும் நன்மை பயக்கக் கூடியவற்றைப் பற்றிச் சிந்திக்கப் பழகு! நீ கை வைக்கும் அனைத்தையும் விரும்பி ஆர்வத்துடன் செய்! நீ விரும்பியதைப் பெற்றிட உனக்குத் தகுதியில்லை என நினைத்து ஒன்றையும் வேண்டாம் என விலக்கி விடாதே. உனது குறிக்கோளை அடைந்திட இவ்வாறு உன் சுயத்தையும் சக்தியையும் நேரத்தையும் செலவழித்து முயற்சித்தாயானால் உனது வெற்றி நிச்சயம்.

பிறரை ஏமாற்றியோ, கைக்கூலி கொடுத்தோதான் உனது குறிக்கோளை வென்றெடுக்கலாம் என இன்றுவரை நீ நினைத்திருக்கலாம். இன்றுமுதல் வாழ்வின் வரைமுறைகளை சரிவரக் கடைப்பிடித்துப் பார்!

**இன்றுமுதல் வாழ்வின் விதிமுறைகளைக் கடைப்பிடித்து விளையாடி இனி சகலதிலும் நான் வெற்றி காணப்போகிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 181

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி










